வஞ்சனையன்றித்தாசி யேகவாலயமுளோர்
வங்குபரி சாரகனவன்
வயர்ந்துநித்திரைசெய்ய பக்தனோர்புறமிருந்து
வம்பிகையைத் துதித்திருக்கக்
கொஞ்சமேனுமிதனை யறியாமற்கதவடைத்துக்
கோவில்கார்ப் போர்கள்செல்லக்
கோணுமலீஸ்வரியும் வஸ்திரபூஸணமணிந்துக்
கொலுமடந்தை போலிவ்விடஞ்

சஞ்சலத்துடன்சதா தியானிக்கும்பக்தனிடந்
    தான்வந்து நின்றுவாயைத்
தானுந்திறவெனவிவன் மறுக்கத்துயில்பயனைக்கிட்டி
    தன்வாய்த்தம்பல மீந்தபின்
விஞ்சையளித்தகலவிவ னெழுந்துகவிபாடினன்
    வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
    வீரராகவ மெய்யனே. (63)

சதுநிகழ்ந்திடவிவர்க்குக் காளியெனத்திருநாம
    மிருக்கத்தன் வாக்கிற்கவியை
யிசைந்துசெயவிவர்சொற் போலாகவதைக்கண்டவர்
    ளிவர்காள மேகமென்ன
நீதியறிந்தப்பதியுளோர் பயந்திருக்கத்தினம்
    நேர்பெண்க ளிவரைக்கண்டு
நிரைந்துபெருக்கும் விளக்கமாறதுவுஞ்செல்லுமென
    நேர்ந்துரைக்க விவர்கேட்டபின்
சாதகமுடன்பெருக்கப் பெருக்கத்தேய்ந்திடுமென்ன
    தானுரைத்து செல்லவாங்கு
தாவியதுபோலிந்நாள் வரையிருக்கதாசியிடம்
    தான்கிழக்கு தேயஞ்சென்று
வேதனையுறுமல்வருகிறே னென்றங்குரைத்தனர்
    வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
    வீரராகவ மெய்யனே. (64)

செப்பியதைக்கேட்டவளுந் தரளமுண்டங்கெனக்கு
    தேவரீர் வாங்கிவாருந்
திவ்யகுணசுமுகரேவென் றுரைக்கவவர்கேட்டுத்
    திருமல்ராயன் பட்டிணம்

கப்புமாவணம்வந்து வீற்றிருந்துதாம்பூலங்
        காசிந்து வாங்கிதானுங்
கனிவாயிற்கொண்டிருக்கவ் வூரரசன்கவியுமதி
        மதுரக்கவியெனச் சொல்பவன்
ஒப்பிச்சிவிகையிலேறி விருதுகள்கூறிவர
        வுவந்துகண் டோர்கள்நிற்க
வுறுதியுடனிவரிருக்கப் பார்த்துறுமியவனுமங்
        கோகோநீரா ரென்னவும்
விப்பிரருங்காளமேகப் புலவரென்றனர்
        வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
        வீரராகவ மெய்யனே. (65)

சொல்லக்கேட்டக்கவிஞனதி மதுரக்கவியுமெனச்
        சொலியரசன் சபையிற்சென்று
துடுக்கன்செய்யபகீர்த்தியை யுரைத்தங்கழைக்கச்சே
        தூதரைவிடுத்த பின்னற் [வ
நல்லவையையொருங்கு செய்திருக்கச்சேவகர்
        நன்கிவரை வந்தழைக்க
நான்வரேனென் றுசொலச் சென்றுமொழிந்திடவே
        நாடியமைச்சனை விடுக்க [ந்தன்
அல்லலன்றியிவன்வந்து வாருமென்றங்சறையவிவ
        ரானபல்ல க்குமேள
மதுவும்வரவேண்டுமென வரவிருந்துசபைவருக
        வரசனழை யாதிருக்க
வில்லங்கமறிந்துகவி செய்தங்காசனமுறவும்
        வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
        வீரராகவ மெய்யனே. (66)

கிட்டிமந்திரசக்தியாலிவ னிச்சிறப்பையுங்
கிளம்பிச்செய் திருக்கவேண்டுங்
கிருபையறிந்தங்குளோ ரறியாமற்கவியும்வரக்
கீர்த்தியுடன் கடைவீதியில்
அட்டியில்லாதிருந்ததை யுரையுமெனக்கேட்க
வயலகனி யாவரேனும்
வரசரேறுமதுகவிராயர்க் கெழுந்துபசரித்த
லாகாதிங்கிவர்க் கியாவும்
திட்டமுடன்றெரியிலதை யறியவேண்டுமெனவுஞ்
செப்புமட் டாவதானஞ்
சீர்பெருந்தசாவதானஞ் சோடசவதானந்
தெரியுமெனச் சிறுபிள்ளைகள்
வெட்டவெளியாய்ச்செய்வர் மேலுரையுமென்றனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (67)

அதனைக்கேட்டதிமதுரக் கவிராயன்சினங்கொண்டிங்
கனுகிமேற் றெரியத்தாமு
மறியவதையுரையுமென காளமேகப்புலவ
ரரிகண்டமெம கண்டமுஞ்
சதிருடனிருக்கவிதைச் செய்யவேண்டுமெனவுந்
தார்மன்னன் கேட்டுதாமே
சார்ந்துசெயவேண்டுமெதின் விவரமுறையெனவிவருஞ்
சாருங்குழி நிறையோர்கஜம்
இதமுடனிருப்புக்கொப் பரையிருத்தித்தைலமு
மிசைபெற விடுத்துத்தீயை
யெறிக்கவிருப்புத்தம்பம் நடுநிருத்திப்பலகைதனி
லிவனிருக்கக் கரஞ்சங்கிலி

விதமிட்டுத்திக்குகரிக்கைக் கொடுத்துக்கவிசொலவும்
    வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
    வீரராகவ மெய்யனே. (48)

அச்சபையிலரசன்முதலி யாவருங்கேட்டவர்க
    ளரிகண்ட மெமகண்டமு
மாகுமீதென்றுரைத்திவரைச் செய்யும்படியாவுஞ்செ
    தறுபதுதண்டிகைப் புலவரும் [ய்
உச்சிதமுடன்சூழ்ந் திருக்கவிவர்மேலேறி
    யோங்குந் திருவேங்கடவனை
யோதித்துதித்திடவவரு முகந்தருளிசெல்லவிங்
    குற்றவர்க டாறுமாறுய்
இச்சையுடன்சமிசை யீந்திடவுமிவர்கவிபாட
    வெல்லோரும் வியந்தறிந்துவாங்
கிறைவிமுன்பனிபோலிவர் செய்திறங்கிடவரச
    னேற்றுச் சன்மானமீயா
விச்சைகொண்டப்பதிமண் யாரிபெயப்பாடினர்
    வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
    வீரராகவ மெய்யனே. (69)

வில்லிபுத்தூராழ்வார் சரித்திரம்.

திருவளரும்பெண்ணைசனி யூருரைவைணவகுலத்
    திகழ்வீரராக வச்சார்யர்
சென்றிலகும்வில்லிபுத்தூ ரிருக்கவிவருக்கிரு
    செல்வருதித்திட ஜேஷ்டர்க்குக்
கருதித்திருநாமம்வில்லி புத்தூராழ்வாரெனக்
    கதித்திளைஞரோ டிவர்களுங்

காவுமீரிருமறையு முத்தமிழுங்கார்யரிடங்
கற்றுணரவிவர் கீர்த்திகள்
பெருகியுலகெங்கும்பரவும் படியொலிக்கப்பின்
பேணிமணஞ் செய்துகூடிப்
பெருமையுடன்வாழ்கக் கொங்குலவுமாபதியரசன்
பெருகுமா பாரதஞ்செய
விரகமித்திப்பதியிலி யாருளாரென்றனன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலெயிற்றுயிலவெழுக் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (70)

அம்மொழிகேட்டறிந்துசிலர் வில்லியுடனிளைஞருள
ரவர்களா லாகுமென்றங்
கறையமறையவர்குலத்து விதவையையனுப்பியவ
ரிருமனைவியைக் கலைத்துச்
செம்மையுடனெனதுநீதிக் கிசையவரும்படிச்
செய்யெனவங் கனுப்பிவிட்டுத்
தீவிரம்மதுரைபாண்டிய னிடம்போயிதைச்சொலத்
சினந்தவர்க ளவிடம்வரிலோ
தம்மைவரச்சொல்லுமென வுரைக்கவரசனுஞ்செலத்
தாவியிருமனை வியர்க்குக்
தாக்கியிருபிறப்பாளர் முண்டைசென்றுட்பகையைத்
தான்செய்து செலவிருவரும்
விம்மியவர்செல்வம்பாண்டி யன்பிறித்துத்தரவருக
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலெயிற்றுயிலவெழுக் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே, (71)

வந்தவர்கடம்முடைய வழக்கைச்சொலித்தீருமெனு
வங்குரைக்கக் கொங்கர்கோனல்
வாருமிதுசெல்லுமென வவர்கள்வரப்பார்த்திறைவன்
வதிமகிழ்வு கொண்டுகூர்வான்
சிந்தைகளித்திருவர் மாபாரதம்பாடிவரத்
தெரிந்துநும் பொருள்பிறிக்கச்
செய்வேனியானென்றறைய கேட்டுபாரதஞ்செய்து
தீட்டிவந்துரை க்கக்கோனும்
சந்தோஷமுற்றுநமதிட மியாதுவேண்டுமெனச்
சார்வில்லி புத்தூரர்தாஞ்
சார்ந்துலகிற்கவிஞரென வெவர்வரினுங்கவிதைசொல
தான்றேர்ப்பவர் காதையான்
விந்தையுடனறுக்கத் துறடையுமெனக்கேட்டனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (72)

தம்பிகுணமறிந்திவர்க்குச் சன்மானந்தரவிருதைத்
தாவியிவர் பெற்றுவாழ்ந்துத்
தானிருக்கவிப்பிரகுலத்து முண்டையும்வந்து
தான்கலைத்த துரைத்துசேர்த்து
தம்புடனிருக்கவில்லி புத்தூரரிடஞ்
சென்றெங்கும் பரிசுபெற்றச்
சிங்கமெனவநந்தகவி புலவன்வரப்பரிக்ஷித்துச்
செய்கவிக்குச் சந்தமீய
சம்பிரமதாய்ச்செய்யப் பிழைகண்டுகாதலுக்குத்
தானேகவநந்தக் கவிஞன்
ஞானந்துணிந்தாதிசேடன் றனக்குச்செவியுமில்லை
தானறியு மென்னுநவில

வெம்பிச்சொலுமிவன் சமத்தையறிந்தங்குவிடுத்தனர்
    வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
    வீரராகவ மெய்யனே. (73)

ஈதுநிகழ்ந்தங்கிருக்க வடதிசைக்கச்சிநக
    ரிருக்கும்வைணவ ரொருவரு
மேகியாத்திரைவந்து வில்லிநகரிறைவனை
    யேற்றியவர் சார்வபௌமர்
ஓதரியசிறப்பைக்கேட் டிவரிலமெய்திக்காண
    வுடைவாளங் கருகிருக்க
வுவந்தறிந்தீதேதுக்கெனக் கவிஞருரைபிழைகாண
    வோங்கிச்செவி கொய்வதற்கிங்
காதரமீதென்றுசொலவவர் கேட்டங்கருணைகிரி
    யதிலருணை கிரிப்புலவனு
மவணிருக்கதேவரீர் வாதுசெயவெழுந்தருள
    வாகுமோ வென்றுகேட்க
வேதனையிராமற்செல வாருமென்றழைத்தனர்
    வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுக் தருள்செய்யெனதையனே
    வீரராகவ மெய்யனே. (74)

சொல்லுரையறிந்திவரு மியாத்திரைசெல்பவண்
    கூட்டியெமை விட்டுநீருஞ்
சுகமுடன்செல்லுமென் றிவரும்புகன்றங்ககலத்
    துரைவில்நந் நாளைப்பார்த்துச்
செல்லவேசதுரங்க சேனைபலசூழ்ந்திடச்
    சீர்வழியிற் சகுனமாறாய்
சிந்திக்கச்செல்பவர்க ளுளமறிந்தங்குடன்போகத்
    திருவண்ணாமலை நகரமாள்

நல்லபிரபுடதேவனெனு மரசனிடமமைச்சர்
நாடியிதைப் போயுரைக்க
நளினமுடன்வில்லிபுத்தூ ரரும்வேந்தனிட
நற்சமுகங் கண்டுநோக்கி
வெல்இங்கவிச்சிங்கமென விருதுடன்விளங்கினர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (75)

கரியும்பரிப்பல்லக்குக் குடைசுருட்டிசாமரங்
காளாஞ்சி றுறடுமுதலாய்
கனவிருதுமன்னவர்களிடம் பெற்றிவ்வுலகெலாங்
கவிச்சக்ர வர்த்தியென்றும்
பெருகிவந்திருப்பவரைப் பார்த்தரசன்வியப்புற்று
பேணிநமஸ் கரித்துவரிசைப்
பிரபலமதாயீயப்பெற் றிங்குளபுலவனிடம்
பிரீதியுடன றர்க்கஞ்செய்யத்
தெரிந்திங்குவந்தனமென் றுரைக்கக்கேட்டிறைவனு
தியக்கங்கொள வவர்சென்றபின் [ங்
சீர்பெருகத்தமதுபுலவரைப் பார்த்துநமதுநகர்
செப்புந்துறவிக் கவிஞனு
கிரிந்துலவுமிருவரினு மெவர்திறமென்றறிந்தனன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (76)

அதனைக்கேட்டிங்குவந் திடும்வில்லியும்மருணை
கிரிப்புலவ னிருவர்தாமு
மாசுகவிப்புலவரிவர் திறமறியதெய்வச்செய
லாகுமேயன்றி யானுஞ்

சதிருடனுரைக்கத்தர மன்றெனச்சொலயிறைவன்
சார்ந்துநஞ் சேதிமையன்ன
தானுஞ்சொலுமெனவிவ னென்வலிமைசகமலையவர்ச
டானுகு மென்றுகூற
கதியறிந்தவ்வேந்தன் றுறவிக்கவிஞர்க்கிதையோதி
கருத்தியென் றுலாகிடுங்
காரியமிருக்கிலைதைக் கழருமெனவிடுக்கவிவன்
கண்டுகொண் டறுமுகர்க்கு
வீதமுடன்பூசைக்குறியன செயவும்நடுநிலையும்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழூந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (77)

வந்தவர்களுரையைக்கேட் டரசனதுபோற்செய்ய
வருணைகிரிப்புலவ னென்போன்
வைகையிருக்கவில்லிபுத்தூ ரர்க்குத்தூதனுப்ப
வரவிவரைப் பார்த்தபோர்கள்
சிந்தைகளித்தெல்லோரும் வணங்கவிவர்வீற்றிருந்து
சீர்சந்தம் பாடுமென்று
செப்பிச்சிறத்துறவிக்கவிஞன்பொறுமெனவுரைத்து
திகழ்விகட பரிமளவெனும் [த்
அந்தமுளசவிக்குமுரி யிடியைப்போற்பாடவிவ
ரடைப்பைக் காரனும்நம்பிட
மறியுங்கவியீதென்றுரைத்திட விருவர்க்கங்குசம

விந்தையுடனொருவர்கவி சொலவொருவருரைசெயவு
வேண்டியே திருவள்ளூர்வாழ் [ம்
வேலையிற்றுயிலவெழூந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (78)

அரசனுரைப்படியருணை கிரிப்புலவன்கந்தனந்
தாதிசெயவைம்பத்தொருமூன்
றுகவவன்வாய்மூடுமுன் னிவருமுரைசெய்ய
வதனைக்கண்டங் கறுமுகவனைக்
கருதிமலையைப்பார்த் திளக்துதிக்கத்திதித்தக்
கவியும்வர விவர்மயங்கக்
காசினியையாள்பவனு மிவர்செவியைக்கொய்யுமென
கல்விக்கட லென்றுபாடச்
சரசமுடனவரிவருந் தழுவித்துறமெடுறிந் துவிட்டுத்
தாவியே நேயமாகித்
தன்பதியில்வந்துதுறவுற்றுச் செருக்கொழிந்துபின்
றுனிருந்து வீடுகொண்ட
விரகமுருமிச்சரிதை புவியறியவோதினேன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வெலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (79)

பிள்ளைப்பெருமாளையங்கார் சரித்திரம்.

பெருகுந்திருமதுரைத்திரு மலைநாய்க்கரிடமிராய்சம்
பிள்ளைப்பெருமா ளய்யங்கார்
பெயருடையதிவ்யகவியமர்ந் தரங்கனைத்துதித்துப்
பெருகியவ ரிருக்கநாளுங்
கருதியிங்கரங்கந்தனிற் றிருத்தேரிலையனுங்
கடிகியோ லக்கம்வரவுங்
கல்லினிடந்தேருழியேறி நிற்கத்திருத்தேர்
கட்டிடுங் கனசிலையும்
அருகமருந்திவத்தியதில் விழத்திப்பிடிக்க
வங்குதென் மதுரைலிகித
ரய்யங்காரவர்கிருஷ்ண கிருஷ்ணவெனத்தன்றாஞ்ச
யறிந்தங்கு தேய்க்கவிவிடம்

விரையமன்றித்திருத்தேர்வர வரங்கன்கோவில்கொள
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (80)

சுற்றியங்குள்ளவர்க ளிதையறிந் தங்கிவருக்குத்
தோணிப்பித் ததுவுமாந்திச்
சூட்டிவந்தெய்தவித மறிந்திலாமியாமுணரச்
சொல்லுமென் றிவரைக்கேட்கப்
பற்றிமேல்நடந்தகதையை யுரைக்கப்பலர்மகிழ்ந்து
பாரரசன்நாய்க்க ரிடம்போய்ப்
பாங்குடன்வரையவவர்கேட் டய்யங்காரவரைப்
பார்த்தழைத்தங் கியாதுரைப்பான்
நற்றவம்போலரங்க நகரேகநீரிவ்விடம்
நவிலச்சிலர் நடந்ததென்ன
நாடியுரையெனவிவரும் நான்செல்லவிலையவிடம்
நடந்ததையங் குரையதுசெய
வெற்றித்தார்வேந்தனிட முற்றதிதுமெய்யென்றனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (81)

எல்லோருமுரையுமிவ ருரையும்பத்தியறிந்தரச
னெய்தியகன் றிருந்தபின்னர்
யேகிச்சிலதினங்கழித்தங் கிறைவன்வந்தய்யங்கா
ரிணையடியைத் தெண்டனிட்டு
நல்லரணஞ்சென் றுதிரு மலைநாய்க்கர் துயிலரா
நாடிச்சீரங்கஞ்செல்ல
நயருந்திருக்காவேரிதனி லரங்கதாஸரவர்
நன்குதீர்த் தங்களாடித்

தொல்லுலகின்றீர்க்க வரங்களைப்பார்க்கவிவர்காண
தொடர்ந்திவரு மவருஞ்சேர்ந்து
ற்றப்பனடிபோற்றிமகிழ்ந் துவரவிவரகலத்
தோணியிவர் கனவுகண்டு
வில்லையென்பதையறி யவிழித்துப்பார்த்திருந்தனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (82)

போதுகயங்கண்டரசன் மணவாளதாஸரிடம்
போந்துவந் திவரைநோக்கிப்
பொன்னடியைப்பணிந்திறைவ னபசாரஞ்செய்தமை
பொறுத்தெனொருங்கார்யம் [மை
நீயுடனிகழ்த்திடவப்படிச்செய்வேனென்றுரைக்க
நேர்ந்திருவரு மரங்கவாசம்
நிமலன்றிடசேவைதீர்த்தப் பிரசாதமுதவ
நீரெமக்கருள்வீரென
ஏதகமுடன்கேட்டு நாய்க்கரதுபோற்செய்யத்
தானரங்க மெய்திவிடலன்
றன்பேரிற்கவிபாடிதிவ்ய கவியின்னாபெருமா
ளையங்கா ரெனப்பலர்
வேதனைபிராமற்சொல கீர்த்திபெற்றிங்கிருந்தனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (83)

சாலவும்றிந்திதனை யானைக்காவலில்வசிக்குஞ்
சைவர்கடம் கடவுள்பேரிற்
றுதிக்கியோர்கவிதைபெற வேண்டுமெனவந்தறைய
தானிவர் தடுக்கவேகிக்

காலமறிந்தவர்களாவைப் பிடித்தங்கொளிக்கவுங்
கருதிவிடக் கடவுள்பெயரைக்
கனிவுடன்சொலவிடுவோ மென்றுசொலவிவர்சென்
களர்மங்கை பாகனெனவும் [வு
சீலமுடன்செய்கபிலையை விடுக்கப்பரத்துவஞ்
சிவனுக்கிலை யென்றுசாற்றச்
செய்தியறிந்தவர்கேட்டுத் தர்க்கிக்கவிவர்பனியை
தினகரன் விலக்குமாபோற்
வேலைசெய்திவரரங்க மதனில்வந்திருந்தனர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (84)

செய்யுங்கவியரங்கனல்லாது வேறொருவரைச்
செய்வதிலையென வைராக்யஞ்
சித்தமிசையிருக்கத்திரு வேங்கடமுடையானுந்
சீர்கனவிற் றோன்றிநீரும்
உய்யவேநம்பேரிற்கவி பாடுமென்றுரைக்க
வுய்த்தறிந்திவர் கேட்டுநா
மோங்குமரங்கனைப்பாடும் வாயினாற்மற்கடமந்
துற்றதது பாடோமென
வையச்சொலகேட்டவருங் கண்டமாலைகளாக்கப்
பாவினால் நிவர்த்திசெய்யப்
பார்த்தரங்கன்சாதிக்கவிவர் செய்யவுரைபோற்புக
வார்ப்பரம பதமதுபுக
வெய்யவனுலவுப்புவிக்கிச் சரிதையோதினேன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (85)

சாகரம்.

சாதகமுடன்காட்டில் செல்லுமொருவனைப்புலி
தான்றுறத்தப் பயந்து
தாவியிவனோடியவ்விட முறுமோர்பாழுறவு
தனிலறுகம் வேரைப்பற்றிப்
போதவேதொங்கிட வுங்கிணரடியிருந்தரவு
பேர்ந்திவனை சீறிக்கொத்தப்
பொங்கிவரக்கீழ்ச்சர்ப்ப மேற்போகப்புலிதுறத்தப்
பொல்லாங்கிலகப் பட்டுவீண்
வாதனையடைந்திவனிருக்க வறுகம்வேரை
வளைந்தெலி யுமங்கறுக்க
வப்போதுவங்குளதே னடையிலோர்துளியிவன்
வாயில்விழ மகிழ்ந்துபின்னுற்
வேதனையைமறந்தனன் சாகரமீதென்பர்காண்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (86)

பெண்களிடமுண்மை யுரைக்கலாகாதென் பதைப்பேணிக்காட்டுமோர் கதை.

பதிவுபெருமோரூரிற் வாழ்குடிகளிருவரிற்
பயிரினல்விரோ தஞ்செய்துப்
பாங்குடனொருவனைமற்றவன் வெட்டப்புனிமதியைப்
பார்த்துரைத்தவ னிறந்தபின்
சதிருடன்கொன்றவன்பின் றன்னிலம்வந்தயர்ந்திறவி
ளுன்மதியைப் பார்த்துசிரிக்கத் [ற்
தாவியிவனில்லாளுமுரை யெனவிதைச்சொலவுந்
தன்னிலப்பின் சண்டைநேர

முதிரவிவன்பெண்டீரைப் புடைக்கவவள்கூகூவென
முன்கதையைச் சொல்லியழுக
முடிகிவெருகூட்டம்வந் தறிந்திவனேமோதியும்
முனைந்தரசன் கழுகேற்றவும்
விதியும்வரப்பெண்களிட முள்ளதுரையாதென்பர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (87)

பகவத்பக்தியிறைலுண்டாகும்பலனைக்காட்டு மோர்கதை.

காசினியையாள்வேந்த னிடமறையவர் தினங்
கண்டுஞ் சவர்த்திசெய்து
கடிகிவரவசர்க்குப்பிணி யகலவகலவதற்
கனதனம்பூசி னிதனிற்
நேசமுடன்வைத்திவருக் காடைதனமதையிய
நேர்ந்தெடுத் ததைசுமக்கா
நெருமாவணஞ்செட்டியிடம் விற்றுசெலபிறகு
நேர்கொள் பாகவதர்வந்து
பூசினியைவாங்கதனமுற கைங்கர்யஞ்செய்து
புரமிருக்க வேதியர்வந்து
நூமன்னனைப்பார்த்துக் குசலமறிந்தியாவரையும்
போந்தழைத் தரியினருளால்
வீசிவபதம்பெற்றக்கதை யிதுவுமென்பர்காண்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (88)

வித்வான்களினுடையசெயலைவிளக்கிக் காட்டுமோர்கதை.

அம்புவியில்வித்தைக்கு மூலதனமாயுள்ள
வளவைப்ரசங்கஞ் செய்தாங்
கடவிதனில்வரவெயிற்கண் டங்குள்ளநாவமரத்
தமர்ந்தபின்மேற் சிறுவன்காணத்
தம்பிசிலபழம்போடென சுட்டதுஞ்சுடாததுந்
தானுளசுடா தென்னவுந்
தானுமணலெறியவெடுத் தூதசிறுவன்சிரிக்கத்
தான்கலங்கி வறிந்துசெல்லச்
சம்பிரமதாகமுன்னோர் செயலையறியாமற்
றரிற்கவிப் புலவரென்றுந்
தன்சமர்த்துங்கல்வியின் சமர்த்துஞ்சேர்த்துத்
தங்கள்வயர் பிழைப்பர்கண்டாய்
வெம்பிமனதயர்ந்துனது பதமலரைப்போற்றினேன்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (89)

பிறவித்துன்பம்.

௭ அம்புக்கடையானைவரை யுளஜீவராசிக
ளெண்பத்தி நாண்குலட்ச
மிப்பதியிலாண்பெண்ணென் றிருவகைசெய்திவருக்
கின்பமுடன் மோகமூட்டிக்
கூடம்புகொண்டிருவருஞ் சேர்ந்துப்புணர்ந்திடக்
கூசாமல் யோநிவழியாய்க்
குவலயந்தனில்வரவதைப் பார்க்கவிதிலுறக்
கூடிகொண்ட விடத்திற்புகத்

துரும்புபோல்யோநி வழியாய்வரயித்தேகமுந்
தோலெலும் பிறைச்சிரத்தந்
துர்நாற்றங்கொண்டயித் தேகத்தாலுந்தனைத்
துதிக்கவுங் கூசுதையோ
வெறும்பனைனையிதைநீக்கிவேறுசெயல்செயவரிதோ
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (90)

காமத்தால் வருமிழிவு.

மங்கையர்கள்யோநிமிசை தேன்ஜீனிசக்கரைபால்
மதுரமதிருக் கின்றதா
மதிமூத்திரங்குருதிசீழ் வேர்வைசுரோணிதம்
மாசூடுதூர்க் கந்தமுஞ்
சங்கையற்றிருக்கவிது கலையறிந்தறியாமற்
றனமீந்துகுந்தி வழியைத்
தான்பார்த்துத்தூதுவிட்டுக் கனவிலுருபார்த்துத்
தானுஞ்சுவ ரேறிவீழ்ந்து
வங்கணம்பேசியவள் காலில்விழயிக்களவை
வறிந்துசெறுப் பாலடிக்க
வையையோவாங்கியே மூத்திரக்குழியினூற்
வந்ததிது போருமென்று
வெங்கரெவர்களும்மினையார் மோகத்திலேமடிவர்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (91)

விரைக்க நாள்.

நல்லரோகணியாதிரை பூசமுத்திரம்
நயருத்திராட மோனம்
நாடுமவிட்டஞ்சதய முத்திரட்டாதிதனில்
நஞ்சைநடவுக்கு நன்றாம்

சொல்லிடும்பரணிகிர்த்திகை யாயல்யமகஞ்
சூட்டும்பூரம் விசாகஞ்
சுடர்மூலம்பூராடம் பூரட்டாதியிதனிற்
றோணிக்கிழங் கிடவும்நன்றாம்
அல்லிலையசுவனியு மிருகசீரிடமஸ்த
மானசித் திரைசுவாதி
யநுடங்கேட்டைரேவதி யில்பயிறுகாய்தான்ய
மாமிதைச்செய்ய நன்றாம்
வில்லங்கமிலையிதனிற் விரைக்கமிகநன்மையாம்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (92)

வாரவிசேஷமதின் குணம் நிறமறிய விவரம்.

பீடுறுக்கனுக்யோகஞ்செய்ய மதிவிதைவிதைக்கப்
போர்செவ்வாய் புதன்வித்தையாம்
புகழ்குருவிற்மணஞ்செய்ய வெள்ளிமயிர்கழிக்கச்சனி
பொருந்துந்தவ மதிவியாழம்
தேடியசாத்மீகமாயவெள்ளி செம்பொன்னுந்
திகழ்ந்திடுமிராட் சதம்புதன்
சீருள்ளஞாயர்சனி தாமதம்புந்திகுரு
செயும்வெள்ளிக் கிருகண்ணுமாம்
நாடியவேஞாயர்திங்க ளுக்கோர்கண்ணுமாம்
நவர்செவ்வாய் சனிகுருடுமாம்
நாடிவாரத்தின்பலனதின் குணமுநிறமறிய
நயந்துரைத்ததறி வீர்கள்காண்
வீடணனைக்கார்த்தசிரஞ் சிவீயளித்தாண்டவனே
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (93)

நாள்பலனறியவிவரம்.

ஒருகார்த்திகையு முத்திரமுத்ராடமுங்
கிளை நமிது காலற்றதாங்
சேருவருமிருகசீரிடஞ் சித்திரையவிட்டங்
கேண்மையுட னுடலற்றதாம்
சட்டமுடனே புநர்பூசம் விசாகம்பூரட்
டாதிபிது தலையற்றநாஞ்
சாதுமிவ்வொன்பதுள நாளிற்பெண்களைக்கூடிற
குறையுமல்லா மனையதுங்
திட்டமுடன்கோலிலது நாசமாமியாத்திரையுஞ்
செய்யத்திரும்பா தாகுமாந்
தேடியிதையுலகோர்க்குத் தெரியமுன்னேருமிதைச்
செப்பினரறி வீர்கள்காண்
வெட்டவெளிதனிலுள விப்பரவிடுமென்னிட்டனே
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (94)

வியாதிகண்டநட்சத்திரநாள்பலன்.

சேதம்வருஞ்சோதியொடு சதயமுப்பூரமுஞ்
சேருமாயல்யங் கேட்டைச்
சிரக்தும்பரணியாதிரை நட்சத்திரஞ்செவ்வாய்
சிரசனியனுக் கன்றினமும்
சாதகமுமில்லைநவமி துவாதசிசதுர்த்தி
சஷ்டிதிதி யென்னுமிதுவுஞ்
சரியாகவநதொன்றாய்க் கூடவிதிற்பூமாந்தர்
சார்ந்துபிணி கொள்வாராகிற்
போதவேபண்டிதர்கள் குட்டிக்கரணம்போட்டுப்
புரட்டிப்புரட் டிதைப்பார்க்கினும்
பொலலாங்குவரவிவர்கள் சொல்லாமலோடப்பின்
பிரமன்வந்திதைப் பொறுக்கினும்

வேதனையேயல்லாதுவிவர்கள் பிழையார்கள்காண்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (95)

கிரஹப்பிரவேசஞ்செய்ய வாகாதமாதம்.

பரிந்தாடித்திங்களி லிராவணன்பட்டதாம்
பாரதம்மார் கழியதாம்
பாங்குடன்புரட்டாசி யிரணியன்மாண்டதாம்
பரனஞ்சுண்டது மாசியாம்
தெரிந்திடக்காமனுமெறிந் ததுபங்குனியதாந்
தேடிபலி முடிவானியாந்
திட்டமுடனூரி னுளமாந்தர் புதுமனையிதனிற்
றேடியவர் குடியதுபுக
அரிந்திடவுமவர்கள் வாழ்வதுவுமிகக்குன்றியே
வாங்கவருங் கையிலோட்டை
யவர்கள்கொண்டிறந் துன்பராமிதுவுமுன்னே
ரறைந்தமொழி யறிவீர்கள்காண்
விரிந்துலவுநின்பதத்தைப் புரிந்தடியேன்போற்றக்காண்
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (96)

ஊழ்வலி.

பிரமனுக்குத்தலைகுறை வுண்டுசிவனுக்குப்
புகழ்கண்டம் விடமுமுண்டு
புகழ்மதிக்குற்றவுட லூனமுமுண்டிரவிக்குப்
பேசும்பற்கு றைவுமுண்டு
திரமுற்றவிந்திரர்க் கங்கமதுகுறைவுண்டு
சீரருணர்காற் குறைவுண்டு
திகழுமந்தகர்தமக்குப் புழுக்காலுண்டு
திரையப்பில் நரையுமுண்டு
உரமுற்றவலிமையுள மாபெரியோர்களுமிங்
கூழ்கொண்டு வாழ்தலாலே

யுலகுற்றமாந்தர்கடன் வினையைக்கடந்திட
வொருக்காலு மாகாதுகாண்
வீரகரெவருமகிழத் திருவளருமார்பனே
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (97)

தூங்கிவிழித்தவுடன்பார்க்கத்தக்க வஸ்துக்களாவன.

பள்ளியிலிருந்துவிழித் தெழுந்தவுடனுதயத்திற்
பார்ப்பதிங்கென்ன வென்னில்
பரிவுடன்றாமரைப் பூகனகதீபமும்
பாங்குபெரு கண்ணாடியுந்
துள்ளியோடும்பசுதி தீயுஞ்செஞ்சந்தனந்
துலங்குகடல் செந்நெல்வயலுந்
தொட்டுதிருமங்கிலியங் கட்டினதன்பத்தினி
துளைக்கருவி மிருதங்கமும்
அள்ளிபுவிக்கதுபெய்யு முகில்வரையுங்கடவுளுரு
வானதனது டவலக்கையு
மாவீன்றகன்றுடனீதொன் றேனும்பார்க்கவிவை
யதிநன்மையுண் டென்பர்காண்
வெள்ளியவனுந்தடுக்க விழியைப்போக்கினவனே
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலவெழுந் தருள்செய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (98)

பெண்கள் சிறப்பு.

வதனமதைமதியென்றும் நீள்புருவம்வில்லென்றும்
வாயிதழ் பவளமென்றும்
வரிசைப்பல்முத்தென்று மிருவிழியைவண்டென்றும்
வாயெச்சில முர்தமென்றும்
இதமுலையைவரையென்றும் வயிறையாலிலையென்று
மிருகரம் நாணியென்று

மிசைதொப்பூள் சுழியென்றுந் துடைவாழைத் தண்டெ
மிடைதனை யுடுக்கையென்றுங் [னறு
சதவுநனைப் பானமென்றும் கண்ணிமையைவலையென்று
காவுரிசைகுயிற் குரலென்றுங் [று
கந்தமலர்மடந்தையிவ ளென்றுமிரதியென்றும்வா
கனமுமையிவளென்றுமே [னை
விதமாகப்புலவர்கன்னியரைப் பேசினர்கள்காண
வேண்டியே திருவள்ளூர்வாழ்
வேலையிற்றுயிலெழுந் தருளசெய்யெனதையனே
வீரராகவ மெய்யனே. (99)

இந்நூற்செய்தகாலம்

நீடுங்கலியையாயிரத் தொன்பதில்வருடம
நிறைசீலகஞ் சித்திரை
நிகழுமாதத்தேதி யீரபத்திரண்டுமதிவாரம்
சேர்ந்திடுந் திதிசதுர்த்தி
நாடுமுயர்நட்சத்திர மிருகசீரிடம்யோகம
நற்சுகர்மம் கரணமவனசம
நல்லதொருபூர்வபட்சந் சுபயோகமிவை
நவின்முடன் கூடியதினந்
தேடுமுயர்திருவள்ளூர் வீரராகவசதகஞ்
செய்துமுடித் திதையடியனுந்
சீர்பெருகவச்சிலிட்டு குருளோர்க்கீந்துதாகன
சீர்த்திபெற விடுத்தபினற்
வீடுபெறச்செய்யவிதை வாங்கிவாசித்தவர்கள்
விருப்பமுடன் கேட்டபேர்கள்
மேதினியிலெஞ்ஞான்றும் பிணியன்றிபெருவாழ்வு
மேன்மையுட னினிவாழ்வரே. (100)

திருவள்ளூர்,

வீரராகவசதகம்.

ஸம்பூரணம்.

[illegible] MADRAS

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

6801

வெண்மணி

நாராயணபாரதியாரால் செய்யப்பட்ட

மணவாள நாராயணசதகம் என்னும்

திருவேங்கட சதகம்.

சி. வே. துரைசாமி முதலியார்

அவர்களது

சென்னை சூளை

பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1923. அணா 2.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

வெண்மணி

நாராயணபாரதியாரால் செய்யப்பட்ட

மணவாள நாராயணசதகம் என்னும்

திருவேங்கட சதகம்.

இஃது

கோகுலாபுரம்,

அருணஜலமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டபிரதிக்கிணங்க

தி. இரத்தினமுதலியார்.

அண்டுஸன் அவர்களாற்றமது

சென்னை

கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

இதன்விலை அணா 2

யாவரும் வாசிக்கவேண்டிய புத்தகம்.

கருணைப்பிரகாச சுவாமிகள்

சிவப்பிரகாசசுவாமிகள் வேலையசுவாமிகள்

ஆகிய மூவரும் செய்தருளிய

தென்கைலாயமெனகிற

சீகாளத்திப்புராணம்

மூலமும்-உரையும்.

விலை ரூபா. 2 8 0

கனவான்களே! இப்புராணத்தைப் படித்து புஸ்தகத்தை கையிலே வைத்துக்கொண்டு காளத்தி க்ஷேத்திரத்திற்குப்போய் அங்குள்ள தீர்த்தயாத்திரையாதிகளை அறிந்து பக்தியோடு பரமசிவம் மோக்ஷமளிக்கும் பயனாவதும் திண்ணமாய் காணலாம். இதுவல்லாமலே ஸ்ரீ பரஞ்சோதி பேரம்பட்டு சுவாமிகளால் எழுதப்பட்டு ஆதியந்த ஸாக்கான புத்தகங்கள் சிலவாகி வந்திருக்கு இதை ஒருதரம் வாசித்தால் இதன்மேல் உண்டாகும் பலன் உங்களுக்கே விளங்கும் புத்தகத்திற்கு முகஸ்தானம்

இப்படிக்கு,

டி. ஆர். வெங்கடேசமுதலியார்,

நெ. 31 முத்துகிருஷ்ணன் தெரு,

மிண்ட்டிப்பேட்டைபோஸ்டு மதராஸ்

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

மணவாளநாராயணசதகம் என்னும்

திருவேங்கடசதகம்.

காப்பு.

செந்திருவாழ் மார்பன் றிருவேங்கடசதகம்
பைந்தமிழா னீதிநெறி பாடவே—வந்தருளும்
கார்முகமஞ் சங்கத்தான் கைத்தா மரையணிந்த
கார்முகமஞ் சங்கத்தான் காப்பு.

தனியன்.

ஒக்குதண்டலைசூழ மேகமணிதேன்சொரியு
மோமலூர் வேங்கைசூழ
னுதவுமணவாளநா ராயணன்களமூரி
னுலகநீதிக் கேட்கமுன்
தெங்குநீர்வயல்சூழும் வெண்மணியில்வாழுமுயர்
செல்வன்முத் தாரையனோர்
செழுந்தவமுதித்தநா ராயணப்பாரதித்
திருவேங்கடச் சதகமே
பாங்குபெறுமுலகுளோர்க் கிருகண்பணியகனிருட்
பானுனிரு வழிவிழியதாம்
பவக்கடல்கடக்கவரு வங்கமாம்பொங்குமொழி
பரவுமெய்ஞ் ஞானவழியாம்
சங்கிதபாத்துணைய சாமிதைபடிப்பவர்க
ளியல்வேங்க டேசரன்ற
னிசையருளையுற்றுநல மேபெருகிவாழுமவ
ரெழுபொன்மலை போல்வாழ்வரே.

நூல்,

கடவுள்வாழ்த்து.

பூமேவுதிசைமுகனை யுந்திதனிலீன்றதும்
புகிதிவே தாகமமெலாம்
புருஷோத்தமன்றெய்வ மென்பதும்பூசுரர்கள்
புரியுமந் திரகருமமும்
தேமேவுமலர்மங்கை மார்பில்வளர்சீருஞ்
செகந்தனைக் காத்தருள்வதுந்
தேவர்முதன்மிர்கசெந்து பட்சிசிலைமாமுஞ்
செழிக்கப் பதந்தருவதும்
பாமேவுபொருளலங்காரஞ் சிறப்பதும்
பலவிதமு நீயென்றதாற்
பரதெய்வமுன்டென் றிருப்பார்களென்றால்
படித்தவிதமோ தெரிகிலேன்
மாமேவுபைந்துளப மாலையணிமார்பனே
மணவாள நாராயணன்
மனதினுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

அந்தணர்சிறப்பு.

சீலமிகுமாகம புராணமனுநீதியுந்
தேர்ந்துமெய்ஞ் ஞானநிறைவார்
செய்கின்றயாகாதி மந்தரகருமங்களாற்
றேவர்க்கு முதவிசெய்வார்
காலமுதலாகிய ப்ரமாணங்களங்கையிற்
கனிபோல வேகாட்டுவார்
காயத்ரிமகிமையாற் சகலதீவினைகளுங்
கனவிட்ட பஞ்சுசெய்வார்
ஞாலமிசைதிங்கண்மும் மாரியுங்கொற்றவர்
நடாத்துசெங் கோல்வளமையு
நாடுகள்செழிப்பதுஞ் சகலதருமமும்வேத
நாயகர் மகத்துவங்காண்

திருவேங்கடசதகம்.

வாலகருடன்பண்டு கண்டகதையல்லவோ
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

அரசர்சிறப்பு

சீருலவுமனுநீதி மந்திரிசொறன்புத்தி
தேசத் தியற்கைநான்குஞ்
சேர்ந்துசெவிவிழிமனது மூன்றினும்பொருமை
சேர்ந்துசெங் கோல்செலுத்தித்
தாருலவுகமலமுங் குமுதமுங்காலங்கள்
சார்ந்துமலர் கின்றவிதமுந்
தந்தியொடுமுதலைபொரு நான்பலமுங்கண்டு
தரிபலரை வெற்றிகொண்டு
பாருலவுசெடிசேனை தனதானியஞ்சகல
பாக்கியமு மிகவிளங்கப்
பற்பலதன்மங்களோடு கீர்த்திப்ரதாபம்
படைத்ததிற லோனரசனும்
வாருலவுதனமங்கை மனமகிழுநாதனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

வணிகர்சிறப்பு

திடமுடன்றன்மன தறிந்துவாணிபமே
செய்வரா தாயமிஞ்சிச்
செலவுசெய்பார்யாவர் வருகினுங்கண்டபடி
தேர்ந்துநிறை போலுறைப்பார்
அடகுதந்தாலுமரி யாதையில்லாருக்
கரைக்காசு கடனுமுதவா
ரனமனுநீதியுடை யோர்களுரைவாய்மையா
ளனிலர்ப் பொருள்கொடுப்பார்

திருவேங்கடசதகம்.

கடிகுதனிவெட்டியொரு கூறுபரவெனினுங்
களைக்குமுறை தன்னில்வருவார்
காரியவிசேஷமறி வொருகோடியுதவுவார்
கருணைவர்த்தகர்பெருமைகாண்
வடமலைதினம்பரவு தென்மலைக்கதிபனை
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

வேளாளர்சிறப்பு

அத்தனைக்கன்கருமமுஞ் சகராசர்புசபலமு
மவனிவர்த்தக லாபமு
மனைவாக்குமேன்மையுந் தருமமுந்தானமும்
மன்புயுங் கையபின்பமும்
புத்திதெளிவியமுஞ் சாத்திரமுமாகம
புராணமொடு சகலகலையும்
பொய்யாதவுண்மையுங் கீர்த்திப்ரதாபமும்
புகழ்கின்ற தேவர்திலையும்
வித்தைபுரிமானமுங் குலமரபுகீர்த்தியும்
விதரண முதற்சகலமும்
வேளாளர்குவளைபுனை காராளர் தங்களுடை
மேழியின் பெருமையன்றோ
மத்தரமெனுய்புய சவுந்தரமுகுந்தனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

புருஷராய்ப்பிறந்தோர் பெரும்பயன்

புருஷராய்ச்சனனமெடுத்தபேர்மெய்ஞ்ஞான
போதத்தையறிவதொன்று
பூமியொடுமிச்சகன வாழ்வதொன்றலது
பூவலஞ்செய்வதொன்று

திருவேங்கடசதகம்.

தருமவானென்றுமிகு கீர்த்தியானென்றுநற்
சற்குண விவேகியென்று
சகலருங்புகழ்கின்ற வித்துவானென்றுரண
சங்க்ராம வீரனென்று
கருணைசேர்க்கவலைகை யில்லாதமனிதரைக்
காசினியி லென்படைத்தாய்
கருதுதாயுதரமும் பார்க்கின்றபேர்களிரு
கண்களுந் செய்தவினையோ
மருவலரியதுளப மாலையணிமார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

நகரச்சிறப்பு

பாதித்தப்பல வேசியர்களாடலும்
பாடலும் பெறுகோயிலும்
பலவாவிமண்டபங் கோட்டையரணங்களொடே
பலர்மேவு கடைவீதியும்
இரதகஜதுரகப்ப தாதிசதுரங்கபல
மேர்கின்ற தளகர்த்தரு
மெண்ணமிகுமந்திரிப்ர தானிதானுபதிய
ரியலுத்தி யோகசனமும்
விரதமறையோராதி நாற்குலமுமொன்றென்று
மிக்கசோடச தானமு
மேலாய்ச்சமீபித்த நதியுமாய்மறுநீதி
வேந்தனும் பெறுபட்டணம்
வரதருறைசிரங்க பட்டணமெனச்சொல்வர்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராய(

அரசர்க்குரியதொழிலாளரியல்பு

காரியாகாரியங் கொற்றவர்தெரிந்திடக்
கண்டுசொல் வோன்மந்திரி
காலமுந்தன்பலமு மெண்ணியிகல்வென்றிடக்
கருதுவோன் றளகர்த்தனும்
சீரியதனங்களொடு ராச்சியஞ்சகலமுந்
திட்டமிடுவோன் ப்ரதானி
செய்யவாசகந்தாட்டி யவதானவக்கணை
சிறக்குமவ னேராயசன்
சூரியன்றிசைமாறி னுந்தான்றொடுத்தவத்
தொகைவிடான் கருணீகனுஞ்
சொல்வன்மைசபைவன்மைபராசர்வன்மைதெ
கமுடனே தானுபதி
மாரியதுகாத்தருளு மணிமேகவண்ணனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

இதனுலிஃதுளதாமெனல்

அதிகாரமதுவந்து சேரிலெவருக்குமே
யதிகவல் லமைகளுண்டா
மாடையாபரணங்கள் சேரிலெவருக்குமே
யழகுபெறு வளமையுண்டாம்
நிதிமேவுசெல்வது சேரிலெவருக்குமே
நிறைகின்ற மேன்மையுண்டாந்
நெஞ்சமகிழ்விதரணஞ் சேரிலெவருக்குமே
நிலைபெற்ற கீர்த்தியுண்டாம்
துதிமேவுபத்தியது சேரிலெவருக்குமே
தோன்றவரு தெய்வமுண்டாஞ்
சுகமிக்கபருவமது சேரிலெவருக்குமே
துய்யமண வாசையுண்டாம்

மதிசேரிலங்குமுத மலராதிருக்குமோ
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௯

அரசரிடத்துப் பெறத்தகும் வரிசைகள்.

சுற்றமொடுதானுகம் பினபேருமின்பமாய்ச்
சுகமுரிற் புரவியமையுந்
துய்யதருமங்களொடு கீர்த்திப்ரதாபந்
துலங்கிறுற் சிவிகையமையும்
கொற்றவர்கண்மெச்சவே பரராசர்கொடிவெற்றி
கொண்டுவரி லானையமையுங்
குறையொன்றிலாமனிறை புகழ்பெற்றவீரர்முன்
கூறுங்கை வாளமமையும்
உற்றவகையிவையெலாம் வேந்தர்சன்மானமுட
னுதவாமலே பெற்றிட
னுறைகொண்டநாடகந் தன்னில்வருகோலமுட
னூர்வலஞ் செய்கோலமும்
மற்றவர்கள்கோலமுஞ் சரியென்றுசொல்வர்காண்
மணவாள நாராயண
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௰

பிதுர்வாக்கிய பரிபாலன முதலியவற்ருல்
வருநன்மை.

தந்தைதாய்வாக்ய பரிபாலனம்புரிவதுந்
தான்சொன்ன படிசெய்வதுந்
தவறுதவிரதமும் பொய்யாவசனமுந்
தானமுங் கனபொறுமையும்
சிந்தைமகிழ்மரபினோர் செய்தொழின்முடிப்பதுந்
தேவதா விசுவாசமுஞ்
செய்தோர்பாசுரா மன்கவசகுண்டலன்
செயராம னெடுவீடுமன்

அந்தமிகுசொல்லரிச் சந்திரன்மாபலி
யடற்றரும னுடுபகீரத
னருளபிரகலாதனிவர் போற்பெருங்கீர்த்தியொடு
மவனிமிசை நீடுவாழ்வார்
வந்தமரர்போற்றவளர் சேஷகிரிவாசனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௧௧

சூதுமுதலியவற்றால் வருந்தீமை

சூதுபெறுவித்தையும் பரதாரமோகமுஞ்
சோதரன் றனையிகழ்வதுந்
துலங்காதபுத்தியு மடங்காதவார்த்தையுஞ்
சொல்லிச்செயாததிறமும்
தீதுபொறுவஞ்சமு மதங்களும்பிறருடைய
திரவியந் தனிலாசையுஞ்
சிந்தையகமெனுமகங் காரமும்பெற்றபேர்
சீர்நளன் கீசகன்றனை
மீதுபொருவாலிசுக ரன்குமரன்சிசுபாலன்
வென்றியுக் கரன்வில்வலன்
விந்தைபொருதுரியோத னன்றுனகன்முன்பெற்ற
விதமுற்றிருப்பர் கண்டாய்
வாதுபெறுதானவரை போதுமொருதிகிரியாய்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௧௨

சாதிமுதலானவைகளின் குணமே சிறந்ததெனல்.

தடவரையகன்மீது விளைபினுஞ்சோளமது
சன்னசம் பாவாகுமோ
சந்ததமுப்பாடா திருந்தாலுமெட்டிமலர்
சாதிமல் லிகையாகுமோ

கடலெலாநிறைவெள்ள மாயினுஞ்சுவைபெற்ற
காவிரியினூ ற்றாகுமோ
காகங்கள்கோடிதொனி செய்தாலுமொருசிறு
கருங்குயிற் றொனியாகுமோ
படர்கின்றபேய்ச்சுரை சொரிந்தபழமுந்திரிப்
பழமதற் கிணையாகுமோ
பகர்கின்றசாதியுங் கனவயதுமேன்மையும்
பலகூட்டமுந் தேகமார்
வடிவதிகமன்றுகுண மேயதிகமென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

செல்வத்தால்வருமுயர்வு

செல்வமதுசேரிலோ வெங்குபேர்வேங்கடேந்
திரனாகில் வேங்கடனுமாந்
செயல்கொண்டவேங்கடா சலனுமாமையராந்
திரனைய ரவர்களாகும்
நல்வரிசைகொடுதான டத்திடுங்காரிய
நயந்தரு தாகுமப்பா
னல்லோரிலின்னோர்க்கொ டொப்பமேலொருவசன
நவிலுமுன் கப்பமிடுவார்
சொல்வன்மைவாவென்ற பேர்வாருமென்பார்
சுவாமியாந் தேவரீராந்
துதிபெற்றதேவரீ ரவர்களாங்காலுமுன்
றொழுதெழுந் தருளுமென்பார்
பல்விதம்பெறுபரம லோபியர்கண்மிண்டனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

வறுமையால் வருமிழிவு

துதிக்கின்றபயனொழியுங் குறைசொல்வடங்கைதாய்
சோகமுற வசைகூறுவார்
துன்பமொடுமனமெலியும் மேனிவேற்றுருவமாந்
தொலையாத கவலைவளரும்
உதிக்கின்றபுத்தியு மழுங்கிடுங்கல்விபோ
முதாரத்தி வதிகபசியா
முறவின்முறை யாருமொரு வார்த்தை சொல்லார்
வுத்தரமு மொருவர்கேளார் [சொன்ன
விதிக்கின்றவுகைத்தி லெல்லாருமிகழுவார்
மிடிவந்து சேர்ந்ததென்றன்
மேன்மையேதறிவேது குலமேதுநலமேது
வித்தையே தெவரறிவர்காண்
மதிக்கின்றவுன்பதம் போற்றிலவைசேருமோ
மணவாள நாராயணன்
மணநிலுறையலர்மேவு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௧௫

உடனே கண்டிக்கப்படுபவர்கள்.

முடிகொண்டகொலையாளர் களவினோர்சாதிநெறி
முறைமைவழுகின்றதீயோர்
மூர்க்கமுழுபகையாளர் வெகுசனவிரோதியர்கண்
மொழிமாறு கோளுரைப்போர்
மிடிகொண்டபேரைக் கொடுத்துளோர்கற்புடைய
மெல்லியரை மேவுமயலோர்
விசுவாசகாதமிரு செய்குவோர்துஷ்டமா
மிருகக்கண் மிக்கபிணிகள்
கடிகொண்டவிஷமுடன் செய்யானையென்னவே
கருதுபன் மூன்றுவகையுங்
கண்டவுடனேபின்னை யெண்ணுதுகண்டித்தல்
கருணைமனு நீதிகண்டாய்

வடிகொண்டதெள்ளமுத மனையகுணசீலனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே கஎ

பொறுத்துக் கண்டிக்கப்படுபவர்கள்.

கண்டிருபந்தனைத் தள்ளுவோர்குருசாமி
காரியக் குறைசெய்குவோர்
காணுமிடத்திற் பழித்துளோர்வஞ்சகங்
கருதுவோர் பொய்யுரைப்போர்
சண்டைகொடுந்தந்தைதாய் சுற்றமுடனுறவைத்
தவிராத கலகமிடுவோர்
தம்முடையவலுமையா லெளியோர்வழக்கினைத்
தள்ளிய மதங்களுடையோர்
அண்டிவருதுஷ்டரொடு கூடிவினைசெய்குவோ
ராகுமிவ ரெண்மர்தமையு
மாறுபோன்மூன்றுபிழை கண்டபின்கண்டிப்ப
தரசர்மனு நீதிகண்டாய்
வண்டுலவுகின்றமலர் தண்டுளபமார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

என்றுங் கண்டிக்கப்படாதவர்கள்.

தூதாகிவந்தபேர் மிக்கதாளுபதியர்
ஜதிபெற்ற தந்தைதாயார்
சொல்லுமாசாரியார் புரோகிதர்புராணிகர்
சுகந்தந்த யோகமடவார்
வேதாகமங்கற்ற வைதிகர்தபோதனர்கள்
விகடப்ர சங்கமிடுவோர்
வித்தையாலுயர்கின்ற கவிராஜர்சுந்தரனா
வீரர்மா பிணியுயர்ந்தோர்

தீதானவெம்பிணி யடைந்துளோர்வறுமையோர்
சிறுவரொடு தனைநம்பினோர்
செய்யுமிவர்பதினெண்மர் மதியாதகுற்றங்கள்
செயினும் பொறுப்பதல்லால்
வாதாடியெதிர்செய்கை மன்னர்நெறியன்றுசான்ற
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. கஅ

இவர் இதனால் வெல்வரெனல்.

வேந்தருடனேவேந்தர் வாதுவரிலோகெடிகொள்
வெற்றிகொண்டே செயிப்பார்
வீரருடனேவீரர் வாதுவரிலாயுத
விதத்தினாலேசெயிப்பார்
போந்திடும்யோகியர்கள் வார்த்தையுசிதத்தாற்
பொருந்தவே வாதுவெல்வார்
புல்லர்க்குவாதுவரின் மரபெலாம்வசைசொலிப்
பொதுவிலக் காற்செயிப்பார்
சாந்தமணிவேசியர்கள் வாதுவந்தாற்பரத
சங்கீதமொடு செயிப்பார்
சரசகவிராசர்பிர சங்கத்தினால்வாது
தன்னைச்செயிப்பர் கண்டாய்
மாந்தளிரைநிகர்மேனி ராதையதிமோகனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. க௯

இக்குற்றத்தாலிதுபயன்படாதெனல்.

செயல்கொண்டமானமது பங்கமானாற்றிரு
செழித்தென்ன மாறிலென்ன
செய்யகுணவின்பரச மில்லாதமங்கையைச்
சேர்ந்தென்ன நீங்கிலென்ன

இயல்கொண்டகீர்த்திமரி யாதையில்லார்களை
யிகழ்ந்தென்ன புகழ்ந்துமென்ன
விடருற்றபோதுதவி செய்யாதபேர்நட்
பிருந்தென்ன போயுமென்ன
கயல்கொண்டவிழியினாள் பேரிளம்பெண்கொங்கை
காட்டிலென் மூடிலென்ன
கருணைகொண்டொருவருக் குரையாதபேர்வித்
கற்றென்ன மறக்கிலென்ன [தை
வயல்கொண்டபயிர்மேனி புயல்கொண்டகளமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௨௦

இவையெல்லாமளவுபடினுமாசையளவுபடாதெனல்

பொங்குநதிமணலுமா காயத்தினெல்லையும்
பொழியுமழை யின்றிவலையும்
புடவியிசைவருசனமு மடவியிசைவளர்மரமும்
பொருப்பின்மிசை யுற்றசிலையும்
திங்களுடனுற்றதா ரகைகணமுமுன்பாத
சேவைசெய் வோர்பெருமையுந்
தெரிவையர்கண்பனமுமுனை நினையாதபலமூடர்
சென்மமுங் கடலாழமும்
அங்கசன்கணைபுரியு மோகமுங்கவிராச
ரருள்பெற்ற புத்திநலமு
மளவுகண்டாலுமோ மனிதருறுமாசைதனை
யளவிடக் கூடாதுகாண்
மங்கைமிதுலாபுரி மடந்தைமகிழ்நேயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௨௧

இன்னார்க்கு இதுவில்லையெனல்.

காதன்மிகுகாமுகர் தமக்குமுறையில்லைவஞ்
சகர்க்குமரி யாதையில்லை
கட்டுண்டகள்வருக் குறவின்முறையாரில்லை
கசடர்க்கு ஞானமில்லை
வேதமறிபூசுரர் தமக்கருள்செயாரில்லை
விரோதிக்கு நேயரில்லை
மெய்ஞ்ஞானியர்க்குவரு சாதிகுலமொன்றில்லை
வீரர்க்கு மணபயமில்லை
போதமிகுயோகிக்கு வினைசெய்குவாரில்லை
பொய்யர்முன் சாட்சியில்லை
புலவர்க்குநேயமில் லாரில்லைசெல்வரைப்
போற்றிலா வொருவரில்லை
மாதரெழில்கண்டுமன மகிழாதபேரில்லை
மணவாள நாராயணன்
மணதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. உஉ

இது இவ்வாறுயின் இதுவாமெனல்.

எழுதினதுசொல்வதே ராயரொப்பந்தனக்
கிசையுமவ ளேரம்பையா
மிடர்வேளையுதவுமவ னேகன்னன்வழிநடைக்
கேற்றதே யுற்றவசுவம்
பழகிமனமறியுமவ னேயூகிமந்திரநற்
பயநீக்கினோன்றந்தையாம்
பசியிற்கிடைத்ததே யமுதமாந்துயிலினேர்ப்
பட்டதே புஷ்பசயனம்
சிறந்தகைத்ததே கற்பகத்தாகத்தி
னீர்தந்த தேகங்கையாம்
நிறைபிணிதவிர்த்ததே சஞ்சீவிதன்மட்டு
நீச்சுநீ ரேகடலதாம்

திருவேங்கடசதகம்.

மறைமுழுதிலெழுத்தனைய மெய்யனை ஐயனை
மணவாள நாராயணன்
மண திருவுறையலர்மேலு மங்கைமணவாளனை
வரதவேங் கடராயனை.

இவர்க்கிது தெய்வமெனல்.

தீதுபுரிவோரியர் தமக்குப்பணங்களே
தெய்வமாங் காமுகர்க்குத்
தெரிவையர்கடெய்வமாந் துஷ்டருக்கென்னிலை.
தீமையே தெய்வமாகும்
நீதியுடையோர்க்குப் பயந்தீர்த்திரக்ஷித்த
நேயரே தெய்வமாகு
நீங்காததரித்திரர் தமக்குக்கொடுத்தபேர்
நித்தமுந் துதிதெய்வமாம்
சாதியனைவர்க்குமறை யோர்தெய்வமம்புவி
தனக்கரா னேதெய்வமாந்
சகலர்க்குமாசாரி யன்றெய்வநாரியர்
தமக்குநா தன்றெய்வமாம்
மாதவப்புரிஞானி யர்க்குநீதெய்வமா
மணவாள நாராயணன்
மண திருவுறையலர்மேலு மங்கைமணவாளனை
வரதவேங் கடராயனே. ௨௬

இதுண்டாயினு மிதுவில்லாவிடிற்பயனில்லையெனல்.

எத்தனைபொருட்சுவை யிருக்கினும்பக்திரச
மில்லாத கவிகளென்ன
வெண்கோடிசம்பளந் தருகினுஞ்சன்மான
மில்லாத சேவகமென்ன
சித்ராதிலீலைபல செய்யினுமிதமுடனடு
சேராத சுகமென்ன
செம்பொன்மிகுசெல்வமுண் டாயினும்பயிர்கொ
செயலிலா வளமையென்ன
[ண்ட

வித்தையுளவெல்லாம் படிக்கினுங்குணவினய
மேவாத பெருமையென்ன
மெய்துளசியில்லாத நந்தவனமெனவே
விளங்குமென் பார்கள்கண்டாய்
மத்தகசராசன்மகிழ் விசயநரசிங்கமே
மணவாள நாராயணன்
மனதினுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௨௫

இது இச்சிறப்படையினும் பயனில்லையெனல்.

காட்டிலெண்டருஞ்செடி தழைத்தென்னகால்சிரங்
கனியது சிவக்கிலென்ன
கரைநாணலெல்லா மலர்ந்தென்னகாகங்
கழுத்திடை வெளுக்கிலென்ன
ஆட்டின்கழுத்திலதர் நீண்டென்னநீர்ப்பாசி
யதுபச்சை யாகிலென்ன
வற்பருக்கதிகாரம் வந்தென்னபேடிகையி
லாயுத மிருந்துமென்ன
நீட்டமொடுகொடிக்கு மயிர்வளர்ந்தாலென்ன
நீதியறி யாதமூடர்
நிறைசெல்வராயென்ன ஞானமில்லாக்கல்வி
நெறிபோ லிருக்குமென்பார்
வாட்டடங்கண்ணிபுனை கண்ணிமகிழ்கண்ணனே
மணவாள நாராயணன்
மனதினுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௨௬

கலியுக தோஷம்.

அப்புவியின்மிக்கமெய்ஞ் ஞானியைக்கண்டாலு
மதுவுமொரு வேஷமென்பா
ராகமபுராணமது நூல்விரும்பார்கள்பரி
யாசகதையே மெச்சுவார்

கம்பமிசையொருகோடி கரணமிட்டாலுமது
கண்கண்டு வித்தையென்பார்
கற்பனையலங்கார மாக்கவிகள்பாடினுங்
கற்றவர்க் கெளியவென்பார்
நம்பிவிசுவாசமொடு துதிசெய்யினுங்கள்ள
ஞானமென் பார்களவைபோ
னயந்தகலியுகமகிமை நின்னையுஞ்சிலபேர்
நவின்றுகுறை சொல்வர்கண்டாய்
வம்பவிழ்மலர்ச்சோலை மலையலங்காரனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௨௭

அரசரது நன்றியறியாமை.

அரசரைக்கண்டபின் காரியக்காரருக்
கதிகபரி தானமுதவி
யதிகாரமொன்றினைப் பார்ப்பவரிடத்திலு
மதுக்கொட் டிரட்டியீந்தும்
கருதுநிலுவைப்பணந்தனைப் பணங்கண்முன்
கடன்வாங்கி யேகொடுத்துங்
கணக்கர்செலவெழுதார்க ளொட்டார்கடூறுவர்
கடன்காரர் தாமறிப்பார்
விருதுசீட்டுக்காரர் வைவார்கள்கொல்லரோ
வெயிலிடை நிறுத்திவைப்பார்
விதமாகுமவரவர்க ளெல்லாஞ்சபாசென்ன
மெய்யாய் நடந்துகொளினும்
வரிசைபெறுதுரைகளவ ரருமைசற்றறிவரோ
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௨௮

கவிவாணரருமை யறிகில்லாமை.

கற்பனையலங்கார மாக்கோவைபாடினுங்
கனவரிசை யொருபச்சடமு
கலம்பகங்கூறினொரு துப்பட்டிபின்னைக்
கவிக்கென்னி லொருசோமனும்
நற்பொருளிலாவென்னி லுறுமாலைமடலுக்கு
நாணயமதாயொருபணம்
நல்வண்ணமென்னிலொரு சாப்பாடேயல்லவெனி
னன்மைதரு தாம்பூலமாம்
அற்புதம்பெறுகவிக ளென்னிற்பளாபளா
வதிவெகு மானமாரு
மப்படியுமாயிரத் தொருவரென்றுலெங்க
ளருமையெவ ரறிவர்கண்டாய்
மற்பொருதபல்லரொடு முற்பொருதவீரனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௨

இதனையிவரன்றி யிவரறியாரெனல்.

தீர்த்தனோர்வின்பமிமை பாகவதரல்லாற்
றிரிகுறவர் தாமறிவரோ
கீர்த்திப்ரதாபமது விதரணிகரல்லாது
கெட்டலோபியரறிவரோ
சேர்த்தமருவிக்யான நீதிமன்னவரலாற்
சிலைவேடர் தாமறிவரோ
செய்யபகவற்கீதை மெய்ஞ்ஞானியல்லாது
சென்மபீசர்களறிவரோ
கோத்தமணிமாலையை மங்கையர்களல்லாற்
குரங்குகண் டாலறியுமோ
கொக்கோகமகிமைதனை நாகரிகரல்லாது
கூறுமேபடிகளறிவரோ

வார்த்தையுசிதத்தைமந் த்ரிகளன்றியறிவரோ
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௫௦

பயனில்சொல்லினிழிவு.

ஆகமென்றுதன்னைப் புகழ்ந்தபேயுந்தந்தை
யன்னையர் வருந்தமுறவே
யயலார்தமர்குறவு பேயுமடவார்புத்தி
யனுதினங் கேட்டபேயும்
சுகமென்றுபொதுமாதரைக்கூடிமனைவியைத்
துயரமே செய்தபேயுந்
துணைந்துரணைகளமற்று முறிகின்றபேயுமுன்
சொன்னதிலை யென்றபேயும்
செகமன்னராமென்ற தலையென்றபேயுமியல்
செய்நன்றி கொன்றபேயுந்
திரளானசபையினிற் பயனிலாவார்த்தையுரை
செய்கின்றபேய்க்குநிகரோ
மகமென்றுகோசிக னழைக்கமகிழ்தூயனே
மணவாளநாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௫௧

எல்லைக்கடந்தலின் வருமிழிவு.

அரசர்மேலாணைதனை யெண்ணுதகுடிகளு
மாதாய மிஞ்சுசெலவு
மன்புடையபேர்புத்தி கேளாதகோபமு
மனைவக்கடங் காதநாவும்
சரசவகைமிஞ்சவே வந்தபரிகாசமுந்
தனைமிஞ்ச தொழிலாளருந்
தயிரியந்தனைமிஞ்சு கவலையுஞ்சாகஸியோர்
தலைமிஞ்சு முறைவழக்கும்

காசரணவயவந் தனைமிஞ்சுதேசமுங்
கவியின்மிஞ் சியவெழுத்துங்
கருதுமுறைகேளாத மனையாட்டிபுணர்சாய
கன்புகழை யொக்குமென்பர்
வாசாசகவிராஜர் புகழ்வேதகுலதிலக
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாராயனே. ௫௨

இவர்க்கு அமுதம் இவ்விடத்தெனல்.

அண்டருக்கமுதமது சொர்க்கத்தில்வேதியர்க்
கமுதமது சொல்லுரையிலே
யானகவிராஜருக் கமுதமணிநாவிலே
யாவினுக் கமுதமுலையில்
பண்டிதர்க்கமுதமது கையிலேவிதரணிகர்
பங்கிலமு தங்கண்ணிலே
பாகவதருக்கமுது காதிலேபரிவுடைய
பாங்கருக் கமுதமனதில்
ஒண்டொடியருக்கமுத மாமதியமெனவே
யுகந்திடுந் தேகமெல்லா
முற்றபெரியோர்தமக் கமுதங்குணத்திலே
யுணர்வுடைய பேர்க்கமுதமோ
மண்டலமளந்தவுன் பாதத்திலென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாராயனே. ௫௩

இவர்க்குவிஷம் இவ்விடத்தெனல்.

திருடர்க்குவிடமெலாங் கையிலேகாமமிகு
தெரிவைக்கு விடமுலையிலே
தீயபொய்யர்க்குவிட நாவிலேமதமுடன்
றிரிவோர்க்கு விடமதியிலே

கருதரியகோளர்க்கு விடமுதடுவாயிலே
காமுகர் விடங்கண்ணிலே
கட்செவிவிடங்கள்பல் லடியிலேதேட்கெனிற்
கனைவிடங் கடைவாயிலே
அரியதுஷ்டர்க்கென்னி லெட்டி மரமென்னவே
யங்கமெல் லாம்விடமதா
மடுத்துக்கெடுத்திடும் பகைவர்வுடமனதிலே
யம்பொன்விலை மாதருக்கு
மருவுவிடமல்குலிற் றெரியவசமன்றுகாண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௧௪

இவர்க்குப்புண்ணிய மிதுவெனல்.

உன்னுடையபதசேவை கண்டுபணிகின்றதே
யுடல்செய்த புண்ணியமதா
முறைகொண்டகீழுரையின் சாரங்கள்கேட்பதே
யுற்றசெவியின் புண்ணியம்
தன்னுடையபுத்திர ரளொந்தசோறுண்பதே
சாற்றுநாவின் புண்ணியந்
தத்துவமுணர்ந்தபெரி யோர்தமைக்காண்பதே
சார்ந்தவிழியின்புண்ணியம்
பன்னுயிரவலர்கேட்கு முன்னங்கொடுப்பதே
பாணியது செய்புண்ணியம்
பதிவிரதமங்கைகுண மிக்கபுருடற்குப்
பலிப்பவே வெகுபுண்ணியம்
மன்னுமிவைமுன்செய்த புண்ணியமதென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௧௫

இவர்க்குப் பாவமிதுவெனல்.

திருக்கதைகற்பனையிலாப் புன்கவிகள்கேட்டதே
செவிசெய்த பாவமாகுஞ்
செயலருமையறியாத பேர்கண்முன்சேவகத்
திரிதல்கால் செய்தபாவம்
பரித்தவுபசாரமா தாவிலார்மனையுணவு
பருகலே வின்பாவமாம்
பாவனைலயஞ்சுருதி நயமிலைப்பாதமது
பார்த்தல்விழி செய்தபாவம்
தருக்கமிறையறியாத பேர்களிடமேற்கின்ற
தகைகைமைகை செய்தபாவந்
தன்பெயர்விளங்காத பிள்ளையைப்பெறுவதே
தாய்வயிறு செய்தபாவம்
வருத்தமாமுன்செய்த பாவவினையெம்பர்கான்
மணவாள நாராயணன்
மனதிறைநிறையலர்மேறு மங்கைமணவாளனே
வரதவேங்கடநாயகனே. ௫௰

இவர்க்கிவையுளவேனு மிவைவேண்டுமெனல்.

ஆதிவீரனென்னினுந் தந்திரவுபாயமுட
னடையலரை வெல்லல்வேண்டு
மாயிரம்வித்தைகற் றாலுமலைநத்தனி
லடக்கம திருத்தல்வேண்டும்
நதிகோடிநீத்திவந் தானுமேபாடந்தனை
நயத்தானை சேரல்வேண்டும்
ஞானதத்துவமுணர்ந் தாலுமலைத்தினி
னடக்கைதனை யறிதல்வேண்டும்
துதிசோர்குபோலென் றாலுமொருவாயமுறு
தொழிலுட னிருத்தல்வேண்டுந்
தூயவல்லமையுடைய னெனினுமொருசார்பினுந்
றுரைகளைக் காணல்வேண்டும்

மதியூகியென்னினும்பெரியற்சொற்கொளல்வேண்டு
மணவாள நாராயணன்
மணதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௩௭

இவர்க்கிவை வேண்டாமெனல்.

பெற்றதாய்தந்தைகள் சுற்றமேமுதலான
பெரியோரை முனிதல்வேண்டாம்
பின்னொன்றுமுன்னொன்று பேசியேயவமானம்
பேர்கொண்டு திரிதல்வேண்டாம்
உற்றவர்கள்போலவுட் பகையானவஞ்சகரை
யொருநாளு நம்பவேண்டா
மொருவருக்கிச்சையாய்ப் பொய்சொல்லிப்பின்
சபையினூமைபோ னிற்றல்வேண்டாம்
சற்றுமேபொறுமையில் லாதவர்கள்சண்டையிற்
றான்போய் விலக்கல்வேண்டாந்
தைரியந்தனில்விக்ர மாதித்தனென்னினுந்
தன்னையே புகழவேண்டாம்
மற்றொன்றுமெண்ணாது செய்யவேண்டாமென்பர்
மணவாள நாராயணன்
மணதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

இவர்க்கிவை பாவமெனல்.

அரசர்வெகுமானஞ்செய் போதுதடைவருகிலோ
வன்றுவிதி பாவமாகு
மாணபெரியோர்பழமை யாய்வந்தநேயமதை
யகல்வதே தத்தயோகம்
தருகின்றகாரியங் கைகூடியேபின்பு
தவறில்லை திருதிபாருஞ்
சற்குணமடைந்துளோ ருத்தமரைமுனிவதே
சந்திராஷ்டமதாகுமாம்

திருவேங்கடசதகம்.

கருதியவிருந்தினுட னுண்ணாததனியுணவு
காணுமது வேதூரத்தினங்
கலகமேசெய்கின்ற வினைரைக்காண்பதே
கனவாக்ய வேளைகண்டாய்
பரிசிசுதனெனவந்த காசிபகுலோத்துங்க
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௧௯

இவர் இத்தீக்கோளாவரெனல்.

தாரமக்களைக்கண்டு தங்கள்காரியமெலாஞ்
சொல்லிச்செய் கின்றவேளை
சொல்லெலாம் பொய்யெனவு மிவர்சாட்சிமெய்
யெனவுந் தோன்றுவோ னவலமாகும்
திருமுற்றகல்வியொடு குணமிக்ககவிராஜா
திரான ராஜசபையில்
செய்யும்ப்ரசங்கத்திலொருபழுதுசொல்லுவோன்
சென்மத்தி லங்காரகன்
அருள்பெற்றவிதரணிக ரைக்காத்தனேகரு
ளனுசரித் தியல்பாகியே
யவர்கொடுக்குப்போதி லிடர்சொலிவிலக்குவோ
னஷ்டமச் சனியனாகும்
மருவுற்றலர்ந்தவம் புயமணியுமார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௨௰

இது இவ்வாறாயின் இச்சிறப்பிற்றாமெனல்.

தரணிமன்னவர்சபையின் மெய்க்கின்றவரிசைபெ
றனதுபட் டாபிஷேகஞ்
சபாசென்றுமெச்சிக் கொடுக்குமதிகாரமே
சாம்பிராச்ய போகமாகும்

பரிவுடனினைத்தபடி காரியங்கூடிலது
பதினொன்றி னிற்குருவதாம்
பந்துஜனவர்க்கங்க ளுடனுணவுசெய்கின்ற
பாக்யமே கலியாணமாம்
அரிவைகுணாஞ்சிதம் தாய்வந்துசேருநா
ளன்றமிர்த சித்தயோக
மன்பானபெரியோர்க டரிசனஞ்செய்வதே
யானசுப தினமென்பர்காண்
மரகதம்பூவைமுகி னீலமணிவண்ணனே
மணவாள நாராயணன்
மணதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாயனே. ௬௧

மனிதர்களிலே துஷ்டரும் ராக்ஷசரும் பூதரும்

புண்ணியம்பாவமறி யார்மாதவஞ்செயார்
புகல்கல்வி நெறியுமறியார்
புனிதரைப்போற்றூர்கள் பாத்திரவியங்கொள்வார்
புன்மைசேர் துஷ்டராவார்
எண்ணியொருகாரியஞ் செய்பவர்கள்வலுமையா
லெவருக்கு மிடர்புரிகுவா
ரிரக்கமில்லார்பொய் புரைப்பவர்வஞ்சிப்பவர்க
ளிவர்கள்ராட் சசர்களாவார்
நண்ணியெளியோர்தமை வெருட்டுவார்வலியவரை
நாடிவஞ் சனையில்வெல்வார்
நாரியர்களெவரையுங் கூடுவார்மிகவுண்பா
நாணமறி யார்பூதர்காண்
மண்ணிலொருமூவடி யிரந்தநெடுமாயனே
மணவாள நாராயணன்
மணதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாயனே. ௬௨

மூர்க்கர் முதலியோரியல்பு.

மெய்யானபுத்திபல சொல்லினுந்தன்புத்தி
    மேலாகி னென்மூர்க்கனும்
  மிக்கபெரியோர்களைத் தாழ்வுசெய்தர்பர்தமை
    மேன்மைசெய் வோன்மூடனும்
செய்யாதகாரியந் தெனினும்பிடித்தபிடி
    செய்யுமவனே துஷ்டனுந்
  திளானைநன்றிபல் செய்தவர்க்கேயிடறு
    செய்பவன் மகாபாதகன்
ஐயாவெனப்பணிந் தாலுமேகோபம
    டடங்காத வன்குரூர
  னானுதினந்தீமைபுரி வோனெந்தநாளினு
    மடங்காத சண்டாளனும்
மையார்தடஞ்சோலை திகழ்கின்றகளமூரின்
    மணவாள நாராயணன்
  மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
    வரதவேங் கடராயனே. சக

இப்படிப்பட்டவன் இவ்வங்கவினை னுவனெனல்.

காதலழியானைநதி மாதலந்துதியாத
    கயவனே யீனமுடவன்
  கைதந்தவோலைவா சிக்கமாட்டாதவொரு
    கசடனே மிக்ககுருடன்
நீதுபெறுதன்களவு கண்டவர்க்குத்தாஞ்
    செப்பிலா தவனூமையாஞ்
  செயலானதன்மகனை யொன்றெனினுமறியாத
    செய்கையுடை யோன்செவிடனும்
ஏதெனினுமொருபேர் விளங்காததேகம
    தெடுக்குமவ னேகுருபி
  யென்றெனினுமுன்பாத தரிசனஞ்செய்யாத
    வீணனே நீசனென்பார்
மாதுசத்தியபாமை தழுவுமணியார்பனே
    மணவாள நாராயணன்

மனதிறுறையலர்மேலு மங்கைமணவாளனை
வரதவேங் கடராயனே. ௬௭

உலோபியர் வசை.

நசைபெற்றவேதவே தியர்தமக்குதவா
நவின்றலோ பார்க்குநேயன்
நாற்கவிமொழிந்தகவி ராசர்க்குமொன்றேனு
நல்கிடான் கொஞ்சலோபி
இசைபெற்றகீதமுறை செய்பாடகர்க்குமொன்
றீகிலான் பாதிலோபி
யியலானமட்டோ சர்க்குமொன்றுதவிலா
னேற்றமுக் காலுலோபி
திசைபெற்றவிகடகவி ராசர்க்குமுதவிலான்
றீயமுழு லோபிநடனஞ்
செய்மாதரபினயங் கண்டுமொன்றுதவிலான்
சேர்பரம லோபிகண்டாய்
வசைபெற்றலோபியர் தங்கள்கண்டிரவன்
மணவாள நாராயணன்
மனதிறுறையலர்மேலு மங்கைமணவாளனை
வரதவேங் கடராயனே. ௬௮

உலோபியர் வஞ்சப்புகழ்ச்சி.

கண்டபகையாளிமுன் னின்றுபொருதாமற்
களத்திற் புறங்கொடுப்பார்
கன்னமிடுகள்வருக் காடைகளும்பணிகளுநி
காணுமலேகொடுப்பார்
சண்டமாருதமென்ன வருகின்றபகைவர்க
டமக்குமனை யுங்கொடுப்பார்
சவுக்கிட்டடிக்கின்ற மன்னர்க்குவீட்டுத்
தனங்களெல்லாங் கொடுப்பார்
அண்டிவருமெமதூதர் வந்துதான்கேட்குமுன்
னங்கமுறு முயிர்கொடுப்பா
ரவனிமிசையிப்படி கொடுக்கின்றபேர்கடமை
யதிலோப ரென்பதென்னே

மண்டலமும்விண்டலமு முண்டகனிவாயனே
மணவாள நாராயணன்
மணதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௬௩

உலோபியர் குணமாறாமை.

தேன்கொண்டதுளியொன்றி னாலேழுகடலெலாந்
தித்திக்கவேசெய்யினுஞ்
செய்யபூமலரினால் வச்சிரந்தன்னைச்
சிறக்கவே பொடிசெய்யினும்
கான்கொண்டமலையெலாங் கைகொண்டவண்ணை
யாற், களிறுற்ற மெழுகுசெயினுங்
கயவர்க்குநீதியும் பேடிக்குவீரமுங்
கபடர்க்கு மெய்ஞ்ஞானமும்
ஊன்கொண்டமூடர்க் கிரக்கமுந்தெளிவுற
வுரைத்துநலமேசெய்யினு
மூமைசெவிடன்குருடன் முத்தமிழ்படிக்கினு
முலோபருக் கீவுவருமோ
வான்கொண்டதேவர்மொழிமலர்கொண்டபாதனே
மணவாள நாராயணன்
மணதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௬௪

மக்களிற்பதரரவ ரிவரெனல்.

கொண்டகடன்வட்டியுட னன்றுபோற்குணமாய்
கொடுத்துமகி ழாதபதருங்
கூறுபிணைசாட்சிமுறி யுடன்மறித்தாலுங்
கொடாதொளிக் கின்றபதரும்
கண்டவுடனொருகோடி சொல்லிப்பினென்றேனுங்
கருதிச்செ யாதபதருங்
காணாவிடத்தினிற் பழிகூறியவரையெதிர்
கண்டுபுகழ் கின்றபதரும்

பண்டொருவர்செய்நன்றி தனையேமறந்துபின்
பழிசொல்லு கின்றபதரும்
பரமாதராசையால் வசைகொண்டபதரும்
பறந்துமிக வுஞ்சிதறவே
மண்டிவருசண்டப்ர சண்டமாருதமான
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௬

இக்குற்றமுடையோர்க்கும்
இது செயல்வேண்டு மெனல்.

கதித்திடும்பகைவரென் றாலுமாயத்தினிற்
கண்டுதவி செய்யல்வேண்டும்
கல்வியறியாதசபை யெனினும்ப்ரசங்கங்கள்
கவிராசர் செய்யல்வேண்டும்
விதித்தமுழுமூடரென் றாலுநல்லோர்கண்டு
வித்தைகற் பித்தல்வேண்டும்
வெய்யவினைமூர்க்கரென் றாலுநல்லோர்கண்டு
மேற்புத்தி சொல்லல்வேண்டும்.
அதிர்ஷ்டமிலையென்னினுஞ் சலியாமன்மிக்கதொழி
லதிலே முயற்சிவேண்டு
மசாத்தியமதான கனரோகமென்றாலுமோ
ரவிஷதம தீவர்கண்டாய்
வதிஷ்டரொடுவான்மீக முனிதுதிசரித்ரனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

இதினும் இது மிக்கதெனல்.

சினமுந்திரிந்துதனி யாகியேமிக்கபொரு
டோடியே வாழுமதிலுஞ்
செல்வரொடுதந்தைதாய் சுற்றமுங்கூடிச்
சிறந்துண்ட கூழதிகமாம்
தனதுமரியாதையொடு பெருமையறியாதபேர்
தனமாரி பொழியுமதிலுஞ்

சமமானமேன்மைபெரி தின்றபெரியோர்தந்த
தாம்பூல மேயதிகமாம்
கனமருவுபலபல மகாவித்தைசிலசில
கருத்தொடு படிக்குமதிலுங்
கருணைபெறவொருவித்தை யாயினுங்குறைவறக்
கற்கின்ற தேயதிகமாம்
மனிதர்சிலரிவையன்றி யவையதிகமென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாரயனே. ௫௦

இதிலுமிது வென்றியெனல்.

மிக்கதுடிகண்டுளம் வெருண்டுகலைமானையே
வென்றசய மாகுமதிலும்
வெஞ்சினமிகுந்துகவ ரும்புலியுடன்பொருது
மெய்கொண்ட வடுவேசயம்
பக்குவமுதிர்ந்தபே ரிளமாதுகொங்கையிற்
பரிவுடன் சேருமதிலும்
பைம்பொன்மணிமாலைபுனை வாலரதியூடலிற்
பாததா டனமேசயம்
தக்கதொருகல்வி யறியாதமுழுமூடர்
சந்தோஷ மாகுமதிலுந்
தமிழருமையறிகின்ற பெரியோர்பழித்தநிந்
தனையதே சயமென்பர்காண்
மைக்குவளைசெங்குவளை வாசமலர்களமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாரயனே. ௫௧

இதுவிதனை வசப்படுத்துமெனல்.

சிந்தைதெளிகல்வியே லோகதசியம்பத்தி
செய்வதே தெய்வவசியஞ்
செய்யுமரியாதையே வித்வகனவசியமாஞ்
செல்வமுற யோர்கள்வசியம்

எந்தவிதமுந்திரள நல்கும்பணங்களே
யின்பவிலை மாதர்வசிய
பெப்பொழுதுமவர்மன தறிந்துகட்டிக்காத்
திருப்பதே ராஜவசியம்
தந்ததண்டனைகளே துஷ்டசனவசியமாந்
தானமே கீர்த்திவசியஞ்
சாந்தகுணநயமாய் நடந்திடுமொழுக்கமே
சகலஜன வசியமாகும்
மந்திரமெழுத்திட்டு மேயுனதுவசியமா
மணவாள நாராயணன்
மனதினுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௫௨

இச்செய்கையோர் இச்சிறப்புப்பெயர்
கொள்வரெனல்.

சரணென்றடைந்தவர் தமக்குவருவினையெலாந்
தாங்குவோன் புருஷமேரு
தன்னுடையசெய்கைபோலெவரையும்பார்க்கின்ற
தகைமையோன் றெய்வபுருஷன்
திரணமெனினும்பிறர் பொருட்காசையில்லாத
செய்கையோன் புருஷோத்தமன்
தீரதவினைவரினு மற்பரைப்பணியாத
தீரனே புருஷசிங்கம்
பொருளிலாத்தந்தைதா யென்னினுங்கண்டபடி
புகலுவோன் புருஷரத்நம்
போற்றுமவர்மனதிற் குறிப்பறிந்துதவுவோன்
புருஷநா யகமென்பர்காண்
மரபெலாமிப்படி புகழ்ந்தகுணசேகரன்
மணவாள நாராயணன்
மனதினுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௫௩

இச்செய்கையோர் இவ்வழிபெயர் பெறுவரெனல்.

சற்றேனினுமொருகல்வி யறியாதகயவனே
தாங்குமுயர் கொண்டபாமரந்
தன்புத்தியன்றிபிறர் புத்தியால்வினைசெயுந்
தகைமையானே பதுமையாம்
கொற்றவர்கள்பகையாற் றூரத்துண்டுதிரிகுவோன்
கூகையுற வானபக்ஷி
கோபமதுதந்தையே யன்றிமற்றோரையுங்
கோபிக்குமவன்மிருகமாம்
கற்றபெரியோரையெதிர் பணியாதமூடனே
கைகால் முளைத்தசிலையாம்
கண்டவர்களெல்லாம் பழிக்கின்றகோளனே
கனதுஷ்ட ஜெந்துவென்பார்
மற்றவர்களையமது கனவிலுங்காணாத
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௫௪

கல்விப்பொருட்சிறப்பு.

தெள்ளமுதமனையகல் விப்பொருள்படைத்திடிற்
தேசமெல் லாந்துதிக்குஞ்
செயத்தம்பமானபுகழ் நிலைநிற்குமிவையெலாஞ்
செம்பொன்மிகு செல்வமதுபோல்
வெள்ளமதுகொளுமெனும் பயமில்லைகனலினால்
வெம்பவரு சலனமில்லை
வேந்தர்கள்பறித்திடக் கூடாதுசோதரர்
விரும்பினும் பங்குறாது
கள்ளராற்றிருடவும் முடியாதுவரவரக்
கனமலாற் குறைவுறாது
கருணைஞானந்தழைப்பு மாகையாலுனையிதய
சமலத்தில் வைப்பதெளிதாம்
வள்ளலெனவருகின்ற மாடபூசியாதிபன்
மணவாள நாராயணன்

மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௫௫

கவிதைச்சிறப்பு.

உரைகொண்டுசொல்வரிசை சேர்ந்துபொருளின்ப
வகை யோசைபெற் றேமதுரமா
யுற்றநவரசமுடன் கற்பனையலங்கார
முண்டான யேகவுடமாய்
நிறைகொண்டசீர்தனை விகற்பம்பொருந்திநன்
னீதியாய்க் கடைதுடிப்பாய்
நிறைகின் றசபைதனி லுதாரணமதாகிநிலை
நின் றுபழு தென் றிடாமல்
திரைகொண்டதண்கடலில் வருமமுதபாகமாய்த்
தேசப்ர சித்தியாகச்
செப்புமொருகவிகொண்டு சூலமெலாம்வந்தடிமை
செயினுமது நிகராதுகாண்
வரைகொண்டுபொழியுமழை காத்தருளுமையனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே ௫௬

தந்தீவினைப்பயன்.

திங்களுதயங்கண்டு மலராதிருப்பது
செங்கமல முற்றவினையே
தினகரனையெதிர்கண்டு முகைகொண்டுவாடுவது
சேதாம்பல் செய்தவினையே
கொங்குலவுசண்பக சுகந்தமலர்கண்டுமருள்
கொண்டது சுரும்பின்வினையே
கொண்டன்மழைகண்டுள மெலிந்திடவருந்துவது
கோகிலஞ்செய்தவினையே
அங்கணுலகெங்கணு மகிழ்ந்தபெரியோர்களுக்
கருளா திருந்துவிடினு
மவர்மீதுகுற்றமது சொல்வரோசேர்ந்தவ
ரதிஷ்டமென் பார்கள்கண்டாய்

வங்கியந்தருமிசை கனிந்தகனிவாயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௫௭

அரசர் கவிவாணர்க்குச் செய்யுமுபசாரம்.

போசனவசந்தமலர் மாலைதாம்பூலம்
பொருந்துவஸ் திரபூஷணம்
புரவியொடுகவிகையுஞ் சிவிகைவரிவாத்தியம்
பூமிமனை தனதானியம்
தூசலவுதுவசமெனும் வெருமானசோடசர்
தூதரால் வரவழைத்தல்
தோன்றுமுன் னெழுதல்வந் தருள்கெனத் தழுவுத
றுதித்திட விருக்கையுதவல்
தேசவெகுமானங்கள் செய்தெழுதல்வழிவிடுத
லிறையங்கி காரமேழாம்
நெறிகொண்டபுவிராசர் கவிராசர்பாற்செய்யு
நீதிமுறை யென்பர்கண்டாய்
வாசவன்பெருவிசய சூதனெனுநாதனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே. ௫௮

புல்லர் நல்லோர்குண மறியாரெனல்.

சந்தனவனந்தனி லிருந்துமதன் மணமதைச்
சற்றுமறி யார்கிராதர்
தரளங்குளிக்குமவ ரதன்மாலையணியார்கள்
சங்குமணி தன்னையணிவார்
கந்தமலி தாமரை யடுத்துமண்டுகங்
கருஞ்சேறு தன்னையருந்துங்
காமருவுதேமாவின் மிசையிருந்தாலுமோ
காகமது வேம்புறுகரும்
அந்தவகைபோலநல் லோர்தமையடுத்தே
யனேகநாட் பழகிவிடினு

மற்பரத்தை மறிகின்ற தறிவதல்லாமன்மற்
றவர்மகிமை யறிவார்களோ
வந்திடுகணைத்தன்னி லவர்பெருமையறிகின்ற
மணவாள நாராயணன்
மணதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே 59

புல்லரைப் பாடும் புலவர்பயன்பெறுமை

நாவினிற்சொல்லுநய முங்கண்டுவஞ்சகரை
நட்டென்று வருநேயரும்
நவமதனையென்னவெழில் கண்டுபேடன்றனை
நாடிவரு மடமாதரும்
காவினிலுயர்ச்சியும் பசுமையுங்கண்டிலவு
காத்திருக்கின்ற கிளியுங்
கானலைக்கண்டுபுன லென்னவேயானைக்கொண்டு
கருதியே யெகுமானும்
பூவினிற்பொலிவுடனை முங்கண்டுகேதகை
பொருந்துதே னுடுமளியும்
புல்லர்தஞ்செல்வங்கள் கண்டுதுதிசெய்திடும்
பலவர்செய லொக்குமென்பார்
மாவினிற்குயில்வேலை வாவெலுங்களமுறின்
மணவாள நாராயணன்
மணதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. 60

மேலோர்செயல் கீழோர்க்காகாமை.

எந்தவினைசெய்தாலு முனிவோர்கண்மாதவ
மிசைத்தாற் பெருமைபெறுவர்
நிகழ்ந்துலகைசொல்லினுங் கவிராஜர்வித்தையா
லென்றுமிகுமேன்மைபெறுவார்
பகைதமதபாலொன்று வழுவினுந்துரைகள்செந்
திருவினாற் புகழ்சிறப்பார்
சீரியர்களெப்படி புரிந்தாலுமேற்குமது
சிறுமையோர் செய்யவசமோ

நத்தியநெறிதப்பியே நடக்காலுமது
துணைமத யானையென்பார்
தானுமப்படி தவறு செய்யிலேபேயென்று
தள்ளுமுனி வரர்கள்கண்டாய்
மந்திசெரிபிடபகிரி தன்னிலுறைவாசனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே 61

இதுஇல்லையாயின் இதுவிளங்காதெனல்.

சந்திரனிலாவிரவு மதுரமில்லாதகவி
தனயரில் லாதசெல்வந்
தற்சனமிலாதனூர் புரவியில்லாதபடை
தளபதியிலாதசேனை
பைந்தொடியிலாதமனை பாடலில்லாவோசை
பத்தியில் லாதபூசை
பார்த்திபரிலாதபட் டணமூகமந்திரிகள்
பற்பல பலாதவாக
கந்தமில்லாதமலர் சதுரியமிலாதவாய்
கல்வியில் லாததேகங்
மஞ்சினையமில்லா நியாயசுதியில்லாத
கன்மமுபதேசமில்லா
மார்த்தமிலைவித்வசன மில்லாதசபையென்பர்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே 62

சங்கீதச் சிறப்பு.

வபுருசெரியாமன்மணி யெயிறுதோன்றுமல்கிழ்
புளாமலங்கசேட்டை
புரிவசமன்மிகுதல்லை யனசயாமன்மிடறுதான்
பொருமிஷம் மாமசியல்பாய்ச்

திருவேங்கடசதகம்,

கருதிலையகாருணா நீதியொப்பில்லையின்
றெனிப்புருடர்ப்பிரசையுக
ஞாயதத்திருவேயாசை யிடையேறுகையமேவரு
தோன்றும விலை...
தருமதாரவுறுதயக ...சாளிகள்முரு
சங்கிரஷி ...தவியமுற
சகலாக்கு... தாமிமவள்
சரசருண வகுரியவளிலை
மருவிரிதழ்ப்பருக்கனை யமதுவிருப்புமோ
மணவாள நாராயணன்
மணித்துறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே

பாதச் சிறப்பு

பாதாளமூன்றுமி டங்கயிருந்தொனிசெயும்
பண்புபெறு வோரலைக்குளி
பலராகதிகவொம் தாளங்கொள்கணிக்கும்
பாடுவேர்சு படகன்
காதானேமன்மைமுறடையாதக்கிங்கேமற்
கண்ணுமுடை வோவட்டோளர்
கையின்மேல்விரிபுமம் கைகிப்பிணமிமையர்
காட்டவுமேனமதிம்
காதாளையமார்க்க மாருபிங்கிதர்சு
சொல்லுமை வேபரிசம்
மலதுதிபெற்றடைப்ப சங்கமதில்வேலுதொனி
தெரியாத சமையேசம
தாளமுடனாகி டைமபிப்போதனே
மணவாள நாராயணன்
மணித்துறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே

நாடகச் சிறப்பு

சகத்தபரிமளவஸ்தர பூஷைணலங்கிருத
சோபெரூஸ் தியுவேண்டுக்

தோகையர்களும்பரி சனங்களுங்கூடியே
சொற்படி நடத்தல்வேண்டும்
மிருந்தால்தாரிக் கம்புமென்முதலான
மேன்மையேபோ லின்பாசயாம்
வேஷங்களதமுஞ் பாதியுப்பாஷையும்
வெவ்வே றிருத்தல்வேணுங்
புகழ்ந்தபதமிங்கிதம பரிகாசவிடங்கள்
புண்ணிய கதாப்ரசங்கம
போற்றுபாவனாமிகுநாகதாளஞ்சுருதி
புகழ்ந்திசை நய பதகு...ணம
மகிழுந்திடுஞ்சபைதேவர் சபையென்றுசொல்வர்காண்
மணவாள நாராயணன்
மணதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடநாயகனே 65

விசித்ர வித்தைச் சிறப்பு

சத்திகணபதிதுர்க்கை சர்வவசியாகாளி
சாமுண்டி யென்மோகினிச்
சங்கபோஜயகண்டி டக்கைகைத்தாளங்கள்
சத்தமொடு மிகமுழங்கச
சித்ரமிகுமாத்திரைக் கோவின்முறையங்கமுறை
செப்பிமுறை பத்துமுறைகள்
செய்யுமுறைமையபத்து ராஜசஜகரணங்கள்
சேர்ந்தகோ கரணமார்க்கம்
வித்தைபுரிஸ்தம்பனை தாதியபயஷ்டாங்க
விதமா மயேந்த்ரசாலம்
மிகுமந்த்ரசாலமுத லானசெப்பிடுவித்தை
மேன்மையவர் தந்த்ரநீதி
நிந்தகசாரசதே வேந்த்ரனுந்தெரியவோ
மணவாளநாராயணன்
மணதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடநாயகனே 66

பௌராணிகர்

ஆருக்குமானந்தமாகவே பொருள்சொல்லு
மவனே புராணிகபுண
ணங்கமொடுகிரகதிலே கணிதமுந்தெரிகுவோ
னருள்புரோ கிதபூசுரன்
சீருற்றசபையெலா மெச்சப்ரசங்கமுறை
செப்புமவனேவித்துவான்
செய்யுமந்திரயந்த்ர தந்த்ரமொடு
சிலனே மந்த்ரவாதி
ஏருற்றகல்விகுண மேன்மைபோதங்க
ளிசையுமவ னாசாரியு
னென்றுமவர்சொற்படி நடந்தாயபக்தியோ
டிருக்குமவனே சீஷனாகும்
மாருக்குவேதாந்த வாசனே நேசனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே

மருத்துவ னியல்பு,

திரமானசாஸ்திர முணர்ந்தொருசிகிச்சையது
செய்திட வழைத்தபின்போய்த்
தேசகாலஞ்சாதி தேகங்குணம்பிணி
திறக்குமா றுந்தெளிந்து
காமானநாடிமுத லெட்டுப்பரிட்சையுங்
கண்டுகலி கங்கியாழுங்
கனகுளிகைபஸ்பமொடு சிந்தூரஞ்சூரணம்
கருதுலேகியதயிலமாம்
பரமானநன்மருந்துங் கொடுத்துசிதமாய்ப்
பத்தியமுவெளிதாகவே
பரிவுபெறுமாரோக்கி யஞ்செய்துதிரளாசை
பகராத பண்டிதனெனின்
வரமானதன்வந் திரிக்குநிகர்செல்வர்காண்
மணவாள நாராயணன்

மனதிலுறையலர்மேலுமங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே 68

ஈனர்மருத்துவனுக்குச் செய்யுமுறைமை

சேர்க்கின்றதனைரோகமுற்றால்வைத்தியன்
தெய்வமாக் கேட்டதெல்லாந்
திரைகொடுப்போமென்பர் நிருமிப்பிணிபொன்று
செப்பினு லன்றுகுருவாம்
பார்க்கின்றதுளிகையது தந்தபின்
பாதிலுருவானபின்ப
பண்பான துணைவனு ரோக்கியஞ்செய்தபின்
பார்க்கின்றமைக்கனனுமாம்
ஏர்க்கின்றமற்றைநாளையன்மறுநாளினி
லிவைச்சுகடனுளிமருகா
னொதிர்வரிற்பார்க்கவாளியாருமிப்படியென்று
மீனர்சிலருண்டுகண்டாய்
மார்க்கின்றதனைவொடு வளர்கின்றவள்ளலே
மணவாளநாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே 69

ஆராயாதுசெய்யுமெழுவரடையுங்கதி.

நீதிவழுவாமைக வழக்குரைப்போர்களு
நிறைந்தநிதி விதிகளெல்லா
நீங்குபரிகாரமுறை செல்குவோருப்பிணி
நிறுத்தவரு பண்டிதர்களும்
சோதிடஞ்சொல்லுபடு ரோகிகருமலக்
குறித்தசெங் கோல்வேந்தரும்
தூயவுபதேசதேசிகருமவர்சீஷருஞ்
சொல்லுமிவரேழுபேரும்
ஆதிமறைநூலுறைசெய்த விதமாராய்ந்
தறிந்துசெய்யாதுசெயிலே
வடைக்கலப்பொருளைக் கவர்ந்திடும்பேரினு
மதோகதியடைவர்கண்டாய்

திருவேங்கடசதகம்

மாதிரமெங்கெங்கடல் வளர்ந்தநெடுமாயனை
மணவாள நாராயணன்
மணித்திருமறையலர்மேலு மங்கைமணவாளனை
வடவேங்கடநாயனை

நித்தியகருமச் சிறப்பு

கருணை தவிழ்ந்திடுமே சந்தியவந்தனமுடன்
ஒருஜப தவோமமும்
கடவுளோர் பூசையுஞ் செய்துவேதாகமக்
கல்வியது முறைபடித்துத்
தருமத்தியானமும் கருமமார்த்தியோடு
தர்மதத்துவப் புகழினுடன்
முழுமையுசெய்துமா மாயனைப்போற்றியே
சந்நியாசி தருமன்னனி
பரிவுடன் நின்திருக் கோயில்வலமாகிப்
பணிந்துபத சேவைசெய்து
பண்பாகக்கூற நயந்தின்மலமீந்து
பரியுட சேவமிழ்க்க
மருவியேவாழுமில் வாழ்க்கையேவாழ்வுநான
மணவாள நாராயணன்
மணித்திருமறையலர்மேலு மங்கைமணவாளனை
வடவேங்கடநாயனை

குடிவாழ்க்கைச் சிறப்பு

மிக்கதெய்வத்தலமு ஞானகுருபீடமும்
விளங்குமா நதியுமானயோர்
மேவியவிராமரும் தூயகலைமுத்தனமு
மேலாகமுடையநாட்டில்
முக்கனித்தருஞ் சாலை நீர்வளக்குடிவள
முயங்குபயிர வளமுமாய்
செழித்ததார்த்தலமுஞ் செழிப்பதாயக்கோர்வீதி
முதலாய் விளங்குமில
தக்கவீதருவீதியொரு மடவெிசாலமாய்ச்
சாக்கதிக் காமமீனயிற

றனதானியங்கறவைமுதலானசெல்வங்
தழைத்தென் றானமுதவி
மக்கண்மக்களொடு வாழ்வதேவாழ்வுகாண்
மணவாள நாராயணன்
மனதிலிறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே 72

மருத்துவர் செல்லத்தகாவிடங்கள்,

தீராதரோகமுடை யோரிடமுமுண்மையது
செப்பாதபொய்யரிடமுஞ்
சீரானவொருவர்பண் டிதமின்றிவைகுவித்துஞ்
செய்துகொள் வோர்களிடமும்
ஏராதகோபமுறு மூர்க்கமன்னவரிடமு
மேற்றிழையை மனதுபிரியா
வின்பமாமதிவிரக மனகாமுகரிடமு
மெப்படி நலஞ்செய்யினும்
ஆராலோபரிட மும்பத்தியற்றனைத்
தாழ்வுசெய வோர்களிடமுஞ்
சகலசனகண்டக ரெனுந்துஷ்டரிடமுமிகு
தனமாரியேபொழியினும்
வாராதிருப்பதே பண்டிதர்கணீதிகாண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே 73

நோய்க்கிடங்கொடார் செய்கை

சனிபுதன்றனிலெண்ணெய் வெந்நீரின்மூழ்குவார்
சாருமிள வெயில்விரும்பார்
தம்வயதின்மேலான மங்கையைச்சேரார்
சதாகாலம் வழியினடவார்
பனியிலுங்காற்றிலும் மெய்வருந்தார்மடைப்
பள்ளியிற் சேவசயிரார்

பழங்கறியருந்தா ரிரண்டடைக்காறொன்று
பலகால முழ்கிட்டிடார்
கனியொடுகிழங்குகளை யிருந்துபுசியார்பசி
கலந்தன்றி யுணவுசெய்யார்
காய்சசுபா லுண்பர்நீ யோர்கூட்டுவார்தினங்
காவேரி தனில்மூழ்குவார்
மனிதரிவரிவர்சொன்ன பேர்க்குநோய்சேருமோ
மணவாள நாராயணன்
மனதிலுறை லர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. 74

தந்தைமுதலியோராவார் இவரெனல்.

நிலமுடன்கிருகமுஞ் செல்வமுங்கந்துகட
ளிலுனையொன் றில்லாமலே
நிறைகல்வியுமொசெய்து நெறியொடுவளர்க்கின்ற
நேசனே யுயர்தந்தையாம்
தலைம்தியமெனவெ வளர்ந்தபின்செல்வங்கள்
கண்டுமிக மனமகிழ்ந்து
அருதரியபுத்திரன் போலமருமகளையுங்
கருணைசெய் பவளன்னையாம்
பலகலையுணர்ந்துமிகு செல்வமுங்தேடிப்
பகிர்ந்துதன் பேர்விளங்கப்
பண்பான தந்தைதாய்க் குகனியேயவர்சொன்ன
படிசெய்கு வோன்புத்ரனும்
மலர்பொழிசெழுஞ்சோலை மலைவளருமாயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. 75

கற்புநல்வ ளியல்பு.

அரிதான மாதவஞ் செய்கின்றமுனிவோ
ரடைந்திலை ரந்தனைப்பேர்

லடுத்ததார்தமைக்காத்து மிக்கமேலவர்தமை
யடக்குமுன் சக்கரம்போல்
பெரியோரிருக்கின்ற சபையினிற்கவிராஜர்
பேசுமப்ர சங்கமதுபோல்
பேருலகமெய்க்கவரு மநுநீதிமுடிவேந்தர்
பெருகின்ற மகிாத்திபோல்
ஒருகோடிநட்சத்தி ரங்களுடனேவே
யுதித்தசந் திரனைப்போ
லுபயகுலத்தனும் யதிபதன்போலவே
யொருபிள்ளை போதுமவனுல்
மாபெலாநன்மைபெ றுமுடியுமென்பார்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே. 76

சகோதரரொருமை.

தனதுபட்டத்தினைத் தம்பியர்க்கீயெனத்
தந்துகை முக்கமையவுந்
தமையனூர்வருமளவு மரிவிரதமாகவே
தபசுபுரி யுந்தம்பியும்
தனதனைப்பாலிக்க தாய்தனைப்போலவே
கருணைசெய் திருமகனியும்
காலூன்றநின்றதுபோற் றிருவடிகள்பணியுங்
கனிட்டனிட மனைமாட்டியும்
தினந்தினம்பரிவாகி யம்மையேயென்றுபேர்
செப்புங் கொழுந்தனுறு
சேர்ந்துவாழ்கின்றபோ லிரதயுகந்தனிற்
றசரத குமாரர்கண்டாய்
வனசமலர்கமழ்கின்ற வாவிசூழ்களத்தூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே. 77

திருவேங்கடசதகம்.

வேட்டகத்தியல்பு.

நாரிகைதனைத்தந்த மாமனார்மனைதனிற்
சருகணைமரு மகன்வந்திடிற்
கண்டவுடனேசார வுபசாரமாகவே
கனிருகதுகள் சமைப்பார்
சேருநாள்மூன்றினி லையபட்சத்திற்
கெலித்தசன திரைதயம்பேறும்
தினந்தினப் பெருமைகுறையுங்காரியங்களுஞ்
செய்வெய்ப ரதனைதமுதல்லோர்
ஆருயிமனைஞர்கண்ணைமதி ஞானர்சரசபரிகாச
மதிகமா மனைவிவெளியிலே
வன்புடன்சொன்னபடி கேளாளிதாகையா
வாதிபெருகுநயமல்லவோ
வாருமென்றவரோக வசனமூனுசொல்வர்காண்
வளைவாள் கரரயனை
மனதிலுறையலர்மேலு மங்கைமணமாளனே
வரதவேங் கடராயனே.

மானங்கெட்டுப் பிழைப்பவரிவரெனல்.

நேசமூமுதிநமதிதனை துறவின்றுன்மருகன்மனை
நிலைபென்று வாழ்ந்தபேரும்
நேரிழையுனைத்தந்த மாமனார்மனைதன்னி
னீங்கா திருந்தபேரும்
பேசரியகல்விதெரி யாமூடர்பேரிற்பர
பந்தகவி சொன்னபேரும்
பெருமைபேய்க்கள்ளக் கடன்கள்பட்டுப்
பிழைத்துயிர சமந்தபேரும்
ஏசலருபனையாளர் தங்களைமுனைவரகட்டி
யேவல்செய் கின்றபேரு
மீனமதுபார்ப்பரோ வழிருசனைன்றிவர்க்
கென்சாலு வழிதுகண்டாய்

வாசமலர்மங்கைமுடி கொண்டுவளர்களூரின்
மணவாள நாராயணன்
மணதிறுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. 79

கற்புடைய பெண்டிரியல்பு

ஓதுஜபபூசைகட் கினியகுற்றேவல்க
ளுகந்துசெய் போதுகுருவா
முறைகொண்டசரசஞ்செய் போதுமன்மதனு
மொழிந்தவை ளோதெய்வமாம்
நாதனைக்கருதியவ னுண்டகுறையமுதாக
கவில்வேக யுபந்தசமாம்
நதியாடபலனோன்பு தேவதாதரிசன
நயந்தபல விரதமுடன்
பாததரிசனமாக்கொள் சுத்தியாய்ப்புத்தியாய்ப்
பத்தியாய்க் கடவிறுழும்
பாரென் றுகலைவிலுமை செய்கிறுஞ் செய்கின்ற
பதிவிரத மாக்கயானை
மாதர்புகழ்கீதியே னுதிபெற்றதல்லவோ
மணவாள நாராயணன்
மணதிறுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. 80

நற்பெண்டீ ரியல்பு.

பஞ்சணையுகைருகாக நின் றுவாவெல்றயின்
பரிவினுட னைருகில்வந்து
பாக்கிலைமடித்தரு ளிகுமெத்தைதயில்வந்து
பரிமள மிகத்திமிர்ந்து
கொஞ்சிமலர்சூடியிசை பாடிவிளையாடியே
கொக்கோக விதமறிந்து
கூடியிதமிருவோரு முறையிபருகினியபுட்
குமலோசை மிகமுழங்க

கெஞ்சுமகிழ்வொடுசோத காணகரிகரவுபரி
கேயாகி கேளிதன்னால்
கிறையயிர்சபோகசம் போகமைபொசமுட
னீங்காத யோகமுகவும்
வஞ்சியினலாதுமனய வேறொன்றின்மகிழுமோ
மணவாள நாராயணன்
மணதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௮௧

தீப்பெண்டு ரியல்பு.

ஐயருக்கமுதுபடை யென்றுவந்தாய்நீயு
மாண்பிள்ளையென் றெண்ணலோ
வரிசியெங்கேபானை சட்டியெங்கேயென்ப
ளவள்சொன்ன வகைகளெல்லாம்
பையவேகொண்டுவந் தாலுசமைக்கப்
படாதுகலே நோருதென்று
பாயிற்கிடப்பள்சினை மாயென்றுபேசினால்
பாருனக் கேற்றபுத்தி
செய்யவல்லேனென்பள் சற்றடித்தாலஞ்சு
தின்கிறேன கூகூவெனத்
தெருவீடுதோறுமுறை யிருபெண்டிருண்டெனிற்
றீயகமன் வேறுமுண்டோ
வையகம்புகழ்சோலை மலையலங்காரனே
மணவாள நாராயணன்
மணதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௮௨

பரத்தையரியல்பு.

கொச்சிபுறுமஞ்சள்வங் காளமுறுபச்சையிலை
கூறுசண் பகமொட்டுடன்
கூடியசலங்குவஞ் சனமாடிபொற்கண்டை
கொண்டவெண் டுகிலுடுத்தி
கச்சிளங்கொங்கைமேற் சந்தபரிமளகளப
கஸ்தூரி குமுகுமென்னக்

கனகநவரத்னமய பூஷணம்பூண்டுகிளி
கையின்மிசை யேந்திகலமாய்
பச்சைமயில்போலவிரதி வேளைக்குமிருசரச
பரியாச நகைபுரிந்து
பண்பான மேடையுப் பரிகையினிலிருக்கும்
பரத்தையுண் டாவளென்றால்
வச்ரதாரனுலகத்த ரம்பையிலுமதிகமா
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௮௰

பிரௌடை வேசையியல்பு.

ஆசையுடனொருவிரக புருஷன்வந்தான்மி கு
மாசார வுபசாரமா
யாசனங்கனிலெழுந் தருளுமென்றிருந்
தழகான வொருகட்டிலே
நேசமொடுதாம்பூல முதவியேயவனுடைய
நெறிகண்டு வரவழைத்து
நீதியாயங்கநாள் வந்தீர்பின்னெனை
நினைக்கிலீ ரென்கோவென்று
பேசரியசங்கீத சரசசல்லாபப்ர
சங்கமொடு ரதிகேளியில்
பிரியமுடனேயணைந் தின்பமாயுசிதம்
பெறிற்ப்ரௌடை வேசையென்பார்
வாசமிகுபைந்துளப மாலையணிமார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே.

பரத்தையரிழிவு.

விலைமாதர்வீடுசவு ளிக்கடைபடுக்கையது
மேவுமனை போதலம்பலம்
மெத்தையதுசந்தியிற் டாறையவரங்கமோ
மேவியபடித் துறையதாம்

கலைமருவுமவர்க்கு வோடம்பிருகொங்கை
கடையிலெலு மிச்சமபழும
கனிவாய்படிக்கமிகு ஞானகடன்னிர்ப்பந்தல்
கட்டுகந லிக்கம்பமாம்
முப்பமார்புவாடைக்குக் குகிரைமிடையேயணிபவர்
மோகமெனி வெட்டிக்குனி
மொழிமுயற்கொம்புசேரியபுவெங்கோரனைய
முறைநமயினை கண்டிருந்தும்
மலைவுபெறுவார்களவர் வார்த்தைக்குநேயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கையணவாளனே
வரதவேங் கடராயனே. ௮௫

சரீரநிலையாமை.

ஆகாயமீதினி லெறிநகசிலைகாற்றினை
யடைவைக் கிடுவருகதி
யனலிட்டமெழுகுவயி லிடையிட்டவெண்
ணெய்சுறியாற்றிடை யெழுந்தகுமிழி
மோகவிகாரமொடு வருகின்றமின்னல்விழி
மூடுதுயில் கண்டகனவு
மோதிவருகாற்றினிற் றீவிழுந்திடுபஞ்சு
மூச்சோடுகின்றபதுமை
மீகாமனில்லாத கப்பல்கண்ணிமைபோல்
விளங்கவரு தேகமிதனை
மெய்யென்றுமெய்யெலாம் பொய்யென்றுதிரிகின்ற
விழலனெனை யாளவினைவாய்
மாகாளமுகிலனைய மெய்யனே துய்யனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௮௬

நல்வினைசெய்வார்பேறு.

ஓதுமாதாபிதா குருதெய்வவிசுவாச
முடனிதி பூசைசெய்வோ

குற்றபாதாரசோ தரமாகுவோரிந்த
மொருவர்க்கு மெண்ணிலாதோர்
பூதயவுள்ளோர் சகாயமேபுரிகுவார
பொய்யிலா வாய்மையுடையோர
பூர்வமார்ந்தருமபரி பாலனம்பண்ணுவோர்
பூஞ்சோலை நந்தவனம்
பாதையிடமண்டபங் கூபந்தடாகநீர்ப்
பந்தர்முத லாய்ப்புரிகுவோர்
பண்பாமிவர்க்குமலை போல்வந்தவினையெலாம்
பனிபோல நீங்கிலமாய்
[illegible]ர்தவமுருந்தவுன் பாதமேபெறுவர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. அஎ

மாதர் அவயவமயக்கு.

[illegible]க்குமிகவோராறுகின்றகுழன் முகிலென்பர்
தி[illegible]க்கைத மாறுகவாய்
செம்பவளமென்பாசனி கொண்டுநீர்மாறுத
சிறுநாசி குமிழதென்பர்
பக்குமதன்றிவிழு கின்றமுலையானதோற்
பையமக மேருவென்பர்
பாராதகரகத்துவாரமாங் குழிதனைப்
பகரின்ப வாரியென்பர்
மிக்குவருத்தமுஞ் சியுமென் பும்போர்த்த
மேனிமலர் மாலையென்பர்
மீளாதநரகந் தருஞ்சிறியவின்பமதை
மேவின்ப வீடென்பரிம்
மைக்கருங்கடலிலெனை விழாமலாளுவாய்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. அஅ

நீதியின்பெருமை,

வித்தைதயேசெய்திடுங் குருபீடமொன்னவனை
வென்றுயரு கின்றதளவாய்
மித்திரர்கள்பகைவரா மேலவர்களேயரா
விந்தைபுரி காருபதி
புத்திகலமேசொல்லு மதிமந்திரியாவரும்
புகழ்கின்ற வதியகுளிகை
புணகமுலைமாதருக் கதிருபவின்பம்
பொருந்தவரு காமதேனு
நித்தமும்பெருமையே செய்பொருடானென்மொழிவர்.
நிலைசெயத் தக்கக்ஷாத்ரம்
சேர்ந்தமிழ்பெண்கிற வாதங்கசேசுசி
நினைத்தவெல் லாங்கொணர்ந்தே
வைத்திடுங்குலதெய்வ நிதியன்றிவேறு
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாசலனே. ௮௯

உயர்ந்தபொருளிருக்குமிடத்து இழிந்த பொருளிருக்குமெனல்.

கோகனகமலர்மலர்ந் தாறுகின்றவாவியிற்
கொட்டியு மலர்ந்திருக்குங்
கோகிலந்தொனிசெயுந் தேமாவனந்தனிற்
கூறுவாய்ப் பக்ஷியுறையும்
ஏகமெனவுலகம் புரிந்தமன்னவர்சபையி
லீனமன் னருமேவுமா
நிலகுமாணிக்கங்கள் விற்கின்றகடைவீதி
யிப்பாலை மணியும்விற்பார்
பாகனையமதுரரச லளிதப்ரபந்தகவி
பாடிமன்னவர்கள் சபையில்
பழங்காடிதனிலும் புனிதயுன்கவிசொலும்
பாவலருமுண்டுகண்டாய்

மாகனக முறையுமொரு மணியணியு மார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. ௬௰

சேர்ந்தவினத்தின் குணம்பெறுவோர் பெருதோ ரிவரெனல்.

சோதிகரத்நமணி மாலையிடை நூலுஞ்
துலக்குமணி யாய்விளங்குஞ்
சுவைப்பழந் தன்னுடன் சேர்ந்தசெம் பொன்னுஞ்
அருப்புபோலவே மிகக்கும்
வீதிபொழுகுமடையி லிருந்தாலுமாணிக்க
மெய்ம்மறைந் காசொளிவிடும்
மிகவுஞ்செழுந்தேன் சொரிந்தேவளர்க்கினும்
வெள்ளுள்ளி நாற்றமாறா
காதலாய்ச்சேர்ந்தவி னங்களைப்போலவே
பணிவிலிருப்பவர் சிலபேர்
நார்சொல்லினுந்தங்கள் சுயம்குணம்விடாமலே
யமைவற்று வாழ்வர்சிலபேர்
மாதரகில்கொண்டொரு குறுந்தேறுமாயனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௬௧

வல்லோர்க்கும் பல்லோரால் தாழ்வு வருமெனல்,

பாபாசர்வசாமகு டந்தகர்த்திடுசத்தி
பஞ்சமெத்தைக்கு நாணும்
பணிராசர்வணிமுடிகள் சிதறநடமிடுதோகை
பச்சோந்தி யாலடங்கும்
கராசமார்த்தாண்ட சந்திரகிரணங்களொ
கட்செவி னுன்மறைபடும்
கணைதபுரிவிகடதட மத்தமாதங்கமொரு
கனல்சிறு கண்டியமாம்

சுராசகங்காப்ர வாகநிரூற்றுமொரு
துய்யசிலை யான்மதிபடுஞ்
சொல்லின்றபெரியோர்க ளென்றுனுமப்பாரற்
றோல்விகொடு மூறிவர்கண்டார்
வாராசதசரக மகாராசபுத்ரனே
மணவாள நாராயணன்
மனதிலுறைபலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாரயனே. கஉ

நல்லோர் புகழ்நிலை பேறு.

விசயன்மனுவுடனிட்சு வாகுகுசநாபன்
விகுட்சிராகு காகுஸ்தனும்
மிருமம்மரீஷன்மாந் தாதன்முசுகுந்தன்
விசாலனை நிணபிந்து
சசியிந்துவொடுதிலீ பன்னரிச்சந்திரன்
சர்வதா மன்பரதனே
சந்தனுநளன்சத்ய விரதன்பகீரதன்
சகரனொடு தானசன்னன்
தெசரதன்மருத்துப் புரூரவன்சென்னியே
திரிசங்கு மூடன்யயாதி
சத்யசேனன்வீர சேனன்ருதுபனனிக்ர
சேனன்விதுரன்பாண்டவர்
வசுதேவனாதியோர் புகழன்றிநின்றநிலை
மணவாள நாராயணன்
மனதிலுறைபலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாரயனே. கங

நியோகாபதிநிலை பேறு.

சூரனொடுபானுகோபன் றிரிபுரத்தினேர்
தாரகனை மதுகைடபர்
துர்துமகிடாசுரன் சம்பரசலந்தரர்
தூஷணன் றிரிசிரகரர்

வீராவணகும்பகர்ணனிந்திரசித்து
மிருகனக னிரணியாட்சன்
வெய்யவாதாவிவில் வலனுடன் சூர்ப்பநகை
மேவுமசமுகி தாடகை
தாருலவுசிசுபால தந்தவக்கிரர்சரர்
சந்தனொ டுடம்பிசகன்
சகுனிதுரியோதனன் கஞ்சன்முதலாயினோர்
தங்களைய யிர்த்தியல்லால்
வாரிசூழ்புவியிலவர் கொடுமைநிலையின்றதோ
மணவாள நாராயணன்
மனதிலுறைபலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௬௪

வானப்பிரஸ்தன் முதலானோரியல்பு

ஒருபொழுதுமவமே யிராமனைற்கருமங்க
ளுணர்வுடன் செய்துமினிய
ளொடுகொமயின்றியுன் பாதங்கள்போற்றிவரு
முறைவன்வானப் பிரஸ்தன்
கருமமுடனுவாதபக வற்கினைத்துதிசெய்து
காயமுதலாமூன்றுங்
கருகாமலொருபோது சுவைநீக்கிமேயுண்ட
கருணையோன் சன்னியாசி
இருவினையுமவைசெய்த துஞ்செயச்செய்வது
மின்பமுங் கனதுன்பமு
மெண்ணியசாதிமா பும்பலவுமுன்செய்கை
யென்றெண்ணி யடிகடொழுது
வொருமைவினையவதூத மெய்ஞ்ஞானியென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறைபலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௬௫

உத்தமர் முதலானோர்கள்.

விநயமுடனன்னமுஞ் சுகமுமேஷமுமென்ன
    வித்தையுற தன்னையறிவார்
மிருகாமையுகற்பகங் கன்னன்மலர்போன்மரபு
    விதமாய் விளங்கவருவார்
பனிமிறைநெடுகொளிகோங்கமுக மென்னவே
    பரிந்தவர்க் கன்புகூர்வார்
பனசமுஞ்சூதமும் பாடலமுமன்னவே
    பண்பினுட னுதவிசெய்வார்
சினமருவினிமொழுத் தொடுமணலெழுத்துடன்
    சிலையெழுத் தெனமாறுவார்
செப்புமிவாதனையாதி யக்கமாப்பார்க்கவே
    சிக்கைதனி லாய்ந்துபுவிமேல்
மனிதருத்தமர்கன்மத் திமரதர்மூவர்காண்
    மணவாள நாராயணன்
மனைதிருவுறையலர்மேலு மங்கைமணவாளனே
    வரதவேங் கடாரயனே. ௪௬

தேசங்களின் பெயர்கள்.

அங்கமத்திரமாள வங்காளவங்கேகக
    யரியம் பாரசீன
மாந்திரமாடமே கன்னமிடங்கள
    மலந்திபொடி சேகிதருதம்
கங்கைதிகழ்காஸ்மீர மச்சங்கொடங்
    கருகமே ஆரசனங்
கலிங்கமொடு வங்காள கேபாளசிங்களன்
    கனத்ததுளு வங்கோளம்
கொங்கணைப்பேடங்கிரி கர்த்தப்புளிந்தங்
    குளிங்கங் கிராடமகயில்
கூர்ச்சரமயப்பாம்வி கற்பகாம்போஜாங்
    கோசலஞ் சிந்துகொளடம்

வங்கமும்பணிகின்ற கருடகிரிவாசனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௬௭

தேசமுதல் அண்டமளவாக நிற்குநிலை.

ஒட்டமுறுசாதகஞ் சவ்வீரபாஞ்சால
மோங்குலிட தங்கடார
முகந்தாஞ்சோனகஞ் சீனகாந்தாரமோ
டேலாவுமலை யாளவங்கம்
இட்டமுறுத்ராவிடஞ் சோளபாண்டியமாதி
யெண்ணேழு தேசமாகி
யிலங்குகாதக்கண்ட மாதிரவகண்டங்க
ணேய்ந்தசம் புத்தீவுமே
அட்டதிசைபெற்றதி லேழுபூலோகமிரு
தாதிமே லேழுலோக
முதலமேயாதிகீ ழேழுலோகங்களிவை
யனைவையுமீ தோரண்டமாம்
மட்டிலாவண்டங்க ளுன்றிருவயிற்றிலுரு
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. ௬௮

பதினெண்கணங்களிவையெனல்.

தேவருடனசுரர்கள் சித்தர்கடவித்தியர்
சிறந்திடும் புருடர்கருடர்
செய்யகந்தருவர்கின் னரவிராக்கதபூதர்
திகழ்வே தாளர்முனிவோர்
மேவுவிஞ்சையருரக ரங்காரியக்கதே
மேலுமாகாசவாசர்
மிகுபோகபூமியோர் முதலாயபதினெட்டு
விதமான கணநாதரும்

பூவையர்களுக்கண்டு துதிசெயுந்திருமலை
புகழ்ந்துகோ னேரிமூழ்கிப்
போற்றியுன் சந்நிதி வணங்கியே துதியாத
புன்சனன முஞ்சனனமோ
மாவலியளிந்தசெம் மணிமகுடபாதனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவெங் கடராயனே. ௧௩

பரமபாகவத ராவாரிவரெனல்.

சுகனெனுவியாசன் பராசனெனுசௌனகன்
துய்யநா ரதன்வசிட்டன்
துங்கவான்மீகிமா வலிருக்குமாங்கதன்
சுக்ரீவன் மாருதி
ததிமுகவாலிவீடுமனுடன் பிரகலா
தனன்குசே லன்விஜயனே
தருமனெனுமுசுகுந்த னக்குரூரன் முனி
ஜடாயுவட னம்பரீஷன்
அகலிதிரிசடைமாது பாஞ்சாலிசபரிமு
னைமுத்திடக் கஜராஜனே
யாதிராமாநுஜன் திருவரங்கத்தமுத
னாழ்வார்கள் பன்னிருவரும்
மகிமைபெறுமுன்றொண்டர்பாதமேனுமெனைகொள்ளு
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவெங் கடராயனே.

அடியார்க்கு வருஞ்சிறப்பு

உனதுபாதம்போற்று மடியார்கள்சிந்தையி
லுவந்துநீ யென்றுமுதவா
லுன்னுடையதிருமாக ரென்மருஞ்சேர்வரவ
ருற்றதா னிதிகள்சேரும்
கனிதிகள்சேர்ந்திடத் தனதன்வருவானுடன்
கருணைபுரி நேயன்வருவான்

திருவேங்கடசதகம்.

காதலனெடுத்ததா லுமைமவருவளன்னையாம்
கந்தன்வரு வன்மருகனல்
தனதுமாமன்வருவ னாசன்வாலாலமார்
சகலருங் கண்டுவருவார்
தருமஞ்செழிக்குமருள் சேருமதவன்றியே
தவமொன்று செயல்வேண்டுமே
வனசரோருகமலர் மடந்தைவளர்களமூமின்
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாரயனே. ௱௧

அவையடக்கமும் பிரார்த்தனையும்

ஒருமலையெடுத்துமைத சாந்தவாமனதேவ
ருபயபத சேவைதனையே
புளங்கொண்டுவெண்மணியில் வாழுமுத்தாரையு
னுவநா ரணபாரதி
பொருமலைபெருங்கங்கை யுங்காளியாறும்
பொருந்துகடல்போற் புலவர்கள்
புகழ்சபையிலெனதுவேங் கடசதகமீதிசெறு
புகலவரு நூறுகளியும்
பகவிறுடனைவருங் கேட்டியன்றமிழின்மேற்
பக்ஷமனைத் தாளவருவாய்
பாலகன்புன்சொலைக் கேட்டுமேயகிழுமவர்
பார்மீதி லன்னையலவோ
வருபவர்களிக்ககல் வாழுதவுநேயனே
மணவாள நாராயணன்
மனதிலுறையலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடாரயனே. ௱௨

திருவேங்கடசதகம்.

முற்றிற்று.

கடவுள் துணை.

மலையாள மாந்திரீக அரிச்சுவடி.

விளம்பரம்

இதனால் சகல மானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்; இதுகாலபரியந்தம், அகப்படாமல் யிருந்த மலையாள மாந்திரீகத்தை அநேகர் வேண்டுகோளின் பேரில மலையாள சுவாமி மாருக்களிலொருவராகிய ம-௱-௱-ஸ்ரீ. வேலாயுத சுவாமிகளால், எழுதி முடிவு பெற்ற யெந்திரங்களும் அதற்குரிய பீஜாக்ஷரமூல மந்திரங்களும் புதிதாய் அச்சிட்டு யிருக்கிறது இன்னும் மேற்கபுஸ்தகங்களு மிருக்கிறது வேண்டியவர்கள் நேரிடமாவது வி. பி. மூலியமாவது பெற்றுக் கொள்ளலாம்.

மலையாள மாந்திரீக அரிச்சுவடி.	0—4—0
சந்தமனோதேவி நாடகம	0—4—0
ஞானக்கோர்வை-2-பாகம் சேர்ந்தது	1—0—0
நாலாயிர திவ்ய ப்ரபந்தம	2—0—0
தெரு வடகலை	2—0—0
ஜாதகசிந்தியென்னும் அனுபோக ஜோதிட ப்ரமரகசியம	0—12—0

இப்படிக்கு.

ம-மாதவ கிருஷ்ண முதலியார்.

நெ-11-தாண்டவராயப்பிள்ளைத் தெரு.

சௌகார்பேட் போஸ்ட்.

சென்னை.

மஹாமஹோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்,

மணவாளநாராயண சதகமென்னும்

திருவேங்கடசதகம்

காப்பு,

செந்திருவாழ் மார்பன் றிருவேங் கட சதகம்
பைந்தமிழா னீதிநெறி பாடவே—வந்தருளுங்
கார்முகமஞ் சங்கத்தான் கைத்தாமரையணிந்த
கார்முகமஞ் சங்கத்தான் காப்பு,

—(*)—

தனியன்

ஓங்குதண் டலைசூழு மேகமனை தேன்சொரியு
மோமலூர் வேங்கைபூப
னுதவுமண வாள நாராயணன் களமூரி
னுலகநீ திக்கேட்கமுன்
தேங்குநீர் வயல்சூழும் வெண்மணியில் வாழுமுயர்
செல்வன் மூகதாசையனார்
செழுந்தவ முதித்தநா ராயணபாரதித்
திருவேங்க டச்சதகமே
பாங்குபெறு முலகுளோர்க் கிருகண்மணி யாகவிருட்
பானுவிரு வழிவிழியதாம
பவக்கடல் கடக்கவரு வங்கமாம் பொங்குமொளி
பரவுமெய்ஞ் ஞானவழியாம்
சங்கிக பாத்துனைய தாமிதை படிப்பவர்க
ளியல்வேங்க டேசரன்ற
னிசையருளை யுற்றுநல மேபெருகி வாழுபவ
ரெழுபொன்மலை போல்வாழ்வரே.

—(*)—

திருவேங்கட சதகம்.

நூல்.

கடவுள்வாழ்த்து.

பூமேவு திசைமுகனை யுந்திதனி லீன்றதும்
புதியவே தாகமமெல்லாம்
புருஷோத்த மன்றெய்வ மென்பதும் பூசுரர்கள்
புரியுபந் திரசருமமுந்
தேமேவு மலாமங்கை மார்பிலவளர் சீருஞ்
செகந்தனை காத்தருள்வதுந்
தேவர்முதன் மிர்கசெந்து பட்சிசிலை மாமுஞ்
செழிக்கப் பதந்தருவதும்
பாமேவு பொருளலங்காரஞ் சிறப்பதும
பலவிதமு நீயென்றதாற்
பரதெய்வமுண்டென் றிருப்பார்களெந்நூல
படித்தவித மோதெரிகிலேன்
மாமேவு பைந்துளப மாலையணி மார்பனே
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (க)

அந்தணர்சிறப்பு.

சீலமிகு மாகம புராணமனு நீதியுந்
தேர்ந்துமெய்ஞ் ஞானநிறைவார்
செய்கின்ற யாகாதி மந்த்ர கருமங்களாற்
றேவர்க்குமுதவி செய்வார்
காலமுத லாகிய ப்ரமாணங்கையிற்
கனிபோல வேகாட்டுவார்
காயத்ரி யகிமையாற் சகலதீ வினைகளுங்
கனலிட்ட பஞ்சுசெய்வார்
ஞாலமிசை திங்கண்மும் மாரியங் கொற்றவர்
நடாத்துசெங்கோல் வளமையு
நாடுகள் செழிப்பதுஞ் சகலதருமமும்வேத
நாயகர்மகத்துவங்காண்

வாலகரு டன்பண்டு கண்டகதை யல்லவோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே
வரதவேங் கடராயனே. (௨)

அரசர் சிறப்பு.

சீருலவு மனுநீதி மந்திரிசொ றன்புத்தி
தேசத்தியற்கைநான்குந்
தேர்ந்துசெவி விழிமனது மூன்றினும் பொறுமை
சேர்ந்துசெங் கோல்செலுத்திக்
காருலவு கமலமுங் குமுதமுங் காலங்கள்
சார்ந்துமலர் கின்றவிதமுந்
தந்தியொடு முதலையொரு தானபல முங்கண்டு
தரியலரை வெற்றிகொண்டு
பாருலவு கெடிசேனை தனதானி யஞ்சகல
பாக்கியமு மிகவிளங்கப்
பற்பலதன் மங்களோடு கீர்த்திப்ரதாபம்
படைத்ததிற லோனரசனும்
வாருலவு தனமங்கை மனமகிழு நாதனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வாதவேங் கடராயனே. (௩)

வணிகர் சிறப்பு,

திடமுடன் றன்பன தறிந்துவா ணிபமதே
செய்வரா தாயமிஞ்சிச்
செலவுசெய் யார்யாவர் வருகினுங் கண்டபடி
தேர்ந்துநிறை போலுரைப்பார்
அடகுதக் தாலுமரி யாதையில் லாருக்
கரைக்காசு கடனுமுதவா
ரனமனு நீதியுடையோர்களுரை வாய்மையா
லளவிலாதே பொருள்கொடுப்பார்

கடுகுதனி லெட்டிலொரு கூறுவா லெனினுங்
கணக்குமுறை தன்னில்வழுவார்
காரிய விசேஷமதி லொருகோடி யுதவுவார்
கருணைவர்த் தகர்பெருமைகாண்
வடமலை தினம்பரவு தென்மலைக் கதிபனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௪)

வேளாளர்சிறப்பு.

அந்தணர்கள் தருமமுஞ் சகராசர் புசபலமு
மவனிவர்த் தகலாபமு
மனைவாக்கு மேன்மையுந் தருமமுந் தானமு
மன்புமங் கையரின்பமும்
புத்திதெளி வியமமுஞ் சாத்திரமு மாகம
புராணமொடு சகலகலையும்
பொய்யாத வுண்மையுங் கீர்த்திப்ர தாபமும்
புகழ்கின்ற தேவர்கிலாம்
விந்தைபுரி மானமுங் குலமரபு நீதியும்
விதரண முதற்சகலமும்
வேளாளர் குவலைபுனை காராளர் தங்களுடை
மேழியின் பெருமையன்றோ
மந்தர மெனுமபய சவுந்தர முகுந்தனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௫)

புருஷராய்ப்பிறந்தோர் பெறுபயன்.

புருஷராய்ச் சநனமெடுத்தபேர் மெய்ஞ்ஞான
போதத்தை யறிவதொன்று
பூமியொடு மிக்கதன வானவ தொன்றலது
பூவைஞ் செய்வதொன்று

தருமவானென்று மிகு கீர்த்திமானென்றுநற்
சற்குண விவேகியென்று
சகலருமபுகழ்கின்ற வித்துவானென்றுரண
சங்க்ராம வீரனென்று
சருணசே ரிந்தவகை யில்லாத மனிதரைக்
காசினியிலேன்படைத்தாய்
கருதாதா யுதாமும் பார்க்கின்ற பேர்களிரு
கண்களுஞ் செய்தவினையோ
மருவுலா வியதுளப மாலையணி மார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௧௬)

நகரச்சிறப்பு.

பரகதீ தப்ரபல வேசியர்களாடலும்
பாடலும் பெருகோயிலும்
பலவாவி மண்டபங் கோட்டைய ரணங்களோடு
பலர்மேவு கடைவீதியும்
இரதகச துரகம்ப தாதிசது ரங்கபல
மேற்கின்ற தளகர்த்தனு
மெண்ணமிகு மந்திரிப்ர தானிதா னபதிய
ரியனுத்தி யோகசயனமும
விரதமறை யோராதி நாற்குலமுமொன்றென்று
மிக்கசோடசதானமு
மேலாய்ச் சமீபித்த நதியுமாய் மதநீதி
வேந்தனும் பெருபட்டணம்
வாதருணை சிங்க பட்டண மெனச்சொல்வர்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௧௭)

அரசர்க்குரிய தொழிலாளரியல்பு.

காரியா காரியங் கொற்றவர் தெரிந்திடக்
கண்டுசொல் வோன்மந்திரி
காலமுந் தன்பலமு மெண்ணியிகல் வென்றிடக்
கருதுவோன் றளகர்த்தனும்
சீரிய தலங்களொடு ராச்சியஞ் சகலமுந்
திட்டமிடுவோன் ப்ரதானி
செய்ய வாசகதாட்டி யவதான வக்கணை
சிறக்குமவ னோராயசன்
சூரியன் றிசைமாறி னுந்தான் றொடுத்தவத்
தொகைவிடான் கருணீகனுஞ்
சொல்வன்மை சபைவன்மை பரராசர் வன்மை
சுமுகனே தானுபதி [தெரி
மாரியது காதகருணு மணிமேக வண்ணனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (அ)

இதனா லிஃதுளதாமெனல்.

அதிகார மதுவந்து சேரிலெவ ருக்குமே
யதிகவல் லமைசளுண்டா
மாடை யாபரணங்கள் சேரிலெவ ருக்குமே
யழகுபெறு வளமையுண்டாம்
நிதிமேவு செல்வமது சேரிலெவ ருக்குமே
நிறைகின்ற மேன்மையுண்டாம்
நெஞ்சமகிழ் விதரணஞ் சேரிலெவ ருக்குமே
நிலைபெற்ற கீர்த்தியுண்டாம்
துதிமேவு பத்தியது சேரிலெவ ருக்குமே
தோன்றவரு தெய்வமுண்டாஞ்
சுகமிக்க பருவமது சேரிலெவ ருக்குமே
துய்யமண வாசையுண்டாம்

மந்தோ ரிலங்குமுத மலரா திருக்குமோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே
வரதவேங் கடராயனே. (௯)

அரசரிடத்துப் பெறத்தகும் வரிசைகள்,

சுற்றமொடு தானுநம் பினபேரு மின்பமாய்ச்
சுகமுறிற் புரவியமையுந்
துய்யதரு மங்களொடு கீர்த்திப்ர தாபந்
துலங்கிறுற் சிவிகையமையும்
கொற்றவர்கண் மெச்சவே பரராசர் கொடிவெற்றி
கொண்டுவரி லானையமையுங்
குறையொன் றிலாமனிறை புகழ்பெற்றவீரர்முன்
கூறுங்கை வாளமையும்
உற்றதகை யிவையெலாம வேந்தர்சன் மானமுட
னுதவாம லேயெற்றிடி
லுறைகொண்ட நாடகந்தன்னில்வரு கோலமுட
னூர்வலஞ் செய்கோலமும்
மற்றவர்கள் சரியென்று சொலவர்காண்
மணவாளநாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௰)

பிதுர்வாக்கிய பரிபாலனமுதலியவற்றால் வருநன்மை,

தந்தைதாய் வாக்ய பரிபாலனம் புரிவதுந்
தான்சொன்ன படிசெய்வதுந்
தவறாத விரதமும் பொய்யாத வசனமுந்
தானமுங் கனபொறுமையும்
சிந்தைமகிழ் மறையோர் செய்தொழின் முடிப்பதுந்
தேவதா விசுவாசமுஞ்
செய்தபேர் பரசராமன் கவச குண்டலன்
செயராம னெடுவீடுமன்

அந்தமிகு சொல்லரிச் சந்திரன் மாபலி
யடறநள னெடுபகீரத
னருள்பிரகலாதனிவர் போற்பெருங்கீர்த்தியொடு
மவனிமிசை நீடுவாழ்வார
வந்தமலர் போற்றவளர் சேஷகிரிவாசனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௰௧)

சூதுமுதலியவற்றால் வருந்தீமை.

சூதுபெறு வித்தையும் பரதாரமோகமுஞ்
சோதரன் றனையிகழ்வதுந்
துலங்காத புத்தியு மடங்காத வார்த்தையுஞ்
சொல்லிச்செ யாததிறமும்
தீதுபெறு வஞ்சமும் மதங்களும் பிறருடைய
திரவியத் தனிலாசையுஞ்
சிந்தையக மெனுமகங் காரமும் பெற்றபேர்
சீர்நளன் கீசகன்றான்
மீதுபொரு வாலிசக ரன்குமரன் சிசுபாலன்
வென்றியுத் தான்வில்வலன்
விந்தைபெரு துரியோத னன்சனகன் முன்பெற்ற
விதமுற் றிருப்பர்கண்டாய்
வாதுபெறு தானவரை மோதுமொரு திகிரியாய்
மணவாளநாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௰௨)

சாதிமுதலானவைகளின் குணமே சிறந்ததெனல்.

தடவரை யதன்மீது விளையினுஞ் சோளமது
சன்னசம் பாவாகுமோ
சந்ததமும் வாடா திருந்தாலு மெட்டிமலர்
சாதிமல லிகையாகுமோ

கடலலை நிறைவெள்ள மாயினுஞ் சுவைபெற்ற
காவிரியினூற் றாகுமோ
காகங்கள் கோடிதொனி செய்தாலு மொருசிறு
கருங்குயிற் றொனியாகுமோ
படர்கின்ற பேய்ச்சுரை சொரிந்தபழ மூந்திரிப்
பழமதற் கிணையாகுமோ
பகர்கின்ற சாதியுங் கனவயது மேன்மையும
பலகூட்டமுந் தேகமார்
வடிவதிக மன்றுகுண மேயதிக மென்பர்காண்
மணவாள நாராயணன்
மணநிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௧௩)

செல்வத்தால் வருமுயர்வு.

செல்வமது சேரிலோ வெங்குபேர் வேங்கனுந்
திளாகில் வேங்கடனுமாஞ்
செயல்கொண்ட வேங்கடா சலனுமா மையராந்
திவ்வாய ரவர்களாகும
நல்வரிசை கொடுதான டத்திடுங் காரிய
நயந்ததூ தாகுமப்பா
னல்லோலை கிள்ளாக்கொ டாபபமேலொருவசன
நவிலுமுன் கப்பமிடுவார்
சொல்வண்மை வாவென்ற பேர்வாரு மென்பார்
சுவாமியாந் தேவரீராந்
துதிபெற்ற தேவரீ ரவர்களாங் காணுமுன்
றொழுதெழுந் தருளுமென்பார்
வல்விதம் பெறுபாம லோபியர்கண் மிண்டனே
மணவாள நாராயணன்
மணநிலுறை யலர்மேலுமங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௰௪)

வறுமையால் வருமிழிவு,

அதிக்கின்ற மனைவியையுங் குறைசொல்வடங்கைதாய்
சோகமுறு வசைகூறுவார்
துன்பமொடு மனமெலியும் மேனிவெற்றுருவமாந்
தொலையாத கவலைவளரும்
உதிக்கின்ற புத்தியு மழுங்கிடுங் கல்வியோ
முதாரத்தி லிசைபசியா
முறவின்முறை யாருமொரு வார்த்தைசொல்லார்
அத்தரமு மொருவர்கேளார் [சொன்ன
விதிக்கின்ற வுலகத்தி லெல்லாரு மிகழுவார்
மிடிவந்து சேர்ந்தென்றால்
மேன்மையே தறிவேது குலமேது நலமேது
வித்தையே தேவாதிவாகாண்
மதிக்கின்ற வுன்பதம போற்றிலை சேருமோ
மணவாள நாராயணன
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (கரு)

உடனே கண்டிக்கப்படுபவர்கள்,

முடிகொண்ட கொலையாளர் களவினோர் சாதிநெறி
முறைமை வழுவின்றதீயோர்
மூர்க்கமுறு பகையாளர்வெகுதானவிரோதியர்காண்
மொழிமாறு சோருரைப்போர்
மிடிகொண்ட பேரைக் கெடுத்துளோர கற்புடைப்
மெல்லியரை மேவுமவலோர்
விசுவாச காதமிது செய்குவோர் துஷ்டமா
மிருகங்களன் மிக்கபிணிகள்
கடிகொண்ட விஷமுடன் செய்யகளை லென்னவே
கருதுபதின் மூன்றுவகையுங்
கண்டவுட னேயின்னே யென்றுது கண்டித்தல்
கருணையனுட்தி கண்டாய்

வடிகொண்ட தெள்ளமுத மனையகுண சீலனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௧௬

பொறுத்துக் கண்டிக்கப்படுபவர்கள்.

கண்டிதிரு பந்தனைத் தள்ளுவோர் குருசுவாமி
காரியக் குறைசெய்குவோர்
காணு விடத்திற் பழித்துளோர் வஞ்சகங்
கருதுவோர் பொய்யுரைப்போர்
சண்டைகொடு தந்தைதாய் சுற்றமுட னுறவினைத்
தவிராத கலகமிடுவோர்
தம்முடைய வலுமையா லெளியோர் வழக்கினைத்
தள்ளிய மதங்களுடையோர்
அண்டிவரு துஷ்டரொடு கூடிவினை செய்குவோ
ராகுமிவ ரெண்மர்தமையு
மாறுபோ லொன்றுபிழை கண்டபின் கண்டிப்ப
தாசர்மனு நீதிகண்டாய்
வண்டிலவு கின்றமலர் துளவுள மார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௧

என்றுங் கண்டிக்கப் படாதவர்கள்.

தூதாகி வந்தபேர் மிக்கதா னதிபதியர்
துதிபெற்ற தந்தைதாயார்
சொல்லுமாசாரியர் புரோகிதர் புராணிகர்
சுகந்தந்த போகமடவார்
வேதாகமங்கற்ற வைதிகர் தபோதனர்கள்
விகடப்ர சங்கமிடுவோர்
வித்தையா லுயர்கின்ற கவிராஜர் சுத்தரண்
வீரர்மர பினிலுயர்ந்தோர்

சீதான வெம்பிணி யடைந்துளோர் வறுமையோர்
சிறுவரொடு தனைநயபிழனோர்
செய்யுமிவர் பதினெண்மர் மதியாத குற்றங்கள்
செயினும் பொறுப்பதல்லால
வாதாடி யெதிர்செய்கை மன்னர்நெறி யன்றுகாண
மணவாள நாராயணா
மணதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௧௮)

இவர் இதனால் வெல்லுவரெனல்.

வேந்தருட னேவேந்தர் வாதுவரி லோகொடிகொள
வெற்றிகொண் டேசெயிப்பார்
வீரருடனேவீரர் வாதுவரி லாயுத
வித்தத்தினாலே செயிப்பார்
போதநிறை யோகியர்கள் வார்த்தை யுசிதத்தாற்
பொருந்தவே வாதுவெல்வார்
புலவர்க்கு வாதுவரின மாவெலாம் வசைசொலிப்
பொருவிலக் காறசெயிப்பார்
சாரதமணி வேசியர்கள் வாதுவந் தாற்பரத
சங்கீத மொடுசெயிப்பார்
சரசகவி ராசர்பிர சங்கத்தினால் வாது
தன்னைச் செயிப்பர்கண்டாய்
மாரகுமரி நிகர்மேனி ராதையது மோகனே
மணவாள நாராயணா
மணதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௧௯)

இக்குற்றத்தாலிது பயன்படாதெனல்.

செயல்கொண்ட மானமது பங்கமா னற்றிரு
செழித்தென்ன மாறிலென்ன
செய்யருண வின்பரச மில்லாத மங்கையைச்
சேர்ந்தென்ன நீங்கிலென்ன

இயல்கொண்ட கீர்த்திமரி யாதையில் லார்களை
யிகழ்ந்தென்ன புகழ்ந்துமென்ன
விடருற்ற போதுதவி செய்யாத பேர்நட்
பிருந்தென்ன போயுமென்ன
கயல்கொண்ட விழியினுள பேரிளம் பெண்கொங்கை
காட்டிலென் மூடிலென்ன
கருணைகொண் டொருவருங் குறையாத பேர்வித்
கற்றென்ன மறக்கிலென்ன [தை
வயல்கொண்ட பயிர்மேனி புயல்கொண்ட களமூரின்
மணவாளநாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௨௰)

இவையெல்லாமளவுபடினு மாசையளவுபடாதெனல்

பொங்குநதி மணலுமா காயத்தி னெல்லையும
பொழியுமழை யின்றிவலையும்
புடவியிசை வருசனமு மடவியிசை வளர்மரமும்
பொருப்பின்மிசை யுற்றசிலையும்
திங்களுட னுற்றதா ரகைகளுமு முன்பாத
சேவைசெய் வோர்பெருமையுந்
தெரிவையர்கண் வனமுமுனை நினையாத பலமூடர்
சென்மமுங் கடலாழமும்
அங்கசன் கருணைபுரி மோகமுங் கவிராஜ
ரருள்பெற்ற புத்திநலமு
மளவுகண் டாலுமோ மனிதருறு மாசைதனை
யளவிடக்கூடாதுகாண
மங்கைமிதுலாபுரி மடந்தைமகிழ்நேயனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௨௧)

இன்னோர்க்கு இதுவில்லையெனல்.

காதன்மிகு காமுகர் தமக்குமுறை யில்லைவஞ்
சகர்க்கு மரியாதையில்லை
கட்டுண்ட கள்வருக் குறவின்முறை யாரிலை
கசடர்க்கு ஞானமில்லை
வேதமறி பூசுரர் தமக்கருள்செ யாரில்லை
விரோதிக்கு நேயரில்லை
மெய்ஞ்ஞானி யர்க்குவரு சாதிகுல மொன்றில்லை
வீரர்க்கு மனபயமில்லை
போதமிகு யோகிக்கு வினைசெய்கு வாரிலை
பொய்யர்முன் சாட்சியில்லை
புலவர்க்கு நேயமில் லாரில்லை செல்வனைப்
போற்றிலா வொருவரில்லை
மாதரெழில் கண்டுமன மகிழாதபேரில்லை
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே. (உஉ)

இது இவ்வாறாயின் இதுவாமெனல்.

எழுதினது சொல்வதே ராயரொப் பந்தனைக்
கிசையுமவனே ரபையா
மிடர்வேளை யுதவுமவ னேகண்ணன் வழிநடைக்
கேற்றதே யுற்றவசுவம்
பழகிமன மறியுமவ னேயூகி மந்திரிநற்
பயநீக்கி னோன்றந்தையாம்
பசிபிற கிடைத்ததே யமுதமாந் துயிலினோர்ப்
பட்டதே புஷ்பசயனம்
கிழறந்து காத்ததே கற்பகந்தாசத்தி
னீர்தந்த தேகங்கையாம்
கிறைபிணி தவிர்த்ததே சஞ்சீவி தன்மட்டு
நீச்சநீ ரேகடலதாம்

மழைமுகி லெழுந்தனைய மெய்யனே துய்யனே
மணவாளநாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௨௩)

இவர்க்கு இது தெய்வமெனல்.

தீதுபுரி லோபியர் தமக்குப் பணங்களே
தெய்வமாங் காமுகர்க்குத்
தெரிவையர்க டெய்வமாந் துஷ்டருக்கென்னிலோ
தீமையே தெய்வமாகும்
நீதியுடை யோர்க்குப் பயந்தீர்த்து ரக்ஷித்த
நேயரே தெய்வமாகு
நீங்காத் தரித்திரர் தமக்குங் கொடுத்தபேர்
நித்தமுந் துதிதெய்வமாம்
சாதியனை வர்க்குமறை யோர்தெய்வ மம்புவி
தனக்கரசனே தெய்வமாஞ்
சகலர்க்கு மாசாரியன் றெய்வ நாரியர்
தமக்குநா தன்றெய்வமாம்
மாதவம் புரிஞானி யர்க்குநீ தெய்வமா
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௨௪)

இது உண்டாயினும் இது வில்லாவிடிற்
பயனில்லையெனல்.

எத்தனைபொருட்சுவை யிருக்கினும் பத்திரச
மில்லாத கவிகளென்ன
வெண்கோடி சம்பளந் தருகினுஞ் சன்மான
மில்லாத சேவகமென்ன
சித்ராதி லீலைபல செய்யினு மிதமுண்டு
சேராத சுகமதென்ன
செம்பொன்மிகு செல்வமுண்டா யினும் பயிர்செ
செயலிலா வளமையென்ன [ண்ட

வித்தையுள வெல்லாம படிக்கினுங் குணவினய
மேவாத பெருமையென்ன
மெய்த்துளசி யில்லாத நந்தவனமென்னவே
விளங்குமென்பார்கள்கண்டாய்
மத்தகச ராசன்மகிழ் விசய நரசிங்கமே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (உரு)

இதுஇச்சிறப்பட்டையினும் பயனில்லையெனல்.

காட்டிலிண் டஞ்செடி தழைததென்ன காஞ்சிரங்
கனியது சிவக்கிலென்ன
கரைகாண வெல்லா மலர்ந்தென்ன காகங்
கழுத்திடை வெளுக்கிலென்ன
ஆட்டின்கழுத்திலதர் நீணடென்ன நீர்ப்பாசி
யதுபச்சை யாகிலென்ன
வற்பருக் கதிகாரம் வந்தென்ன பேடிகையி
லாயுத மிருந்துமென்ன
நீட்டமொடு கரடிக்கு மயிர்வளர்ந்தாலென்ன
நீதியறி யாதமூட
கிறைசொல்வராயென்னஞானமில்லாக் கல்வி
நெறிபோலிருக்குமென்பார்
வாட்டடங் கண்ணிபுனைகண்ணிமகிழ் கண்ணனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (உசு)

கலியுகதோஷம்.

அப்புவியின மிக்கமெய்ஞ் ஞானியைக் கண்டாலு
மதுவுமொரு வேஷமென்பா
ராகம புராணமறு நூல்விரும்பார்கள்பரி
யாசகதையே மெச்சுவார்

கம்பமிசை யொருகோடி கரணமிட் டாலுமது
கண்கட்டு வித்தையென்பார்
கற்பனையலங்கார மாக்கவிகள் பாடினுங்
கற்றவர்க் கெளியவென்பார்
நம்பிவிசு வாசமொடு துதிசெய்யி னுங்கள்ள
ஞானமென் பார்களவைபோ
னயந்த கலியுக மகிமை நின்னையுஞ் சிலபேர்
நவின்று குறை சொலவர்கண்டாய்
வம்பவிழ் மலர்ச்சோலை மலையலங் காரனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங்கட ராயனே. (உ௭)

அரசரது நன்றியறியாமை.

அரசரைக் கண்டுபின் காரியக் காரருக்
கதிகபரி தானமுதவி
யதிகார மொன்றினைப் பார்ப்பவ ரிடத்தினு
மதுக்கொட்டிரட்டியீந்தும்
கருதுகிலு வைப்பணந் தவனைப் பணங்கண்முன்
கடன்வாங்கி யேகொடுத்துங்
கணக்கர்செல வெழுதார்க ளூட்டார்க ளேவர்
கடன்காரர் தாமறிப்பார்
விருதுசீட் டுக்காரர் வைவார்கள் கொல்லரோ
வெயிலிடை நிறுத்தி வைப்பார்
விதமாகு மவரவர்க ளெல்லாஞ் சபாசென்ன
மெய்ப்பாய் நடந்துகொளினும்
வரிசைபெறு துரைகளவ ரருமைசற் றறிவரோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (உ௮

கவிவாணரருமை யறிவிலாமை.

கற்பனை யலங்கார மாக்கோவை பாடினுங
கனவரிசை யொருமச்சடங்
கலம்பகங் கூறிலொரு துப்பட்டி பிள்ளைக்
கவிக்கென்னி லொருசோமனும்
நற்பொரு ளுலாவென்னி லுறுமாலை மடலுக்கு
நாணயம தாயொருபணம்
நலவண்ண மென்னிலொரு சாப்பாடு மாலையெனி
னன்மை தரு தாம்பூலமாம்
அற்புதம் பெறுகவிக ளென்னிற் பளாபளா
வதிவெகு மானமாகு
மப்படியு மாயிரத் தொருவரொன் றிலெங்க
ளருமை யவரறிவர்கண்டாய்
மற்பொருத மல்லரொடு முற்பொருத வீரனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (உசு)

இதனையிவரன்றி யிவரறியாரெனல்.

கீர்த்தனைக ளின்மகிமை பாகவத ரலலாற்
கிரிக்குறவர் தாமறிவரோ
கீர்த்திப்ர தாபமது விதரணிக ரல்லாது
கேட்டலோ பியறிவரோ
சேர்த்தமநுவிக்யான நீதிமன் னவரலாற்
சிலைவேடர் தாமறிவரோ
செய்ய பகவற்கீதை மெய்ஞ்ஞானி யல்லாது
சென்மதீ சர்களறிவரோ
கோத்தமணி மாலையை மங்கையர்க ளல்லாற்
குரங்குகண் டாலறியுமோ
கொக்கோக மகிமைதனை நாகரிக ரல்லாது
கூறுபேடி களறிவரோ

வார்த்தைசாபுசி தத்தைமந் தரிசனன்றி யறிவரோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (கூ0)

பயனில்சொல்லி னிழிவு.

அகமென்று தன்னைப் புகழ்ந்தபேயுந்தந்தை
யன்னையர் வருத்தமுறவே
யயலார் தமக்குதவு பேயுமட வார்புத்தி
யனுதினங்கேட்டபேயும்
சுகமென்று பொதுமாதரைக்கூடி மனைவியைத்
துயரமே செய்தபேயுந்
துணைந்துணைகளமற்று மூறிகின்ற பேயுமுன்
சொன்னதில்லை யென்றபேயும்
செகமன்ன ராமென்ற தலையென்ற பேயுமியல்
செய்ந்நன்றி கொன்றபேயுந்
திரளான சபையினிற் பயனிலா வார்த்தையுரை
செய்கின்ற பேய்க்குநிகரோ
பகமென்று கோசிக னழைக்கமகிழ்ந்தாயனே
மணவாளநாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (கூக)

எல்லைக்கடத்தலின் வருமிழிவு,

அரசர்மே லாணைதனை யெண்ணாத குடிகளு
மாதாய மிஞ்சுசெலவு
மன்புடைய பேர்புத்தி கேளாத கோபமு
மனைவக்கடங் காதநாவும
சரசவகை மிஞ்சவே வந்தமரி காசமுந்
தனைமிஞ்சு தொழிலாளருந்
தபிரியந் தனைமிஞ்சு கவலையுஞ் சாக்ஷியோர்
தமைமிஞ்சு முறைமைழுக்கும்

வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

கரசரண வவயவந் தனைமிஞ்சு தேகமுங்
　　கவியின்மிஞ் சியவெழுத்துங்
　கருதுமுறை கேளாத மனையாட்டி புணர்நாய
　　கன்புகழையொக்குமென்பார்
வரசரச கவிராஜர் புகழ்வேத குலதிலக
　　மணவாள நாராயணன்
　மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
　　வரதவேங் கடராயனே. (௯௨)

இவர்க்கு அமுதம் இவ்விடத்தெனல்,

அண்டருக் கமுதமது சொர்க்கத்தில் வேதியர்க்
　　கமுதமது சொல்லுமறையிலே
　யானைகவி ராஜருக் கமுதமணி நாவிலே
　　யாவினுக்கமுதமுலையில்
பண்டிதர்க் கமுது கையிலே விதரணிகர்
　　பங்கிலமு தங்கண்ணிலே
　பாகவத ருங்கமுது காதிலே பரிவுடைய
　　பாங்கருக் கமுதமனதில்
ஒண்டொடிய ருக்கமுத மாமதிய மெனவே
　　யுகந்திடுந் தேகமெல்லா
　முற்றபெரி யோர்தமக் கமுதக் குணத்திலே
　　புணர்வுடைய பேர்க்கமுதமோ
மண்டலமளந்தவுன் பாதத்தி லென்பர்காண்
　　மணவா ளநாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
　　வரதவேங்கடராயனே, (௯௯

இவர்க்கு விஷம் இவ்விடத்தெனல்.

திருடர்க்கு விடமெலாங் கையிலே காமமிகு
　　தெரிவைக்கு விடமுலையிலே
　தீயபொய் யர்க்குவிட நாவிலே பசமுடன்
　　திரிவோர்க்கு விடமிதியிலே

கருதரிய கோளர்க்கு விடமுதடு
காமுகர் விடங்கண்ணிலே
கட்செவி விடங்கள்பல லடியிலே தேட்கெனிற்
கனவிடங் கடைவாலிலே
அரியதுஷ் டர்க்கென்னி லெட்டிமர மென்னவே
யங்கமெல் லாம்விடமதா
மடுத்துக் கெடுத்திடும் பகைவர்வுட மனதிலே
யம்பொன்விலை மாதருக்கு
மருவுவிட மல்குலிற் றெரியவச மன்றுகாண்
மணவாளநாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே, (௧௪)

இவர்க்குப்புண்ணியமிதுவெனல்.

உன்னுடைய பதசேவைக ண்டுபணிகின்றதே
யுடல்செய்த புண்ணியமதா
முறைகொண்ட கீதையின் சாரங்கள் கேட்பதே
யுற்றசெவி யின்புண்ணியம்
தன்னுடைய புத்திர ரளைந்தசோறுண்பதே
சாற்றுநாவின் புண்ணியந்
தத்துவமுணர்ந்தபெரி யோர்தமைக் காண்பதே
சார்ந்தவிழி யின்புண்ணியம்
பன்னுமிர மலர்கேட்கு முன்னங் கொடுப்பதே
பாணியது செய்புண்ணியம்
பதிவிரத மங்கைகுண மிக்க புருடனும்
பலிப்பதே வெகுபுண்ணியம்
மன்னுமிவை முன்செய்த புண்ணியம தென்பாகாண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே
வரதவேங் கடராயனே, (௧௫)

இவர்க்குப் பாவமிதுவெனல்.

திருந்துகற் பனையிலாப் புன்கவிகள்கேட்பதே
செவிசெய்த பாவமாகுஞ்
செயலருமை யறியாத பேர்கண்முன் சேவகந்
திரிதல்கால்செய்தபாவம்
பரிந்தவுபசாரமா தரவிலாற் மனையுணவு
பருகனா வின்பாவமாம்
பாவனை லயஞ்சுருதி நயமிலாப் பரதமது
பார்த்தல்விழி செய்தபாவம்
தருந்தமிழை யறியாத பேர்களிடமேற்கின்ற
தகைமை கைசெய்தபாவந்
தன்பெயர் விளங்காத பிள்ளையைப் பெறுவதே
தாய்வயிறு செய்தபாவம்
வருந்துயர முன்செய்த பாவவினை யென்பர்காண்
மணவாளநாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே (௯௪)

இவர்க்கிவை யுளவேனு மிவைவேண்டுமெனல்.

அதிவீர னென்னினுந் தந்திரவுபாயமுட
னடையலரை வெல்லல்வேண்டு
மாயிரம் வித்தைகற் றாலுமுலகந்தனி
லடக்கம திருத்தல்வேண்டும்
நதிகோடி நீந்திவந் தாலுமோ டந்தனை
நயந்துகரை சேரல்வேண்டும்
ஞானதத் துவமுணர்ந் தாலுமுலகத்தினி
ணடக்கைதனை யறிதல்வேண்டும்
நிதிசேர் குபேரனென் றாலுமொரு லாபமுறு
தொழிலுட னிருத்தல்வேண்டுந்
துய்யவல்லமையுடைய னெனினுமொருசார்பிறை
றுரைகளைக் காணல்வேண்டுந்

மதியூகி யென்னினும் பெரியர்சொற் கொளல்வேண்டு
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௯௭)

இவர்க்கிவை வேண்டாமெனல்.

பெற்றதாய் தந்தைதன் சுற்றமே முதலான
பெரியோரை முனிதல்வேண்டாம்
பின்னொன்று முன்னொன்று பேசியே யவமான
போகொண்டு திரிதல்வேண்டாம்
உற்றவர்கள் போலவுட் பகையான வஞ்சகரை
யொருநாளு நம்பவேண்டா
மொருவருக் கிச்சையாயப் பொய்சொல்லிப்பின்ச
பையி லுண்மைபோ லிற்றல்வேண்டாம
சற்றுமே பொறுமையில்லாதவர்கள் சண்டையிற்
றன்போய் விலக்கல்வேண்டாந்
தைரியந் தனில்விக்ர மாதித்த னெனினுந்
தன்னையே புகழவேண்டாம்
மற்றொன்று மெண்ணாது செய்யவேண் டாமென்பர்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே, (௯௮)

இவர்க்கிவை பாவமெனல்.

அரசர்வெகு மானஞ்செய் போதுதடை வருகிலோ
வன்றுவிதி பாவமாகு
மானபெரி யோர்பழமை யாய்வந்த நேயமதை
யகல்வதே தத்தயோகம்
தருகின்ற காரியங் கைகூடி யேபின்பு
தயவில்லை திருகியாகுந்
சற்குண மடைந்தோரு ருத்தமரை முனிவதே
சந்திராஷ் டமதாகுமாம்

கருதிய விருந்தினுட னுண்ணுத் தனியுணவு
காணுமதா வேதார்த்தினங்
கலகமே செய்கின்ற வினைக்காண்பதே
சனைவர்ய வேளைகண்டாய்
பரிசிரத வெனவந்த காசிபகுலோத்துங்க
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௯க)

இவர் இத்தீக கோள்பவரெனல்.

இரைமக்களைக்கண்டு தங்கள் காரியமெலாஞ்
சொல்விச்செய் கின்றவேளை
சொல்லெலாம் பொய்யெனவு மிவர்சாட்சி பொய்
யெனவுந் தோன்றுவோ னலமாகும்
திருமுற்ற கல்வியொடு குணமிக்க கவிராஜர்
திரளான ராஜசபையில்
செய்யும் ப்ரசங்கத்தி லொருபழுதுசொல்லுவோன்
சென்மத்தி லங்காரகன்
அருளபெற்ற வித்தாணிகளைக்காத்த வேகனை
யெனைசரித் தியல்பாகியே
யவாகொடுக்கும்போதி விடர்சொலி விலக்குவோ
னஷ்டமச் சனியனாகும்
மருவுற றலர்ந்தவம் புயமணியுமார்பனே
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலுமங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (சய)

இது இவ்வாறுயின் இச்சிறப்பிற்றுமெனல்,

தாரணிமன் னவர்சபையின் மெய்க்கின்ற வரிசையே
தனதுபட் டாபிஷேகஞ்
சபாசென்று மெச்சிக் கொடுக்குமதி காரமே
சாம்ப்ராச்ய போகமாகும்

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

திருவேங்கட சதகம்.

பரிவுடன் கிளைத்தபடி காரியங் கூடிடும்
பதினொன்றி னிற்குருவதாய்
பங்கஜனை வர்க்கங்க ளுடனுணவு செய்கின்ற
பாக்யமே கலியாணமாம்
அரிவை குணாரஞ்சிதா தாய்வர்த்து சேருநா
ளன்றமிர்த சித்தயோக
மன்பானபெரியோர்க டிரிகணஞ்செய்வதே
யானசுப தினமென்பர்காண்
மரகதம் பூவைமுகி னீலமணி வண்ணனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௪௧)

மனிதர்களிலே துஷ்டரும் ராட்சதரும் பூதரும்
இவரெனல்.

புண்ணியம் பாவமறியார்மாத வஞ்செயார்
புகல்கல்வி நெறியுமறியார்
புனிதரைப் போற்றார்கள் பாதிரவியங்கொள்வார்
புன்மைசேர் துஷ்டராவார்
எண்ணியொரு காரியஞ் செய்பவர்கள் வலுமையா
லெவருக்கு மிடர்புரிகுவா
ரிரக்க மில்லார்பொய் யுரைப்பவர் வஞ்சிப்பவர்க
ளிவர்களராட் சசர்களாவார்
நண்ணியெளி யோர்தமை வெருட்டுவார் வலியவரை
நாடிவஞ் சனையில்வெல்வார்
நாரியர்க ளெவரையுங் கூடுவார் மிகவுண்பர்
நாணமறியார் பூதர்காண்
மண்ணிலொரு மூவடி யிரந்தநெடுமாயனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௪௨)

மூர்க்கர் முதலியோரியல்பு,

மெய்யான புத்திபல சொல்லினுந் தன்புத்தி
மேலாகிநேன் மூர்க்கனும
மிக்கபெரி யோர்களைத் தாழ்வுசெய் தற்பர்களை
மேன்மை செய்வோன்மூடனும
செய்யாத காரியம தெனினும் பிடித்தபிடி
செய்யுமவனே துஷ்டனுந்
திரளான நன்றிபல செய்தவர்க் கேயிடறு
செய்பவன் மகாபாதகன்
ஐயாவெலைப்பணிந் தாலுமே சோபம
டடங்காத வன்குரூர
னனுதினந் தீமை புரி வோனெந்த நாளினு
மடங்காத சண்டாளனும்
மையார் தடஞ்சோலை திகழ்கின்ற களமூரின்
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலு மங்கை மணவாளனே
வரதவேங் கடராயனே. (சஙு)

இப்படிப்பட்டவன் இவ்வங்க வீன னுவனெனல்.

காதவழி யானநதி மாதலைந்துதியாத
கயவனே மீன்மூடவன்
கைதந்த வோலைவா சிக்கமாட்டாதவொரு
சசடனே மிக்கக்குருடன்
நீதுபெற தன்களவு கண்டவர்க்குத்தாஞ்
செப்பிலா தவனூமையாந்
செயலான தன்மகதை யொன்றெனினுமறியாத
செய்கையுடையோன்செவிடனும்
எதெனினு மொருபேர் விளங்காத தேகம
தெடுக்குமவ னேகுரூபி
யென்றெனினு முன்பாத தரிசனஞ் செய்யாத
வீணனே பேனென்பார்
மாதுசத்தியபாமை தழுவுமணி மார்பனே
மணவாளநாராயணன்

பனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (சச)

உலோபியர் வகை,

நசைபெற்ற வேதவே தியர்தமக் குதவா
னவின்ற லோபர்க்குநேயன்
நாற்கவி மொழிந்தகவி ராஜர்க்கு மொன்றேனு
நல்கிடான் கொஞ்சலோபி
இசைபெற்ற கீதமுறை செய்பாடகர்க்குமொன்
றீகிலான் பாதிலோபி
யியலான நட்டுவா சர்க்குமொன் றுதவிலா
னேற்றமுக் காலுலோபி
திசைபெற்ற விகடகவி ராசர்க்கு முதவிலான்
றீயமுழு லோபிநடனஞ்
செய்மாத ரபிநயங் கண்டுமொன் றுதவிலான்
சேர்பரம லோபிகண்டாய்
வசைபெற்ற லோபியர் தங்கள்கண் டரவணை
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (சரு)

உலோபியர் வஞ்சப்புகழ்ச்சி,

கண்ட பகையாளிமுன் னின்றுபொரு தாமற்
களத்திற் புறங்கொடுப்பார்
கன்னமிடு கள்வருக் காடையும் பணிகளுரி
காணுமலே கொடுப்பார
சண்டமா ருதமென்ன வருகின்ற பகைவர்க
டமக்குமனை யுங்கொடுப்பார்
சவுக்கிட் டடிக்கின்ற மன்னர்க்கு வீட்டுத்
தனங்களெல் லாங்கொடுப்பார்
அண்டிவரு மெமதூதர் தங்குதான் கேட்குமுன்
னங்கமுறு முயிர்கொடுப்பா
ரவனிடிசை யிப்படி கொடுக்கின்ற பேர்கடமை
யதிலோப ரென்பதென்னோ

மண்டலமும் விண்டலமு முண்டகளி வாயனே
மணவாள நாராயணன்
மணதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௪௬)

உலோபியர் குணமாறாமை,

தேன்கொண்ட தளிகையொன்றி னாலேழு கடலெலாந்
தித்திக்கவே செய்யினுஞ்
செய்யபூ மலரினால் வச்சிரந் தன்னைச்
சிறக்கவே பொடிசெய்யினும்
கான்கொண்ட மலையெலாங் கைக்கொண்ட வெண்
ணெயாற் கவினுற்ற மெழுகுசெயினுங்
கயவர்க்கு நீதியும பேடிக்கு வீரமுங்
கபடர்க்கு மெய்ஞ்ஞானமும்
ஊன்கொண்ட மூடர்க் கிரக்கமுந் தெளிவுற
உரைத்துநல மேசெய்யினு
மூமை செவி டன்குருடன் முத்தமிழ்படிக்கினு
மூலோபருக் கீவுவருமோ
வான்கொண்ட தேவர்மொழிமலர் கொண்டபாதனே
மணவாளநாராயணன்
மணதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௪௭)

மககளிற் பதாரவாரி வரெனல்,

கொண்டகடன் வட்டியுட னன்றுபோற் குணமாய்
கொடுத்து மகிழாதபதருங்
கூறுபிணைசாட்சிமுறி யுடன்மறித் தாலுங்
கொடா தொளிக் கின்றபதரும்
கண்டவுடனொருகோடி சொல்லிப்பி னென்றெனுஞ்
சுருதிச்செய் யாதபதருங்
காணவிட்டத்தினிற பழிகூறியவரையெதிர்
கண்டுபுகழ் கின்றபதரும்

பண்டொருவர் செய்நன்றி தனையே மறந்துபின்
பழிசொல்லுகின்ற பதரும்
பரமாத ராசையால் வசைகொண்ட பதரும்
பறந்தாமிக வஞ்சிதறவே
மண்டிவரு சண்டப்ர சண்டமாருதமான
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௬௮)

இக்குற்றமுடை யோர்க்கும் இதுசெயல் வேண்டுமெனல்,

கதித்திடும் பகைவரென் றாலுமா பத்தினிற்
சண்டுதவி செய்யல்வேண்டும்
கல்வியறி யாதசபை யெனினும்ப்ர சங்கங்கள்
கவிராஜர் செய்யல்வேண்டும்
விதித்தமுழு மூடரென் றாலுந்தன் மைந்தற்கு
வித்தைகற் பித்தல்வேண்டும்
வெய்யசின மூர்க்கரென் றாலுநல் லோர்கண்டு
மேற்புத்தி சொல்லல்வேண்டும்
அதிர்ஷ்டமிலை யென்னினுஞ் சலியாமன் மிக்கதொழி
லதிலே முயற்சிவேண்டு
மாசாத்தியம் தானகன ரோகமென் றாலுமோ
ரவிஷதம் தீவர்கண்டாய்
வசிஷ்டரொடு வான்மீக முனிதுதி சரித்ரனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௬௯)

இதினும் இது மிக்கதெனல்,

தினமூந் திரிந்துதனி யாகியே மிகசபொரு
டேடியே வாழுமதிலுஞ்
செல்வமொடு தந்தைதாய் சுற்றமுடன் கூடிச்
சிறந்துண்ட கூழதிகமாய்
தனதுமரி யாதையொடு பெருமையறியாதவர்
தனமாரி பொழியுமதிலுஞ்

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

சமமான மேன்மை தெரிகின்றபெரி யோர்தந்த
தாம்பூல மேயதிகமாம்
கனமருவு பலபல மகாவித்தை சிலசில
கருத்தொடு படிக்குமதிலுங்
கருணைபெற வொருவித்தை யாயினுங் குறைவறக்
கற்கின்ற தேயதிகமாம்
மனிதர்சில ரிவையன்றி யவைதிக மென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௫௰)

இதினுமிது வென்றியெனல்,

மிக்கதுலி கண்டுளம் வெருண்டுகலை மானையே
வென்றுசய மாகுமதிலும்
வெஞ்சின மிகுந்துசவ ரும்புலி யுடன்பொருது
மெய்கொண்ட வடுவேசயம்
பக்குவமு திர்ந்தபே ரிளமாது கொங்கையிற்
பரிவுடன் சேருமதிலும்
பைம்பொன்மணி மாலைபுனை வாலரதி யூடலிற்
பாததா டனமேசயம்
தக்கதொரு கலவியறியாத முழுமூடர்
சந்தோஷ மாகுமதிலுந்
தமிழருமையறிகின்ற பெரியோர் பழித்ததிந்
தனையதே சயமென்பர்காண்
மைக்குவளை செங்குவளை வாசமலர் களமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௫௧)

இதுவிதனை வசப்படுத்து மெனல்,

சிந்தைதெளி கல்வியே லோகவசி யம்பத்தி
செய்வதே தெய்வவசியஞ்
செய்யுமரி யாதையே வித்வசன வசியமாஞ்
செல்வமுற வோர்கள்வசியம

எந்தவிதரூக்கிரள நலசும்பணங்களோ
யிடைபடவில்லை யாதாகிய
மெய்ப்பொருளது மவர்மனதறிந்துசுட்டிக்காத்
திருப்பதே ராஜவசியம்
தந்தன்ன டினைகளே துஷ்டசன வசியமாக்
தானமே சீததிவசியஞ்
சாந்தகுண மயமாய் நடந்திடு மொழுக்கமே
சகலசன வசியமாகும்
மந்திரமெழுத்தெட்டு மேயுனது வசியமா
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௫௨)

இச்செய்கையோர் இச்சிறப்புப்பெயர்.

கொள்வரெனல்,

சரணென்றடைந்தவர் தமக்குவரு வினையெலாந்
தாங்குவோன் புருஷமேரு
தன்னுடைய செய்கைபோலெவரையும்பார்க்கின்ற
தகைமையோன் றெய்வபுருஷன்
திரணமெனி னும்பிறர் பொருட் காசையிலாத
செய்கையோன் புருஷோத்தமன்
தீராத வினைவரினு மற்பரைப் பணியாத
தீரனே புருஷசிங்கம்
பொருவிலாத் தந்தைதா யென்னினுங்கண்டபடி
புகலுவோன் புருஷரத்நம்
போற்றுமவர் மனதிக் குறிப்பறிந் துதவுவோன்
புருஷநாயகனென்பர்காண்
மரபெலா மிப்படி புகழ்ந்தருண சேகரன்
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௫௩)

இச்செய்கையோர் இவ்வழிபெயர் பெறுவரெனல்.

சற்றெனினு மொருகல்வி யறியாத கயவனே
　　தாங்குமுயிர் கொண்ட மரமாம்
　தன்புத்தியன்றிபிறர் புத்தியால் வினைசெயுந்
　　தகைமையோ னேபதுமையாம்
கொற்றவர்கள் பகையாற் றூரத்துண்டு திரிகுவோன்
　　கூடையுற வானபக்ஷி
　கோபமது தந்தையே யன்றிமற் றோரையுங்
　　கோபிக்கு மவன்மிருகமாம்
கற்றபெரி யோரையெதிர் பணியாத மூடனே
　　கைகால்முளைத்த சிலையாம்
　கண்டவர்க ளெல்லாம பழிக்கின்றகோலனே
　　சனதுஷ்ட ஜெந்துவெனபார
மற்றவர்க ணேயமது கனவிலுங் காணாத
　　மணவாள நாராயணன்
　மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே
　　வரதவேங் கடராயனே. (௫௪)

கல்விப்பொருட்சிறப்பு.

தெள்ளமுத மனையகல் விப்பொருள் படைத்திடிற்
　　றேசமெல் லாந்துதிக்குஞ்
　செயத்தம்ப மானபுகழ் நிலைநிற்கு மிவையெலாஞ்
　　செம்பொன்மிகு செல்வமதுபோல்
வெள்ளமது கொளுமெனும் பயமில்லை கனவினிலை
　　வெப்பவரு சலனமில்லை
　வேந்தர்கள் பறித்திடக் கூடாதுசோதரர்
　　விரும்பினும் சங்குறாது
கள்ளராற் றிருடவும் முடியாது வரவரக்
　　கனமலாற் குறைவுறாது
　கருணைஞா னந்தழைபு மாகையா லினையிதய
　　கமலத்தில் வைப்பதெளிதாம்
வள்ளலென வருகின்ற மாடபூ சியரதிபன்
　　மணவாள நாராயணன்

மணநிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௫௫)

உரைகொண்டு சொல்வரிசை சேர்ந்துபொரு ளின்ப
வகை யோசைபெற் றேமதுரமா
யுற்றநவ ரசமுடன் கற்பனை யலங்கார
முண்டாகியே கவுடமாய்
நிலைகொண்ட சீர்தளை விகற்பம் பொருந்திநன்
னீதியாய்க் கடைதுடிப்பாய்
நிறைகின்ற சபைதனி லுதாரணப தாசிநிலை
நின் றுபழு தென்றிடாமல்
திரைகொண்ட தண்கடலில வருமமுத பாகமாய்த்
தேசப்ர சித்தியாகச்
செப்புமொரு கவிகொண்டு குலமெலாம் வந்தடி
செயினுமது நிசராதுகாண் [மை
வரைகொண்டு பொழியு மழை காத்தருளு மையனே
மணவாளநாராயணன்
மணநிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௫௬)

துர்தீவினைப்பயன்.

திங்களுத யங்கண்டு மலரா திருப்பது
செழுங்கமல முற்றவினையே
தினகரனை யெதிர்கொண்டு முகைகொண்டு வாடுவ
சேதாம்பல் செய்தவினையே [து
சொற்குலவு சண்பக சுகந்தமலர்கண்டுமருள்
கொண்டது சுரும்பின்வினையே
கொண்டன்மழை கண்டுளமெலிந்திட வருந்துவது
கோகிலஞ் செய்தவினையே
அங்கணுல கெங்கணு மகிழ்ந்தபெரியோர்களுக
கருளா திருந்துவிடினு
மவர்மீது குற்றமது சொல்வரோசேர்ந்தவ
ரதிஷ்டமென் பார்கள்கண்டாய்

வங்கியந் தருபிசை கனிந்தகனி வாயனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௫௭)

அரசர் கவிவாணர்க்குச் செய்யுமுபசாரம்,

போசனங் கந்தமலர் மாலைதாம் பூலம்
பொருந்துவஸ் திரபூஷணம்
புரவியொடு கவிகையுஞ் சிவிகைகரிவாத்தியம்
பூமிதனை தனதானியம்
தூசலவு துவசமெனும் வெகுமான சோடசந்
தூதால் வரவழைத்தல்
தோன்றுமுன் னெழுதல்வந் தருள்கெனத் தழுவுத
லுதித்திட விருக்கையுதவல்
நேசவெகு மானங்கள் செய்தெழுதல் வழிவிடுத
னிறைபங்கி காரமேழாம்
நெறிகொண்ட புவிராசர் கவிராசர் பாற்செய்யு
நீதிமுறை யென்பர்கண்டாய்
வாசவன் பெருவிசய குருதனையூ நாதனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௫௮)

புல்லர் நல்லோர்குண மறியாரெனல்.

சந்தன வனந்தனி லிருந்துமதன் மணமதைச்
சற்றுமறி யார்கிராதர்
தாளங் குனிக்குமவ ரதன்வாலை யணியார்கள்
சங்குமணி தன்னையணிவார்
கந்தமலி தாமரை யடுத்துமண் டூகங்
கருஞ்சேறு தன்னையருந்தும்
காமருவு தேமாவின் மிசையிருந்தாலுமே
காகமது வேம்புறுகரும
அந்தவகை போலநல் லோர்தமை யடுத்தே
யனேகநாட் பழகிவிடினு

மற்பர் தாமறிகின்ற தறிவதல் லாமற்மற்
றவர்மகிமை யறிவார்களோ
வந்திடு க்ஷணந்தன்னி லவர்பெருமையறிகின்ற
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௫௧)

புல்லரைப்பாடும் புலவர்பயன் பெறாமை.

நாவினிற் சொல்லுநய முங்கண்டு வஞ்சகரை
நட்பென்று வருநேய நம்
கவமதனை யென்னவெழில் கண்டுபேடன்றனை
நாடிவரு மடமாதரும
காவினி லுயர்ச்சியும் பசுமையும் கண்டிலவு
காத்திருக் கின்றகிளியுங்
காளைக்கண் டுபுனை லெண்ணமே யாசையொடு
கருதியே யேகுமானம்
பூவினிற் பொலிவுமண முங்கண்டு கேதகை
பொருந்துதே னுடுமளியும்
புல்லர்தஞ் செல்வங்கள் கண்டிந்துதி செய்திடும்
புலவர்செய லொக்குமென்பார்
மாவினிற் குயில்வேனி லாவெனுஞ் சளபூரின்
மணவாள நாராயணன்
மனதினுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௫௨)

மேலோர்செயல் கீழோர்க்காகாமை.

எந்தவினை செய்தாலு முனிவோர்கள் மாதவ
மிசைந்தாற் பெருமைபெறுவா
ரிகழ்ந்தவசை சொல்லினுங் கவிராசர் வித்தையா
லென்றுமிகு மேன்மைபெறுவார்
சிந்தைமத மாவென்று மழுவினு தானைகள்செந்
திருவினுற் புகழ்சிறப்பார்
சீரியர்க ளெப்படி புரிந்தாலுமேற்குமது
சிறுமையோர் செய்ய வசமோ

நீதியாந் நெறிதப்பி யோடுங் காலுமது
தன்னைமத யானையென்பார்
காணுமப் படிதவறு செய்யிலோ பேயென்று
கண்டுமுனி வார்கள்கண்டாய்
மந்திநெறி யிட்டகிரி தன்னிலுறை வாசனை
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடநாயனே. (௯௧)

இதுஇல்லையாயின் இதுவிளங்காதெனல்.

சந்திர னிலாவிரவு மதுரமில வாதகவி
தனயரில் லாதவிசைவுஞ்
சற்சன ரில்லாதவூர் புரவியில் லாதபடை
தளபதி யில்லாதசேனை
மைக்கொடி யில்லாதமனை பாடலில் லாதவோசை
பக்தியில் லாதபூசை
பார்த்திப ரில்லாதபட் டணம்யூக மந்திரிகள்
பற்பல ரிலாதவரசு
சாரமில் லாதமலர் சத்தியமி லாதவாய்
கல்வியில் லாததேகம்
கணவனில் லாதகிரியாசுசி யில்லாத
கன்மமுப தேசமில்லா
மந்த்ரமிவை விச்வசன மில்லாதசபையென்பர்
மணவாள நாராயணன்
மதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடநாயனே. (௯௨)

சங்கீதச் சிறப்பு.

புருவநெறி யாமன்மணி யெயிறுதோன் றுமல்விழி
புரளாம லங்கசேட்டை
புரியாமன் மிகுதலையை யசையாமன் மிடறுவான்
பொருமிவிம் மாமலியல்பாய்ச்

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

திருவேங்கட சதகம்

அருகில்லை யாராரை நீதியொடு வீணையின்
றொனியினை தப்பிலமையாய்த்
துய்யதர் கிரியோசை யிடைசெறுகைசயெவையோடு
தோன்றுமவின்பசுயமாய்த்
தருமதுர வமுதரச மொழிகுசா ரிகள்முகு
சங்கீத வித்தையென்றல
சகலர்க்கு மானக்குமா சுமதா பாடுமவன்
சாசகுண வஞ்சியெனிலே
மருவியிதழ் பாதுகியண யாமனுயி குய்புபோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கையணை வாளனே
வரதவேங் கடராயனே. (௩௫)

பாதச் சிறப்பு

பாதாள முஞ்சதி யடங்கமிகு தொனிசெயும்
பண்புபெறு வோன்மத்தளி
பாராக கீதமொடு தாளங்கொள் கவிதம்
பாடுவோ னேபாடகன்
காதாள மேன்மனமுர க ணயா தத்தின்மேற்
கண்ணுமுடை யோனட்டுவன்
கையின்மேல் விழியுமக் கைவிழியினலனயங்
காட்டுமவ ளேபாத்திரம்
கூராதாள லயமார்க்க மாகுமின் கிதபதஞ்
சொல்லுமவ ரேபரிசனந்
தகிபெற்ற நடனப்ர சங்கமதில் வேறுதொனி
தொனியாத சபையேசபை
வாதாள முடனாவி னடனமிடு பாதனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கையணை வாளனே
வரதவேங் கடராயனே. (௩௬)

நாடகச் சிறப்பு

சுகந்தபரி மளவஸ்த்ர பூஷணலங்கிருத
சோடுமஸ் தீபவேண்டுந்

தோகையர்க ளும்பரி சனங்களுங் கூடியே
சொற்படி நடத்தல்வேண்டும்
மிருந்த ரஸ்தாளிக் கரும்புதேன் முதலான
மேன்மையே யின்பரசமாம்
வேதாங்க வஸ்தமுஞ் சாதியும் பாஷையும்
வெவ்வே றிருத்தல்வேண்டும்
புகழ்ந்தபத மிங்கிதம்பரிகாச விகடங்கள்
புண்ணிய சதாப்ரசங்கம்
போற்றுபா வனைமிகு ராகதா ளஞ்சுருதி
புகழ்கின்ற பரதநடனம்
மகிழ்ந்திடுஞ் சபைதேவர் சபையென்று சொல்வர்கா
மணவாளநாராயணன் [ண்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௯௫)

விநோதவித்தைச் சிறப்பு

சத்திகண பதிதுர்க்கை சரஸ்வதி மாகாளி
சாமுண்டி யென்றுவாழ்த்திச்
சங்கமொடு ஜயகண்டி டக்கைகைத் தாளங்கள்
சத்தமொடு மிகமுழங்கச்
சித்ரமிகு மாத்திரைக் கோலின்முறை யங்கமுறை
செப்புமறை பத்துமுறைகள்
செய்யுமுறை யறுபத்து நாலுகஜ கரணங்கள்
சேர்ந்தகோ கரணமார்க்கம்
வித்தைபுரி ஸ்தம்பனம் தாதியா மஷ்டாங்க
விதமாம யேந்த்ரசாலம்
மிதமந்த்ரசாலமுத லானசெப் பிடுவித்தை
மேன்மையவர் தந்த்ர நீதி
மத்தசச ராசதே வேந்த்ரனுந் தேவனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௯௯)

பௌராணிகர் முதலியோர் சிறப்பு.

ஆருக்குமானந்த மாகவேபொருள்சொல்லு
மவனே புராணிகனு
னங்கமொடு ஜோதிஷ கணிதமுந் தெரிகுவோ
னருள்புரோகித பூசுரன்
சீருற்ற சபையெலா மெச்சப்ர சங்கமுறை
செப்புமவ னேவித்துவான்
செய்யுமர் ஜியந்த்ர தந்த்ரமொடு
சிலனே மந்த்ர வாதி
ஏருற்ற கல்விகுண மேன்மைபோதகக
னிசையுமவ னாசாரிய
னென்றுமவர் சொற்படி நடந்துபய பத்தியோ
டிருக்குமவ னேசிஷனமை
மாருக்கு வேதாந்த வாசனே நேசனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங்கட ராயனே.

மருத்துவனியல்பு,

திரமான சாஸ்திர முணர்ந்தொரு சிகிச்சையது
செய்திட வறிந்தபின்போய்த்
தேசகா லஞ்சாதி தேகங் குணம்பிணி
சிறக்குமா றுந்தெளிந்து
கரமான நாடிமுத லெட்டுப் பரீட்சையுங்
கண்டுகலி தங்கியாமுங்
கனகுளிகை பஸ்பமோ சிந்தூரஞ் சூரணங்
கருதலே கியதயிலமாம்
பரமான நன்மருந்துங் கொடுத் துசிதமாய்ப்
பத்தியமு வெளிதாகவே
பரிவுபெற மாரோக்கி யஞ்செய்து திரளாசை
பகராத பண்டிதனெவன்
வரமான தன்வந் திரிக்குநிகர் சொல்வர்காண்
மணவாளநாராயணன்

மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங்கடராயனே. (௯௫)

ஈனர் மருந்துவனுக்குச் செய்யுமுறைமை,

சேர்க்கின்ற கனரோக முற்றால் வயித்தியன்
றெய்வமாங் கேட்ட தெல்லாந்
திடன்கொடுப் போமென்பர் தீருமிப் பிணியென்
செப்பிடு மன்றுகுருவாம்
பகர்க்கின்ற குளிகையது தந்தபின் தந்தையாம்
பாதிலகுவான பின்பு
பலபான துணைவனு ரோக்கியஞ் செய்தபின்
பகர்கின்ற மைத்துனனுமாம்
ஏக்கின்ற மற்றைநா ணையன்மறு நாளினி
லிசைந்தகட னளிமனுநா
ளெதிர்வரிற் பகையாளி யாகுமிப் படியென்று
மீனர்சில ருண்டுகண்டாய்
வார்க்கின்ற தானமொடு வளர்கின்ற வள்ளலே
மணவாளநாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே, (௯௬)

ஆராயாதுசெய்யு மொழுவரடையுங்கதி,

நீதிவழு வாவகை வழக்குரைப் போர்களு
நிறைந்ததீ வினைகளெல்லா
நீக்குபரி காரமுறை செய்குவோ ருப்பிணி
திருத்தவறுப் பண்டிதர்களும்
சோதிடஞ் சொல்லும்பு ரோகிதருமுலகந்
துதித்த செங்கோல்வேந்தரும்
தூயவுப தேசதே சிகருமவர் சிஷருஞ்
சொல்லுமிவ ரேழுபேரும்
ஆதிமறை நூலுரை செய்தவித மாராய்ந்
தறிந்துதெளி யாதுசெயிலோ
வடைக்கலப் பொருளைக் கவர்ந்திடும் பேரிலு
மகோரநர கடைவர்கண்டாய்

மாதிர நெடுங்கடல் வளர்ந்த நெடு மாயனை
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே
வரதவேங் கடராயனே, (௭௰)

நித்தியகருமச் சிறப்பு

கருணைநதி மூழ்கியே சந்திவந் தனமுடன்
கருதுஜப தபவோமமுங்
கடவுளோர் பூசையுஞ் செய்து வேதாகமங்
கல்வியது முறைபடித்துத்
தருமத் தியானநற் கருமமா நீதியொடு
தந்தைதாய் புத்திரருடன்
றுணைவு செய்தாரா மாயணம்
சந்தியொடு கருமநண்ணி
பரிவுடன் நின்றிருக் கோயில்வல மாகிப்
பணிந்துபத சேவைசெய்து
பணபான சந்த்ரோ தயத்தின்ம லரணைமீது
பாரியுடபண மகிழ்ந்து
மருவியே வாழுமில் வாழ்க்கையே வாழ்வுகாண
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௭௧)

குடிவாழ்க்கைச்சிறப்பு

மிக்கதெய் வத்தலமு ஞானகுரு பீடமும்
விளங்குமா நதியுமறை யோர்
மேவிய கிராமமும் பூமிநல மூர்த்தமு
மேலரசு முடையநாட்டில்
முக்கனி தருஞ்சோலை நீர்வளங் குடிவள
முயங்குபயிர் வளமுமுள தாய்
மொழிந்தநாற் குலமுஞ் செழிப்பதாய்த் தேர்வீதி
முதலாய் விளங்குமூரில்
தக்கதொரு வீதியொரு பாணைவி சாலமாய்ச்
சார்ந்த சிங்காரமனையிற்

றனதானி யங்கறவை முதலான செல்வந்
தழைத்தென்ன தானமுதவி
மக்கண் மரு மக்களொடு வாழ்வதே வாழ்வுகாண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௭௨)

மருத்துவர் செல்லத்தகாவிடங்கள்,

தீராத ரோகமுண் டோரிடமு முண்மையது
செப்பாத பொய்யரிடமுஞ்
சீரான வொருவர்பண் டிதமன்றி வெகுவிதஞ்
செய்துகொள் வோர்களிடமும்
வாராத கோபமுறு மூர்க்கமன் னவரிடமு
மேந்திழையை மனதுபிரியா
வின்பமிக மதிவிரக மானகா முகரிடமு
மெப்படி நலஞ்செய்யினும்
தாராத லோபரிட மும்பத்தி யந்தனைத்
தாழ்வுசெய் வோர்களிடமுஞ்
சகலசன கண்டக ரெனுந்துஷ்ட ரிடமுமிகு
தனமாரி யேபொழியினும்
வாரா திருப்பதே பண்டிதர்க ணீதிகாண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௭௩)

நோய்க்கிடங்கொடாதவர் செய்கை,

சனிபுதன் றனிலெண்ணெய் வெந்நீரின் மூழ்குவார்
சாருமிள வெயில்விரும்பார்
தம்வயதின் மேலான மங்கையைச் சேரார்
சதாகாலம் வழியினடவார்
பனியிலுங் காற்றிலும் மெய்வருந் தார்மடைப்
பள்ளியிற் சேஜகமிராற்

பழுங்கதி யருந்தா ரிரண்டகக் காரரொன்று
பலகால மூட்விட்டிடார்
சனியொடு கிழங்குகள் மிகுந்தபுசி யார்பசி
கலந்தன்றி புணவுசெய்யார்
காய்ச்சுபா லுண்பார்நீ ரேமோர்கூட்டு வார்தினங்
காவேரி தனின்மூழ்குவார்
மனிதரிவர் பேர்சொன்ன பேர்க்கு நோய் சேருமே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (எ௪)

தாதைமுதலியோராவார் இவரெனல்,

திருவுடன் டுருகமுஞ் செலவமுந் தந்துகட
நிலுவையொன் றில்லாமலே
நிறைகல்வியுமைசெய்து நெறியொடு வளர்க்கின்ற
நேசனே யுயர்தந்தையாம
கலைமதிய மெனவே வளர்ந்தபின் செல்வங்கள்
கண்டுமிக மனமகிழ்ந்து
கருதரிய புத்திரன்போலமரு மகளையுங்
கருணைசெய் பவளன்னையாம்
பலகலை யுணர்ந்துமிகு செல்வமுந் தேடிப்
பகிர்ந்துதன் பேர்விளங்கப்
பண்பான தந்தைதாய்க் குதவியே யவர்சொன்ன
படிசெய்கு வோன்புத்ரனும்
மலர்பொழி செழுஞ்சோலை மலைவலரு மாயனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (எ௫)

நற்புதல்வ னியல்பு,

அரிதான மாதவஞ் செய்கின்ற முனிவோ
ரடைந்திடுவ ரந்தனைப்போ

லடுத்தவர் தமைக்காத்த மிக்கமே லவாதமை
யடக்குமுன் சக்கரம்போல
பெரியோ ரிருக்கின்ற சபையினிற் கவிராஜர்
பேசம்ப்ர சங்கமதுபோல்
பேருலகை மெய்க்கவுத மனுநீதி முடிவேந்தர
பெறுகின்ற மாகீர்த்திபோல்
ஒருகோடி நட்சத்திரங்களுட னடுவே
யுதிக்க சந்த்ரோதயம்போ
லுபயகுல சுத்தனும் பவித்ரன்போலவே
யொருபிள்ளை போதுமவனால்
மாமெலா நன்மையே யடையுமென் பார்கள்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௭௮)

சகோதரவொருமை

தனதுபட் டந்தனைத் தம்பியர்க் கீயெனத்
தந்துமகி ழுந்தமையனுந்
தமையனார் வருமளவு மாவிரத மாகவே
தபசுபுரியுந் தம்பியும்
கனதனைப் பாலித்த தாய்தனைப்போலவே
கருணைசெய திடுமதனியுங்
காணுமுன் றந்தைபோற் றிருவடிகள் பணியுங்
கனிட்டனிட மனையாட்டியும்
தினந்தினம் பரிவாகியம்மையே யென்றுபேர்
செப்புங்கொழுந்தனாருஞ்
சேர்ந்துவாழ் கின்றபேர் திரேதாயுகத்தனிற்
றெசரதர் குமாரர்கண்டாய்
வனசமலர் கமழ்கின்ற வாவிசூழ் சளபீரின்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௭)

வேட்டகத்தியல்பு.

காரிகை தனைத்தந்த மாமனார் மனைதனிற்
கருணைமரு மகன்வந்திடிற்
கண்டவுட னாசார வுபசாரமாகாவ
கனவிருந் துகள்சமைப்பார்
சேருநாண் மூன்றுகி லமைப்பட் சத்திர்
செலவித்தசந் தோஷமயம்போற்
றினந்தினம் பெருமைகுறை யுங்காரி யங்களுடி
செய்யென்ப ரத்தைகுழுதலோர்
ஆருமென் னோர்கண்மைத் துனர்சரச பரிகாச
மதிகமா மனைவியெனிலோ
வன்புடன் சொன்னபடி கேளாளி தாகையா
லாதியொரு கதையல்லவோ
வாருமென் றவரோக வசனமுஞ் சொல்வர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை பவரேறு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௭௮)

மானங்கெட்டுப் பிழைப்பவரிவ ரெனல்.

கோழூறு சிறுமிதனை துறவிஞன் மருகன்மனை
கிலையென்று வாழ்ந்தபேரும்
கேரிழை தனைத்தந்த மாமனா மனைதன்னி
னிகாதிருந்தபேரும்
பேரிய கல்விதெரி யாமூடர் பேரிற்ப்ர
பந்தகள் சொன்னபேரும்
பெருமைபோய்க் கள்ளக் கடன்களேபட்டுப்
பிழைத்துயிர் சுமந்தபேரும்
ஏசவரு பகையாளர் தங்கண்முன்கைகட்டி
யேவல்செய கின்றபேரு
மீனமது பார்ப்பரோ வயிறுசா ணன்றிவர்க்
கெண்சாணு வயிறுகண்டாய்

வாசமலர் மங்கைகுடி கொண்டுவளர்களமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (எக)

கற்புடைப்பெண்ணுரியல்பு.

ஓதுஜப பூசைகட் கினியதுற் றேவல்க
ளுகந்துசெய் போதுதாரா
முறைகொண்ட சரசஞ்செய் போதுமன் மதனு
மொழிந்தவேளைத்தெய்வமாம்
நாதனைக் கருதியவ னுண்டகுறை யமுதாக
நவில்வதே யுபதேசமாம்
நதியாடல் பலநோன்பு தேவதா தரிசனை
நயந்தபலவிரதமுமவன்
பாதசவி சனமாக்கொள் சத்தியாய்ப் புத்தியாய்ப்
பத்தியாய்க் கடலிறுழும்
பாரென்று கணவனுறை செய்யினுஞ் செய்கின்ற
பதிவிரத மார்க்கமானை
மாதர்புகழ் நீதியே துதிபெற்ற நல்லவோ
மணவாளநாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (எஉ)

நற்பெண்ணுரியல்பு.

பஞ்சணையி னருகாக நின்றுவா வென்றபின்
பரிவினுட னருகில்வந்து
பாக்கிலை மடித்ததரு வீந்துமெத்தையிலவந்து
பரிமள மிகத்திமிர்ந்து
கொஞ்சிமலர் சூடியிசை பாடிவிளை யாடியே
கொக்கோக விதமறிந்து
கூடியித ழிருவோரு முறைபருகி யினியபுட்
குரலோசை மிகமுழங்க

நெஞ்சமகிழ் வொடுசூாத சரணாகதி காவுபரி
  நேயாதி கேளிதன்னுல
 நிறையமிர்த போகசம் போகமவை போகமுட
  னீங்காத யோகமுதவும்
வஞ்சியின லாதுமனமே வெறுன்றின் மகிழுமோ
  மணவாள நாராயணன்
 மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
  வரதவேங் கடநாயகனே. (௮௧)

தீப்பெண்டிரியல்பு.

ஐயருங் கழுதைபடை யென்றவன் தாய்பேயு
  மாண்பிள்ளை யென்றென்னவே
 வரிசியெங் கேபானை சட்டியெங்கேயென்ப
  ளவன்சொன்ன வகைகளெல்லாம்
பையவே கொண்டுவந் தாலுஞ் சமைக்கப்
  படாததலை நோகுதென்று
 பாயிற்கிடப்பளினி மாவொன்று பேசினுல
  பாருனக் கேற்றபுத்தி
செய்ய வல்லேனென்பள் சற்றடித் தானஞ்சு
  தின்கிறேன் கூகூவெனத்
 தெருவீதி தோறுமுறையிடுபெண் டிருண்டெனிற்
  றீயநமன் வேறுமுண்டோ
வையகம் புகழ்சோலை மலைபலங் காரனே
  மணவாளநாராயணன்
 மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
  வரதவேங் கடநாயகனே. (௮௨)

பரத்தையரியல்பு.

கொச்சியுறு மஞ்சள்வங் காளமுறு பச்சைசினைவ
  கூறுசண் பகமொட்டுடன்
 கூடிய நலங்குமஞ் சனமாடி பொற்கண்டை
  கொண்டவெண் டுகிலுடுத்துக்
கச்சிளங் கொங்கைமேற் கந்தபரி மளகளப
  கஸ்தூரி குமுகுமென்னக்

கனகநவ ரத்னமய பூஷணம் பூண்டுகிளி
கையின்மிசை யேந்திநலமாய்ப்
பச்சைமயில் போலிந்த வேளைக்கு மிகுசரச
பரியாச நகைபுரிந்து
பண்பான மேடையுப் பரிகையினிற்கும்
பரத்தையுண் டாவலென்றால்
வச்ரதர னுலகத்த ரம்பையினு மதிகமா
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௮௩)

பிரௌடை வேசையியல்பு.

ஆசையுட னொருவிக புருஷன்வந் தாலுமிகவு
மாசார வுபசாரமா
யாசனந் தனிலிருந் தருளுமென் றருகிருந்
தழகான வொரு தட்டிலே
நேசமொடு தாம்பூல முதலியே யவனுடைய
நெறிகண்டு வரவழைத்து
நீரியா யந்தநாள் வந்தீர் பின்னெனை
நினைத்திலீ ரென்கோலென்று
பேசரிய சங்கீத சரசசல லாபப்ர
சங்கமொடு ரதிகேளியில
பிரியமுட னேயவனைத் தின்பமா யுசிதமே
பெற்றிப்பிரௌடை வேசையென்பார்
சயிரு பைந்துளப மாலையணி மார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௮௪)

பரத்தையரிழிவு.

விலைமாதர் வீடுசவு ளிக்கடை படுக்கையது
மேருமலை பொதுவம்பலம்
மெத்தையது சந்தியிற் பாறையவ ரங்கமோ
மேவிய படித்துறையதாம்

கலைமருவு மரைக்கு மேலாடைமா மிருகொங்கை
கடையிலெனு மிசைமபுறம
கனிவாய் பழுதாமிரு துடைகடன்னீரப பங்கல
கட்டுகத லிக்கப்பமாம
முலைமாபு வாடைக் குதிரிமையிடை யேமரியமார
மோகமென் வெட்டிக்கசி
மொழியுயற் சொம்புசே ரிணபுவெந் கீரணமை
முறைமையிவை கண்டிருந்தும
மலைவுபெறு வார்களவர் வார்த்தைகத சேயரோ
மணவாள நாராயணை
மனதிலுறை யலர்மேலு மஙகைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௮௧)

சரீரநிலையாமை.

ஆகாய மீதினி லெழிக்துசிலை காற்றினை
யடைத்துவைத் திடுதொருத்தி
யனலிட்ட மெழுகுவெயி லிடையிட்ட வெண்
ணெய்சுழி யாறிடை மெழுக்குமிழி
மோகா விகாரமொடு வருகின்ற மின்னல்விழி
மூடுதுயில கண்டகனவு
மோதிவரு காற்றினிற் றீவிழுந் திடுபஞ்சு
மூச்சோடு கின்றபதுமை
மீகாமனில்லாத கப்பலகண் ணிமைபோல்
விளக்கவரு தேகமிதனை
மெய்யென்று மெய்யெலாம் பொய்யென் றறிகிலா
விழலனெனை யாளநினைவாய்
மாகாள முகிலனைய மெய்யனே துய்யனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே
வரதவேங் கடராயனே. (௮௨)

நல்வினைசெய்வோர்பேறு.

ஓதுமா தாபிதா குருதெய்வ விசுவாச
முடனிதிபூசைசெய்வோர

நற்பர தாரசோ தரமாகு வோரகித
மொருவர்க்கு மெண்ணிலாதோர்
பூதய வுள்ளோர்சகாயமே புரிகுவார்
பொய்யிலா வாய்மையுடையோர்
பூர்வமாம் தருமபரி பாலனம் பண்ணுவோர்
பூஞ்சோலை நந்தனவனம
பாதையிடை மண்டபங் கூடந் தடாகநீர்ப்
பந்தர்முத லாய்ப்புரிகுவோர்
பண்பா யிவர்க்குமலை போல்வந்த வினையெலாம்
பனிபோல நீங்கி நலமாய்
மாதவ முகுந்தனுன் பாதமே பெறுவர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௮௭)

மாதர் அவயவமயக்கு.

சிக்குமிக வேநாறு கின்றகுழன் முகிலென்பார்
திரளுத்தை மர்றுதவாய்
செம்பவள மென்பர்சளி கொண்டுநீர் மாறாத
பறுநாசி குமிழதென்பர்
பக்குவம தன்றிவிழு கின்றமுலை யானைதோற்
பையைமக மேருவென்பர்
பாராத நாகத் துவாரமாங் குழிதனைப்
பகரின்ப வாரியென்பார்
மிக்குவரு ரத்தமுஞ் சீயுமென் புமபோர்த்த
மேனிமலர் மாலையென்பா
மீளாத நரகந் தருஞ்சிறிய வின்பமதை
பேரின்ப வீடென்பரிம்
மைக்கருங் கடலிலெனை வீழாம லாளுவாய்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௮௮)

நீதியின்பெருமை.

வித்தையே செய்திடுங் குருபீட மொன்னலரை
வென்றுவரு கின்றதளவாய்
மித்திரர்கள் பகைவரா மேவலாக னேயார
விந்தைபுரி தானைபதி
புத்திநலமேசொல்லு மதிமந்த்ரி யாவரும்
புகழ்கின்ற வசியகுளிகை
புளகமுலை மாதருக் கதிரூப வின்பந்
பொருந்தவரு காமதேனு
நித்தலும் பெருமையே செயுமரசு தான்மொழியு
நிலைசெயத் தக்கசூத்ரம்
நேர்ந்தநீதி யென்கின்ற வாதங்க கேசரி
நினைத்தவெல் லாங்கொணர்ந்தே
வைத்திடுங் குலதெய்வ நிதியன்றிவேறேது
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலுமங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (அ௬)

உயர்ந்த பொருளிருக்கு மிடத்து இழிந்த பொருளிருக்கு மெனல்.

கோகனக மலர்மலந் துறுகின்ற வாவியிற்
கொட்டியு மலர்ந்திருக்குங்
கோகிலந் தொனிசெயுந் தேமா வனந்தனிற்
கூறுவாய்ப் பக்ஷியுறையும்
ஏகமென வுலகம் புரந்தமன் னவர்சபையி
லீனமன் னருமேவுவா
ரிலகுமா ணிக்கங்கள் விற்கின்ற கடைவீதி
யிற்பாலை மணியும்விற்பார்
பாகனைய மதுரரச லளிதப்ர பந்தகவி
பாடுமன் னவர்கள்சபையில்
பழங்காடி தனிலும் புளித்தபுன் கவிசொலும்
பாவலரு முண்டுகண்டாய்

மாகனக முறையுமொரு மணியணியு மார்பனே
மணவாள நாராயணன்
மணதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௬௰)

சேர்ந்தவினத்தின் குணம்பெறுவோர்.

பெறுதோ ரிவரெனல்.

சோதி நவரத்னமணி மாலையிடைநூலுந்
துலங்குமணி யாய்விளங்குஞ்
சுரைப்பழுந் தனையுடன் சேர்ந்தசெம் பொன்னுந்
துருபபுபோ லேமிதக்கும்
வீதிபெறு குப்பையி லிருந்தாலு மாணிக்க
மெய்ம்மழுங காதொளிவிடும்
மிகவுஞ் செழுந்தேன் சொரிந்தே வளர்க்கினும்
வெள்ளுள்ளி நாற்றமாறு
தாதலாற் சேர்ந்திடு மினங்களைப் போலவே
யவனியி லிருப்பர்சிலபே
ரார்சொல் விழுந்தங்கள் சுயகுணம்விடாமலே
யமைவற்று வாழ்வர் சிலபேர்
மாதர்துகில கொண்டாரு குருந்தேறு மாயனே
மணவாள நாராயணன்
மணதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௬௧)

வல்லோர்க்கும் புல்லோரால் தாழ்வுவருமெனல்.

பாராசர் வச்ரமகுட ந்தகர்த்திடுசத்தி
பஞ்சுமெர்த்தைக்கு நாணும்
பணிராசர் மணிமுடிகள் சிதறநட மிடுதோகை
பச்சோந்தி யானடுங்கும்
காராச மார்த்தாண்ட சந்திரகிரணங்களொரு
கட்செவியி னான்மறைபடுங்
கனகைபுரி விகடதட மத்தமாதங்கமொரு
கனல்சிறிது கண்டுபயமாம

அரராச கங்காப்ர வாகநிக ருற்றுமொரு
துய்யசிலை யான்மறிபடுஞ்
சொலகின்ற பெரியோர்க ளென்றுனு மற்பாரந்
ணோக்கிகொடு முறிவர்கண்டாய்
வரராச தசரத மகாராஜ புத்ரனே
மணவாள நாராயணன்
மணதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௯௨)

நல்லோர்புகழ்நிலை பேறு.

விசயன்மனு வுடனிட்சு வாகுகுச நாபன்
விருட்சிரகு காகுஸ்தனும்
மிருமம்மரீஷன்மாந் தாதன்முசு குந்தன்
விசாலனே திரணபிந்து
சசிபிந்து வொடுதிலீ பன்னரிச் சந்திரன்
சர்வதா மன்பாதனே
சந்தனு நளன்சத்ய விரதன்ப கீரதன்
சகரனொடு தானகர்னன்
தெசரதன் புரூரவன் சென்னியே
திரிசங்கு வுடன்யயாதி
சித்திரசேனன்விர சேனன்றுது பனலிந்திர
சேனன்விதுரன்பாண்டவர்
வசிதேவ ஞாதியோர் புகழன்றி நின்றதிலை
மணவாள நாராயணன்
மணதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௯௩)

தீயோர் பழிநிலைபேறு.

சூரனொடு பானுகோ பன்றிரி புரத்திரோர்
தாரகனே மதுகைடவர்
அந்தமகிடாசுரன் சப்பர சலந்தரர்
தூஷணன் றிரிசிரகரர்

விராத வணைகும்ப கர்ணனிந் திரசித்து
மிகுகனக னிரணியாட்சன்
வெய்யவா தாபிவில் லவனுடன் சூர்ப்பணகை
மேவுராச முகிதாடகை
காருலவு சிசுபால தந்தவக் கிரர்சரா
சந்தனொ டடல்கீசகன்
சகுனி துரியோதனன் கஞ்சன்முத லாயினோர்
தங்களப கீர்த்தியல்லால்
வாரிசூழ் புவியிலவர் கொடுமைநிலைநின்றதோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௬௪

வானப்பிரஸ்தன் முதலானோரியல்பு,

ஒருபொழுது மவமே பிராமணற் கருமங்க
ளுணர்வுடன் செய்துமனையா
ளொடுகாம மின்றியுன் பாதங்கள் போற்றிவன
முறைவன்வான ப்பிரஸ்தன்
கருமமுட னுபகவற் கீதை துதிசெய்து
காமமுத லாறுமொன் றுங்
கருதாம லொருபோது சுவைநீக்கியேயுண்ட
கருணையோன் சந்நியாசி
இருவினையு மவைசெய்த துஞ்செயச் செய்வது
மின்பமுங் கனதுன்பமு
மெண்ணரிய சாதிமர பும்பலவு முன்செய்கை
யென்றெண்ணி யடிகடொழுது
வருமவனை யமதூத மெய்ஞ்ஞானி யென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (௬௫)

உத்தமர் முதலானோரியல்பு

வினையுடனன்னமுஞ் சுகமுமே ஒழுமென்னை
வித்தையுமை தன்னையறிவார்
மிருகாமை சற்பகங் கன்னன்மலர் போன்மரபு
விதமாய் விளங்கவருவார்
பனையினொடு நாளிகேரங்கமுக மென்னவே
பரிந்தவர்க் கன்புகூர்வார்
பனசமுஞ் சூதமும் பாடலமு மென்னவே
பண்பினுட னுதவிசெய்வார்
சினைமருவி னீரெழுத் தொடுமண லெழுத்துடன்
சிலையெழுத் தெனமாறுவார்
செப்புமிவர் தமையாதி யந்தமாப் பார்க்கவே
சிந்தைதனி லாய்ந்து புவிமேல்
மனிதருத் தமர்கண்மத் திமரதமர் மூவர்காண்
மணவாளநாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௯௪)

தேசங்களின் பெயர்கள்,

ஆங்கயத் திமாள வஞ்சாள வங்கேக
யாரியம் பாரசீ
மாந்திரம ராடமே கன்னட மிடங்கண
மவந்தியொடு சேதிகுருதம்
கங்கைதிகழ் காஸ்மீர மச்சங் கிராடங்
கரூசமே சூரசேனங்
கலிங்கமொடு வங்காள நேபாளசிங்களங்
கனத்ததுளு வங்கேரளம்
கொங்கணம் போடந்த்ரி கர்த்தப்புளிந்தங்
குளிந்தகிராடமகதங்
கூர்ச்சரம் பப்பரம்வி தற்பகாம்போஜநற்
கோசலஞ் சிந்துகௌடம்

வங்கமும பணிகின்ற கருடகிரி வாசனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௬௭)

தேசமுதல் அண்டமளவாக நிற்குநிலை,

ஒட்டமுறுசாதகஞ் சவ்வீரபாஞ்சால
மோங்குகிட தங்கடார
முகந்தரஞ் சோனகஞ் சீனகாந் தாரமோ
டுலாவுமலை யாளவங்கம்
இட்டமுறு த்ராவிடஞ் சோளபாண்டியமாதி
யெண்ணேழு தேசமாகி
யிலங்குபர தக்கண்டமாதிநவ கண்டங்க
ளேய்ந்தசம் புத்தீவுமே
அட்டதிசை பெற்றதீ வேழுபூ லோகமிகு
தாதிமே லேழுலோக
மதலமே யாதிகீ ழேழுலோகங்களிவை
யவையுமீ தோரண்டமாம்
மட்டிலா வண்டங்களுன் றிரு வயிற்றிலுறு
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௬௮)

பதினெண் கணங்களிவை யெனல்,

தேவருடனசுரர்கள் சித்தர்க டயித்தியர்
சிறந்திடும் புருடர்கருடர்
செய்யகந் தருவர்கின் னரிராக் கதர்பூதர்
தீதிலவே தாளர்முனிவோர்
மேவுவிஞ் சையருரக ரந்தா ரியக்கரோ
மேலுமா காச வாசர்
மிகுபோக பூமியோர் முதலாய பதினெட்டு
விதமான கணநாதரும

பூவையர்களுக்கண்டு துதிசெய்யுந்திருமலை
புகழ்ந்துகோனேரிமூழ்கிப்
போற்றியுன் சந்நிதி வணங்கியே துதியாத
புன்சனன முஞ்சனனமோ
மாவலி பணிந்தசெம் மணிமகுட பாதனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே
வரதவேங் கடராயனே. (௯௯)

பரமபாகவதராவாரெவரெனல,

சுகனொடு வியாசன் பராசரனொடு சவுனகன்
றுய்யநா ரதன்வசிட்டன்
துங்கவான் மீகிமா வலிருக்குமாங்கதன்
சுக்ரீவன் மாருதி
தகுவிடசு வாகுலீ டுமனுடன் பிரகலா
தனன்குசே லன்விஜயனே
சருமனொடு முசுகுந்த னக்குரூரன்மணி
ஜடாயுவுட னம்பரீஷன்
அகலிதிரி சடைமாது பாஞ்சாலி சபரிமூ
னழைத்திடக் கஜராஜனே
யாதிராமாநுஜன் றிருவரங் கத்தமுத
னாழ்வார்கள் பன்னிருவரும்
மகிமைபெறுமுன்றொண்டர் பாதமே துணைகொள்ளு
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௱)

அடியார்க்கு வருஞ்சிறப்பு.

உனதுபா தம்போற்று மடியார்கள் சிந்தையி
லுவந்துநீ யென்றுமுறலா
லுன்னுடைய திருமாதரென்மருஞ் சேர்வரவ
ருந்றநா னிதிகள்சேரும்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

திருவேங்கட சதகம்.

கனவிதிகள் சேர்த்திடத் தனதன்வரு வானுடன்
கருணைபுரி நேயன்வருவான்
காதலனுடுத்ததா னுமைவருவ ளன்னையாற்
கந்தன்வரு வன்மருகனல
தனதுமா மன்வருவ னரசன்வர லாலமரர்
சகலருங் கண்டுவருவார்
தருமஞ் செழிக்குமருள் செருமதுவன்றியே
தவமொன்று செயல்வேண்டுமோ
வனசரோ ருகமலர் மடந்தைவளர் களமுரின்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே. (௱௧)

அவையடக்கமும் பிரார்த்தனையும்,

ஒருமலை யெடுத்துமதை காத்தவா மனமேதல
ருபயபத சேவைதனையே
புனைகொண்டு வெண்மணியில் வாழமுத் தாமைய
ஆத்துநா ரணபாரதி
பொருமலை பொருங்கன்னை புங்காணியாறும
பொருந்துகடல் பொற்புலவர்கள்
புகழ்சபையி லெனதுவேங் கடசதக மீதெனறு
புகலவரு தூறுகவியும
பரிவினுட னிலவருநல் கேட்டியன் றமிழின்மேற்
பக்ஷமவைத் தாளவருவாய்
பாலகன் புன்சொலைக் கேட்டுமே மகிழுமவன்
பாமீதி லன்னையலவோ
வருபவர் களிகனல் வாழுமத வுநேயனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங் கடராயனே, (௱௨)

திருவேங்கடசதகம்-முற்றிற்று,